E-mail : omsakthieditorial@gmail.com
https://archive.org/search.php?query=omsakthi

ஓம் சக்தி

அக்டோபர் 2020
விலை ரூ.15

நிறுவனர் :
நா. மகாலிங்கம்



அக்டோபர் 2
அருட்செல்வரின்
6-வது ஆண்டு நினைவு தினம்

காந்தியம் இளைஞர்களுக்கே!

காந்திஜி என்றவுடன் நமது கவனத்திற்கு வருவது அவருடைய பொக்கைவாய்ச் சிரிப்பும், அரை உடம்பில் தோள்பட்டை எலும்பும் தெரிகிற காட்சியும்தான். அதேசமயம் சர்ச்சில், பிடல் காஸ்ட்ரோ, ஸ்டாலின் முதலிய தலைவர்களைப் பார்த்தால், அவர்கள் போர்க்களத்தில் உள்ள ராணுவ உடையோடுதான் தெரிவார்கள்.

உண்மையில் காந்தி 23-வது வயதில் தென்னாப்பிரிக்கா போனவர். 20 வயதில் லண்டனில் படித்தவர். அவர் இளைஞனாக இருந்தபோதுதான் அகிம்சையைப் பின்பற்றினார். சத்தியத்தைப் பேசினார். அகிம்சையும் சத்தியமும் வயோதிகர்களுக்கு உரியவை அல்ல. வாலிபர்களுக்கு உரியவை என்பதை அருட்செல்வரின் இம்மாதச் 'சுரங்கம்' வாசகர்களுக்கு நினைவூட்டும் என்பதில் சந்தேகமில்லை.

– இ.ஆர்.



காந்திஜி நூல் வெளியீட்டு விழாவில்
ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா நூலை வெளியிட, 'தி ஹிந்து'
ஆசிரியர் என். ராம் பெற்றுக் கொள்கிறார்.
அருகில் அருட்செல்வர், நீதியரசர் கற்பக விநாயகம் ஆகியோர்.

"இந்த நாள் எனது வாழ்வில் ஒரு பொன் னாளாகும். இன்று தமிழில் வெளியிடப் பெறு கின்ற 20 தொகுதிகளைக் கொண்ட மகாத்மா வின் எழுத்துக்கள் மகத்தான இலக்கியங்கள். மாபெரும் இக்களஞ்சியத்தை அழகாகவும், சிறப் பாகவும் வெளியிட்டுள்ள என் அருமை நண்பர் வர்த்தமானன் பதிப்பக உரிமையாளர் பேராசி ரியர் ஸ்ரீசந்திரன் அவர்களையும், அவரு டைய குமாரர் வர்த்தமானன் அவர்களையும் உளமாரப் பாராட்டுகிறேன்.

மேதகு தமிழக ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள், அழகிய இந்த காந்தி மண்டபத்தில் இந்த அரிய நூல்களை வெளியிடு வதற்கு வருகை தந்திருக்கிறார். அவர் விடுதலைப் போராட்ட வீரத் தியாகி. அரசியலில் பழுத்தவர். உன்னதமான காந்தியக் கோட்பாடுகளில் ஊறி யவர். இப்படிப் பல்வேறு சிறப்புகளைக் கொண்டவர்.

இந்த நூலைப் பெற்றுக்கொண்டு உரையாற்று வதற்காக வருகை தந்துள்ள நீதியரசர் கற்பகவிநாயகம், தன் வாழ்க்கையை வடிவ மைத்துத் தந்ததே காந்திஜியின் "சத்திய சோதனை"தான் என்று கூறியுள்ளவர்.



டாக்டர் நா. மகாலிங்கம்

என் அருமை நண்பரும், காந்திய வழியில் பல்லாண்டுகளாகக் கல்விப் பணியாற்றி வரும் அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகத்தின் வேந்தரு மான டாக்டர் க. குழந்தைவேல் அவர்கள், விழா வுக்குத் தலைமை தாங்குவதை, ஐயா அவிநாசி லிங்கம் அவர்களே தலைமை ஏற்று வாழ்த்துவ தாக நினைக்கிறேன்.

மகத்தான இந்தப் பணியை நான் மேற் கொண்டதில் ஒரு பின்னணி உண்டு. என் தந்தை, என் சந்ததியினர் மற்றும் நானும் காந்தியக் கொள்கைகளையே கடைப்பிடித்து வருகின்றோம்.

என்னுடைய திருமண வாழ்க்கையின் 60 ஆண்டுகள் இன்று நிறைவடைகின்றன. அது நிகழ்ந்தது இதே ஆகஸ்ட் 27, 1945–ஆம் ஆண்டு.

அதனை எப்படிக் கொண்டாடலாம் என்று யோசனை கேட்டபோது, பல பேர் பல கருத்துக் களைச் சொன்னார்கள். அந்த மகிழ்ச்சியை மேலும் இரு மடங்கு மகிழ்ச்சியாக ஆக்கும் ஒரு திட்டத்தை நான் வைத்துக் கொண்டிருந்தேன்.

நம்முடைய தேசப்பிதா காந்தியடிகள் வரலாற்றைப் பேராசிரியர் கல்கி அவர்கள் ‘‘மாந் தருள் ஒரு தெய்வம்’’ என்று எழுதியிருந்தார். தேசத்தையும், தெய்வீகத்தையும் ஒன்றாக இணைத்த அந்த மாபெரும் ஞானியின் சிந்தனை களைக் கொண்ட 17 தொகுதிகளை மீண்டும் வெளியிடுவதுதான் எனது அத்திட்டம்.

அன்றைக்கு இப்பணியை காந்தி நூல் வெளி யீட்டுக் கழகம் செய்தது. அதன் தலைவராக ஐயா திரு. தி.சு. அவிநாசிலிங்கம் அவர்களும், முதல மைச்சர் கு. காமராஜ், நிதி மந்திரி சி. சுப்பிர மணியம், உள்துறை அமைச்சர் எம். பக்தவத்சலம், கலைக்களஞ்சிய ஆசிரியர் ம.பெ. பெரியசாமித் தூரன், மு. அருணாசலம், ரா. விநாயகம், தக்கர் பாபா வித்யாலயம் லா.நா. கோபால்சாமி, நா. இராமசாமி, கோ. வெங்கடாசலபதி ஆகியோர் உறுப்பினர்களாகவும் அக்குழுவில் இருந்தனர்.

மொழிபெயர்ப்புப் பணி ஆரம்பித்த 6 ஆண்டு களில் 17 தொகுதிகள் வெளிவந்தன. வெளிவந்து 50 ஆண்டுகள் ஆகிவிட்டன.

மகாத்மாவைப் பற்றித் தற்காலத் தமிழர் மட்டும் அல்லாது எதிர்காலச் சந்ததியினரும் உணர வேண்டும். சத்தியத்தின் நிழலில் சாந்தி யோடும், சமத்துவத்தோடும் உலகம் நிலைபெற வேண்டும் என்பதே எனது நீண்ட நாள் கனவு.

எனது அந்த நெடுநாள் கனவு இன்று ஓரளவு நிறைவேறும் வகையில் மகாத்மா காந்தி நூல்கள் இரண்டாம் பதிப்பு வெளியிடப்படுகிறது.

இப்பதிப்பிற்குரிய 20 தொகுதிகளுக்குமாகப் பதிப்பகத்தாருக்கு ரூ. 10 லட்சம் நன்கொடை அளித்தேன். என்னைப் போலவே என்னுடைய உறவினர்களும், நண்பர்களும் தொடர்ந்து நன் கொடை வழங்க முன்வந்திருக்கிறார்கள். எனக்கு அது பெரிய உற்சாகத்தைத் தருகிறது.

தமிழகத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்கள் உள்ளன. உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி எனப் பல நிலைகளில் உள்ளன. இத்தொகுதிகள் அவற்றிற்குச் சென்று சேர வேண்டும் என்பதே எனது ஆசை.

நாம் எதிர்பார்க்கும் பொற்காலம் அமை வதற்கு ஒரு தூண்டுகோலாக இந்நூல்கள் இப் போது வெளியிடப்பெறுகின்றன. காந்தியத்திற்கு ஒரு மகத்தான மறுமலர்ச்சியை இத்தொகுப்புகள் உண்டாக்குவதற்குரிய காலம் கனிந்துள்ளது.

இந்த 20 நூல்களும் அசுர வித்துக்கள். நிலத் தில் விழுந்தால் நிச்சயம் முளைவிடும். பண்படுத் தப்பட்ட மண்ணில் இறைக்கப்பட்ட விதைகளைப் போல, இந்த 20 நூல்களிலுள்ள கருத்துக்களை இளைஞர்களின் மனதில் விதைக்க வேண்டும் என்பதே என் விருப்பம்.

இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர் கள். இந்த 20 நூல்களும் ஒவ்வொரு மாணவ னுக்கும் ஓர் ஆசான் போல அவர்களுக்கு வழி காட்டும் என்று உறுதியாக நம்புகிறேன். இந்த 20 நூல்களும் நம் இளைஞர்களின் மனதில் ஆன்ம பலத்தை வளர்க்கக் கூடிய சக்தி உடையவை என்பதில் சந்தேகமில்லை.


நாங்கள் எல்லாம் இளைஞர்களாக இருந்த போதுதான் காந்திஜியின் வேத வாக்குகளைக் கேட்டுக் கட்டுண்டு நின்றோம்.

விநோபாஜியின் விளக்கங்களைக் கேட்டு மனித நேயத்தின் மகத்துவத்தை அறிந்தோம்.

பொருளாதார மேதை ஜே.சி. குமரப்பா, டாக்டர் அரியநாயகம், கல்விமான் ஜாகீர் உசேன் முதலிய காந்தியத் தலைவர்களின் சிறந்த கருத் துக்கள் அன்றைய இளைஞர்களை வசப் படுத்தின.

அன்றைக்கு நாங்கள் கவரப் பட்டதைப் போலவே, இன்றைய இளைஞர்களை இந்த நூல்கள் கவரும் என்று உறுதியாக நம்புகிறேன்.

காந்தியம் ஆடம்பரத்தை அகற்றி எளிமையை ஏற்றுக் கொள்ளச் சொல்கிறது. காந்தியம் இலவசங்களைத்தான் இழிவு என்கிறது. உழைப்பையே உயர்வு என்கிறது.


மகாத்மா காந்தி

சந்தைப் பொருளாதாரத்தை காந்தியம் ஊக்குவிக்கவில்லை. அதற்கு மாறாக, ஒவ்வொரு கிராமத்தையும் காந்தியம் ஒரு ‘கிராமக் குடியரசு’ ஆக்க வேண்டும் என்கிறது. அத்தகைய காந்தியம் மனிதகுலம் முழுமைக்கும் உரியது.

மத்திய அரசு கிராமப்புறத்திலுள்ள ஏழை எளியவருக்கு 100 நாள் வேலை தரும் திட்டத்தை அறிவித்துள்ளது. இன்றைய சூழலில் அந்த அறிவிப்பு வரவேற்புக்குரியதாகும். இத்திட்டத்திற்கு “மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டம்” என்று பெயர் வைக்குமாறு மத்திய அரசை வேண்டிக் கொள்கிறேன்.

அமெரிக்காவில் அட்லாண்டா நகரத்திலுள்ள மார்ட்டின் லூதர்கிங் அவர்களின் அருங்காட்சியகத்தை இதுவரை நான் மூன்று முறை பார்த்துள்ளேன். அதுபோன்ற ஓர் அருங்காட்சியகம் டெல்லியில்கூட இல்லை.

தேசப்பிதா காந்தியடிகளுக்கு அதுபோலச் செய்திருக்க வேண்டும். முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்களின் முயற்சியால் காந்தி சமாதிக்குப் பக்கத்தில் காந்தியவாதிகள் தங்குவதற்குச் சில கட்டட வசதிகள் மட்டுமே உருவாக்கப்பட்டன. ஆனால், அருங்காட்சியகம் இல்லை.

காந்தி சமாதி ‘ராஜ்கட்’ ஒரு புனிதமான இடம். அந்த இடத்தில் தேசப்பிதாவுக்குத் திருவுருவச் சிலை இல்லை. இனியாவது அந்தச் சிலை அங்கு நிறுவப்பட வேண்டும் என்பதே என் ஆசை.

காந்தியம் என்பது இந்திய தேச விடுதலைக்காக மட்டும் கையாளப்பட்ட ஒரு வழிமுறை என்று யாரும் கருதிவிடக்கூடாது. உண்மையில், காந்தியம் என்பது பலாத்காரத்திற்கு ஒரு மாற்றுச் சிந்தனை.

காந்தியடிகள் மட்டுமே இதனைக் கையாண்டு வெற்றி பெறவில்லை. மார்ட்டின் லூதர் கிங் முதல், நெல்சன் மண்டேலா வரை எத்தனையோ உலகத் தலைவர்கள் இதனைக் கையாண்டு வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

மத்தியப் பிரதேசத்தில் சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளையர்கள் மிகவும் கொடூரமானவர்கள். லோக் நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயணன் அந்தக் கொள்ளைக்காரர்களை, ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டுப் பேச்சு வார்த்தைக்கு வருமாறு அன்புடன் அழைத்தார். அவர்கள் வரவில்லை. கொள்ளையர்களின் இடத்திற்கே ஜெ.பி. சென்றார். அவர்களோடு தங்கினார். பேசினார். முதலில் மறுத்தவர்கள் பிறகு மெல்ல மெல்ல மனமாற்றம் பெற்றார்கள்.

இதேபோலத்தான் அகிம்சை வழியில் சமாதானப் பேச்சுக்களைச் சம்பந்தப்பட்டவர்களோடு மனம் திறந்து மேற்கொண்டால், இந்தியப் பிரச்சனைகளுக்கு இலகுவாகத் தீர்வு காண முடியும்.

இன்றைய இந்தியப் பிரச்சனைகளைச் சட்டம் – ஒழுங்குப் பிரச்சனையாக மட்டுமே கருதி, அடக்குமுறையைத் தீர்வாக ஏவினால், அதன் பலன் தொடர் வன்முறையாகத்தான் இருக்கும். அப்பாவி மக்கள்தான் அதற்குப் பலியாவார்கள்.

இதனை உள்வாங்கிக் கொண்டு ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்பே திண்டுக்கல் அருகில் காந்தி கிராமப் பல்கலைக் கழகத்தை டாக்டர் இராமச்சந்திரன், டாக்டர் செளந்தரா ராமச்சந்திரன் ஆகியோர் உருவாக்கினர். அதுபோன்ற பல்கலைக்கழகப் பணிகள் நாடு முழுவதற்கும் தேவை.

காந்தியத்தின் தொழில் கொள்கை கிராமக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதுதான். அதைத்தான் பரவல்முறைப் பொருளாதாரம் என்று டாக்டர் ஜே.சி. குமரப்பா கூறினார். இன்றைக்குத் தேவை அத்தகைய பரவல்முறைப் பொருளாதாரம்தான். அதற்குத் தேவை அதிகாரக் குவியல் அல்ல, அதிகாரப் பரவல்தான்.

பரவல்முறைப் பரிபாலனத்தைப் பஞ்சாயத்திலிருந்து தொடங்குவோம்.”

●

அருட்செல்வரைப் போற்றிய 'துக்ளக்' ஆசிரியர்




'துக்ளக்' ஆசிரியர்
எஸ். குருமூர்த்தி

ச. மோகன், செங்கல்பட்டு.

கேள்வி : 'பிராமணர் குடும்பத்தில் பிறப்பதால் ஒருவர் பிராமணர் ஆகிவிட முடியாது. ஒழுக்கம், நற்பண்புகளில் உயர்ந்து விளங்குபவரே பிராமணர். அப்படிப் பார்க்கையில் காமராஜ், அம்பேத்கர் போன்றோர் பிராமணர்களே' என்று சுப்பிரமணியன் சுவாமி கூறுகிறாரே! இது சரிதானா?

பதில் : *"நான் ஏற்கவில்லை. எந்தச் சமுதாயத்தில் உயர்ந்தவர்கள் இருந்தாலும், அவர்கள் பிராமணர்கள் என்றால், பிராமணர்கள் உயர்ந்தவர்கள் என்கிற கருத்து உருவாகலாம். எல்லாச் சமுதாயத்திலும் உயர்ந்தவர்கள் இருக்கிறார்கள். என் சொந்த அனுபவம் ஒன்றைக் கூறுகிறேன். 2000–இல் கோவையில் சுதேசி இயக்கம் தொழிற்கண்காட்சி நடத்திய போது, நான் பொள்ளாச்சி என். மகாலிங்கம் காலில் விழுந்து வணங்கினேன். ஆச்சரியப்பட்ட அவரிடம், 'நீங்கள் மிகவும் உயர்ந்தவர், நாடு முழுவதும் நாத்திகப் புயல் வீசிய போது, ஆத்திக தீபத்தை அணையாமல் காப்பாற்றியவர் என்று உங்களைப் பற்றி ஒருமுறை காஞ்சி மகான் கூறினார்' என்று கூறினேன். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்பது குணத்தின் அடிப்படையிலான வித்தியாசம். ஜாதி அடிப்படையிலானதல்ல."*

●

“இப்போது எல்லாச் சமயங்களின் சாராம் சங்களையும், அதனால் பெறப்படும் நன்மைகளைப் பற்றியும் “கடவுளைக் காணோம்! தேடுவோம் வாரீர்!” என்ற தலைப்பில் தமிழில் ஒரு புத்தகம் ஏறத்தாழ எழுதி முடித்துவிட்டேன்.

இந்தப் புத்தகத்தை என் மனதில் ஆழமாக இடம் பெற்றிருக்கின்ற டாக்டர் என். மகாலிங்கம் அவர்களுக்கு அர்ப்பணிக்கிறேன். அவரோடு சேர்த்து, மதிப்பிற்குரிய ஜி.டி. நாயுடு அவர்களையும் இணைக்கிறேன்.

நான் எங்கெங்கு ஐ.பி.எஸ். பதவியில் இருந்தேனோ – மாவட்டக் கண்காணிப்பாளர், பிராந்திய டி.ஐ.ஜி., ஐ.ஜி. ஸ்தானத்தைத் தொட்டுவிட்டு,



கா. காசிம்

அருட்செல்வர் பற்றி கா. காசிம் ஐ.பி.எஸ். அவர்கள் கருத்து

மத்திய அரசில் நிதி இலாக்காவில், தேசியக் கமிட்டியிலும், அதன் பிறகு இன்னும் தொடர்ந்து, மத்திய அரசின் சிறுபான்மை அமைச்சரவையிலும் உறுப்பினராக – நான் எங்கிருந்தாலும், நான் கூப்பிட்டுச் சொல்லுவேன், “ஐயா! நான் உங்களைப் பார்க்க வருகிறேன்” என்று. அதற்கு அவர்கள், “நான் உங்களைப் பார்க்கக் காரில் ஏறிவிட்டேன்” என்று சொல்லுவார்.

உடனே நான், சம்பந்தப்பட்ட ஏரியா அதிகாரிகளை முடுக்கிவிட்டு, எங்கே வருகிறார், எந்தக் காரில் வருகிறார் என்று தெரிந்து கொள்வேன். அதே சமயத்தில் நான் இருந்து வந்த பங்களாவில் (எந்த ஊராக இருந்தாலும்) நான் என்னுடைய ஆசானாக ஏற்றுக்கொண்ட மகாலிங்கம் அவர்கள், என் வீட்டு வாசலில் இறங்கும்போது, நான் அவர்களுக்குத் தயாராக ஒரு பெரிய சால்வையை மறைத்து வைத்திருப்பேன். அவரும் ஒரு சால்வையை மறைத்து வைத்திருப்பார். என் வீட்டிற்கு வரும் மகான் ஒருவரை நான்தானே மாலை / சால்வை போட்டு வரவேற்க வேண்டும்!

இந்த முறைமையில் எங்களுக்கு அவ்வப்போது பிணக்கு ஏற்படும். ஆனால், முறைப்படி அவரிடம் கெஞ்சிக் கதறி, நான் முதலில் சால்வை போட்டு வரவேற்பேன். பிறகு எனக்குச் சால்வை போடுவார்.

நான், அவர் வீட்டுக்கோ அல்லது அவர் தங்கியிருக்கும் இடத்திற்கோ செல்லும்போது, இதேபோல் அவர் எனக்கு முதலில் சால்வை போட்டு வரவேற்பார். அவருடைய எல்லா ஸ்தாபனங்களிலும் இந்த முறைமை கடைசிவரை நீடித்தது.

கோயம்புத்தூருக்கும், ஊட்டிக்கும் செல்லும்போது (As Ooty SP) முதலிலேயே, நான் பொள்ளாச்சியில் ஐயா அவர்களைப் பார்த்துவிட்டு, கோயம்புத்தூரில் அவர்களுடைய விருந்தினர் மாளிகையில் தங்கிவிட்டு, மாலையில் ஊட்டிக்குச் செல்வேன், மாளிகையில் தங்குவேன்.

எனக்கு அவர்கள் ஒரு முன்னோடி!

ஒருமுறை, அவர் வீட்டில் அவர் முறைப் பெண்ணைச் செல்லக் கல்யாணம் செய்த போட்டோவைப் பொள்ளாச்சி வீட்டில் காண்பித்து, “இது என்னுடைய அத்தை மகள், இது ஒரு ‘செல்லக் கல்யாணம்!’ என்று சொல்லிவிட்டு, “உங்கள் சட்டம் இடம் கொடுக்குமா?” என்றார். அதற்கு நான் “செல்லக் கல்யாணம் ஆண்டவனுடைய சட்டத்திற்கு முன், எந்தச் சட்டமும் தோற்றுவிடும்” என்றேன்.

என் நெஞ்சில் காலம் காலமாக நிற்கும் பெரிய மனிதர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள். என்றென்றும் அவர் பெயர் நிற்கும்!

ஆகவேதான் வரப்போகும் புத்தகத்தை அவருக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறேன்.” •

ஜிகாத்

'ஓம் சக்தி' ஏப்ரல் 2020 இதழ் பக்கம் – 18, 'ஜிகாத்' என்று திருக்குரானில் சொல்லப்பட்டதற்கு விளக்கம் தொடர்பாக.

நான் எழுதிய "மகாபாரதத்தில், தர்மம் எதிரும் – புதிரும்" என்ற புத்தகத்தில் 'ஜிகாத்' என்பதைப்பற்றி எதையும், எந்த இடத்திலும் எழுதவோ, விளக்கமோ கொடுக்கவில்லை.

வாசகர்கள் 'ஜிகாத்' என்ற சொல்லுக்கும், அதைத் தொடர்ந்து தற்காலத்தில் பல விளக்கங்கள் சொல்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்தக் கேள்விக்கும், அதனுடைய விளக்கத்திற்கும் – எனக்கும், என் புத்தகத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

ஆகவே, நான் இந்த வினாவிற்கு விளக்கம் சொல்லாமல், ஆனால் என்னுடைய முறையில், என் கருத்தை நான் கீழ்க்கண்டவாறு சொல்கிறேன் :

'இஸ்லாம்' என்ற அரபு வார்த்தைக்கு 'அமைதி' என்றும், 'சமாதானம்' என்றும் பொருள்படும். ஒருவரையொருவர் சந்திக்கும்போது முதலாமவர் "சலாம் அலைக்கும்" என்று இரண்டாமவரிடம் சொல்லுவார். அதற்குப் பொருள் "தங்களுக்கு அமைதி உண்டாகட்டும்" என்பதாகும். இதற்கு இரண்டாமவர் "வ அலைக்கும் சலாம்" என்று பதிலுக்குச் சொல்லுவார். இதற்குப் பொருள் "தங்களிடமும் அவ்வாறே அமைதி உண்டாகட்டும்" என்பதாகும். இஸ்லாத்தின் அடிப்படைத் தத்துவமே "அமைதியும், சமாதானமும்" ஆகும்.

நான் ஒரு சரித்திர, அரசியல் பேராசிரியர். என்னுடைய மேற்படிப்பு முழுவதும் கிருத்துவக் கல்லூரிகளிலே. இப்போது வெளிநாடுகளுக்குச் சென்று, பிரபலமான கல்லூரிகளில் பல தலைப்புகளில் சொற்பொழிவாற்றி வருகிறேன்.

வாசகர் ஒருவர் "ஓம் சக்தி"யில் 'ஜிகாத்' என்பதைப் பற்றிய கேள்வியை எழுப்பியதால், நான் ஒரு வரியில் என் பதிலைச் சொல்லுகிறேன்.

"இஸ்லாம் மார்க்கத்தை (மதத்தைப்) பரப்புவதற்குச் செய்யப்படும் போர்" என்பது அதன் பொருள். (இஸ்லாத்தைப் பற்றி, குரானில் Sura ix-5, 6–இல் சொல்லப்பட்டிருக்கிறது).

இந்தக் கருத்துக்கும், எனக்கும் (கா. காசிம், ஐ.பி.எஸ்.) நூற்றுக்கு நூறு உடன்பாடு இல்லை.

எனக்கு ஒன்று தோன்றுகிறது! இஸ்லாத்தில் நிறைய நியாயமான அறிவுரைகளும், இனிமையான பழக்கவழக்கங்களும், நேர்மையான ஒழுக்க ரீதிகளும் – 'ஸக்காத்' என்ற பெயரில் வருமானத்தில் 2 % ரம்ஜான் மாதத்தில் ஏழை, எளியவர்களுக்குக் கண்டிப்பாகத் தர்மம் செய்ய வேண்டும்.

இது போக, அவசியமான தேவைகளுக்கு (படிப்பு, திருமணம் செய்தல் முதலியவை) உதவி செய்தல், 'சதக்கா, கதியா' என்ற பெயர் கொண்ட வேறு விதமான தர்மங்கள் செய்தலும், ஆறு நேரத் தொழுகையும் (5 + 1), அதன் மூலம் பெறக்கூடிய முழுவதுமாக உடற்பயிற்சியும், உள்ளத்தெழுச்சியும் பெறுகின்றபோது, இங்கே சொல்லப்பட்ட 'ஜிகாத்' (சமயத்தைப் பரப்பச் செய்யப்படும் போர்) என்ற வார்த்தை எப்படி 'குரானில்' சொல்லப்பட்டிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. ஒருக்கால் இது இடைச்செருகலாக இருக்கலாம் அல்லது யாரோ ஒருவர், ஏதோ ஒரு காரணத்திற்காகச் சொல்லி இருக்கலாம்.

'ஜிகாத்' என்று சொல்லும்போது சண்டைகளும், சச்சரவுகளும் (போர்), முஹம்மது (ஸல்) அவர்கள், மெக்காவிலிருந்து மெதினாவிற்குச் சென்ற பிறகு, அங்கிருப்பவர்களின் ஆதரவைப் பெற்று, மெதினாவைச் சுற்றியிருந்த பகுதிகளை வென்றதால், அவரை அதுவரை பின்பற்றியோர் எல்லாப் பகுதிகளிலும் இஸ்லாத்தைப் பரப்ப வேண்டிய நோக்கத்துடன் 'ஜிகாத்' செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கலாம்.

இப்போது இஸ்லாத்தில் சிலர் 'ஜிகாத்' என்பதற்கு வெவ்வேறு அர்த்தங்களைச் சொல்லுவது எனக்குச் சரியாகப் படவில்லை."

– **கா. காசிம்,** ஐ.பி.எஸ்.



சொ.சொ.மீ. சுந்தரம்

தீவினை மாற்றும் திருமந்திரம் 12

உலகத்தில் நாம் பெறக்கூடிய செல்வங்களில் மிகச் சிறந்தது மக்கட் செல்வமேயாகும். இயற்கை அளிக்கும் எல்லாவற்றிலும் குழந்தையைவிட இன்பம் தருவது எதுவுமில்லை. நளவெண்பாவில்,

> "பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்று
> என்னுடைய ரேனும் உடையரோ – இன்னடிசில்
> புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
> மக்களைஇங் கில்லா தவர்"

என்கிறார் புகழேந்திப் புலவர்.

குழந்தைகள் இல்லையென்றால் உலகம் துன்பம் நிறைந்தது. முதியவர்கள் இல்லையென்றால் உலகம் மனித இயல்பற்றது என்று மேல்நாட்டறிஞர் கோல்ரிட்ஜ் குறிப்பிடுகிறார். முதுமை வந்ததும் சிறுபிள்ளைத்தனம் வந்துவிடும் என்று சிலபேர் கூறுகிறார்கள். இது உண்மை இல்லை. முதுமை வந்ததும் மிகச்சிறந்த குழந்தை உள்ளம் வந்துவிடும் என்பதே உண்மை.

குழந்தையைத் தூக்கிவைத்துக் கொண்டால் கை நோகிறது. அதைக் கீழே இறக்கினால் மனம் நோகிறது. குழந்தையே தெய்வத் திருமேனி. குழந்தையே மானிட வாழ்க்கையின் சங்கிலிக் கோர்வை. குழந்தையின் பேச்சு, புண்பட்ட உள்ளத்திற்கு மருந்து. உண்மையில் குழந்தைதான் மனிதனின் தந்தை. இல்லறம் நடத்துவதே மிக நல்ல மக்களைப் பெறுவதற்காகத்தான் என்பதை உணர்த்த வந்த திருவள்ளுவர்,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் / நன்கலம் நன்மக்கட் பேறு" (60), என்றும், "பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த / மக்கட்பேறு அல்ல பிற" என்றும் பாடினார்.

மகாத்மா காந்தியடிகள், "முதல் ஐந்து வயதில் கற்றுக் கொள்ளாததைக் குழந்தை பிற்காலத்தில் கற்றுக் கொள்வதேயில்லை. தாயின் கருவில் இருக்கும்போதே, குழந்தையின் படிப்புத் தொடங்கிவிடுகிறது. கருத்தரிக்கும் நேரத்தில் பெற்றோர்களின் உடல்நிலையும், மனோநிலையும் அப்படியே குழந்தைகளிடம் பிரதிபலிக்கின்றன. பின்னர் கர்ப்பக்காலத்தில் தாயின் மனோநிலை, ஆசா பாசங்கள், வாழ்க்கை முறை இவற்றினாலும் குழந்தை பாதிக்கப் படுகிறது" என்று குறிப்பிடுகிறார்.



திருமூலர்

சமுதாயம் வாழ, தான் வாழ்ந்த பெருஞ்சித்தரான திருமூலர், பலநூறு ஆண்டுகளுக்கு முன்னால், நல்ல குழந்தைகள் பிறந்து நீண்ட காலம் அவர்கள் உடல் நலத்துடன் அறிவறிந்த மக்களாக வாழ்வதற்குத் தாயும், தந்தையுமே காரணம்

தொடர்ச்சி : 43-ம் பக்கம்

கட்டுரை

19

பழகிப் பார்த்ததில் இவர்கள்...

அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம்



ஒன்பதாம் வகுப்பு மாணவனாக இருந்தபோது ஊரெங்கும் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டி ஒன்று என் கவனத்தை ஈர்த்தது. அது ஒரு கவியரங்கம் பற்றிய அறிவிப்பு. அருட்செல்வர் மணிவிழாக் கவியரங்கம் என்று தலைப்பு இடப்பட்டு இருந்தது.

பாவலர் நா.முத்துசாமி தலைமையில் கவிஞர் அரசு மணிமேகலை, கவிஞர் வைரமுத்து, கவிஞர் முத்துராமலிங்கம் உள்ளிட்ட பல கவிஞர்கள் பங்கேற்கும் கவியரங்கம் அது.



மரபின் மைந்தன் முத்தையா

கோவை பிரசிடெண்ட் ஹால் அரங்கில் காலை வேளையில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சிக்கு மிகவும் உற்சாகமாகப் புறப்பட்டுப் போனேன்.

அன்று நான் அணிந்திருந்த சிகப்பு வண்ண முழுக்கை டி-சர்ட் இன்றும் என் நினைவில் இருக்கிறது. அதற்கு முன்னர் கம்பன் விழாக் கவியரங்குகளைக் கண்டிருந்தபோதும் அனேகமாக நான் பார்த்த முதல் பொதுக் கவியரங்கம் அதுதான்.

கவியரங்கத் தலைவர் பாவலர் முத்துசாமி அப்போது திட்டக்குழுத் துணைத் தலைவராக இருந்தார். கவிஞர் அரசு மணிமேகலை தலைவர் வணக்கம் பாடும்போது "அழைப்பிதழ் பார்த்த ஓர் அன்பர் கேட்டார், திட்டவே ஒரு குழுவா" என்று சிரித்துக் கொண்டே சீண்டியதும் "எனக்கு மாமியார் இல்லாத

குறையை மணி மேகலை தீர்த்தார்” என்று கவியரங்கத் தலைவர் பதில் சொன்னதும் சுவார சியம் கூட்டின.

முழுக்கைச் சட்டையும் கால் சட் டையுமாக வந்திருந்த கவிஞர் வைர முத்து, அருட்செல்வரின் இளமையைப் பார்த்து "ஆயிரம் அவ்வைகளை ஆதரித்த அதியமான் தானே நீங்கள். நிஜத்தைச் சொல்லுங்கள், நெல்லிக் கனியை நீங்களே புசித்து விட்டீர்களா" என்று கேட்டபோது அவை கரவொலி யிலதிர்ந்தது.

அப்போதுதான் அருட்செல்வர் அவர்களைத் தூரத்திலிருந்து முதன் முறையாகப் பார்க்கிறேன். பரந்து விரிந்த அந்தப் பண்பாட்டின் ஆலமர நிழலில் நான் அடிக்கடி இளைப்பாறப் போகி றேன் என அப்போது தெரிந்திருக்க வில்லை.

சில ஆண்டுகள் சென்றன. இப்போது நான் கல்லூரி மாணவன். உள்ளூர் இலக்கிய மேடைகளில் ஓரளவு அறிமுகமாகிக் கொண்டிருந்தேன்.

திரு. சுகிசிவம் அவர்கள் இல்லத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, அவருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. எடுத்துப் பேசியவர் சட் டென்று என் பக்கம் பார்வையைப் பரப்பியபடி “ஆமாம்” என்பார். பிறகு "இங்கே தான் இருக்கிறார், பேசச் சொல் கிறேன்" என்று சொல்லிவிட்டு என்னி டம் ஒலிவாங்கியைக் கொடுத்தார்.

எதிர்முனையில் கவிஞர் பெ. சிதம்பரநாதன். சென்னையில் இராம லிங்கர் பணிமன்றம் வெள்ளிவிழாக் கவியரங்கில் கலந்துகொண்டு கவிதை பாட அழைத்தார். அருட்செல்வர் முன் னிலையில் ஏறிய முதல் மேடை அது. அவருக்கு வணக்கம் சொல்லும் விதமாக

"மேல்சட்டை அணிந்திருக்கும் மகாத்மாவாக

மன்றத்தில் அமர்ந்திருக்கும் அருட்செல்வர்க்கு

கால்சட்டைக் கவிஞன் நான் வணக்கம் சொன்னேன்"

என்று பாடிய வரிகள் என் நினைவில் இருக்கின்றன. அதன்பின்னர் பல பொது நிகழ்வுகளில் அவருடன் தொடர்புகள் தொடர்ந்தன.

‘ஞான பரம்பரை’ என்னும் நூல் வரிசையில் அருளாளர்கள் வாழ்வையும் பங்களிப்பையும் அருட்செல்வர் அவர்கள் பதிவுசெய்ய முற்பட்டபோது, பலரையும் கொண்டு ஒவ்வோர் அரு ளாளர் குறித்தும் எழுத வைத்தார். அப் பணியை டாக்டர் ம.ரா.போ குருசாமி அவர்கள் ஒருங்கிணைத்தார்.

அந்த வரிசையில் திருஞான சம்பந்தர் குறித்து எழுதுமாறு நான் பணிக்கப்பட்டேன். அருட்செல்வர் நடத்திவந்த இராமலிங்கர் பணிமன்றம் விழாக்கள், தேவார திவ்யப்பிரபந்த இசைக்கலை விழாக்கள் ஆகியவற்றில் தொடர்ந்து உரை நிகழ்த்தும் வாய்ப்பு கள் அமைந்தன.

அதன் பின்னர் அருட்செல்வர் நிகழ்த்தும் பிரத்தியேகக் கலந்தாய்வுக் கூட்டங்கள், சந்திப்புகள் முதலியவற் றுக்கு எல்லாம் நான் தொடர்ந்து அழைக்கப்பட்டேன்.

வாஜ்பாய் அவர்களுக்கு அருட் செல்வர் வழங்கிய வரவேற்புத் தொடங்கிப் பற்பல பிரத்தியேக நிகழ்வு களை நினைவுகூரலாம்.

ஒருமுறை சென்னையில் இராம லிங்கர் பணிமன்றம் நடத்திய வள்ள லார் – காந்தி விழாவில் கவிஞர் இளந் தேவன் தலைமையில் கவியரங்கம் நடந் தது. அதன்பின் வழக்கம்போல அருட் செல்வர் மாளிகையில் கவிஞர்களுக்கு விருந்து.

சில கவிஞர்களுடன் அவர்தம் குடும்பத்தினர் ஓரிருவர் வந்ததால் வரவேற்புக் கூடத்தில் இருக்கைகள் போதவில்லை. வரவேற்புக் கூடத் திற்குள் நுழையத் தானியங்கிக் கதவுகள் அமைக்கப்பட்டிருக்கும். அருட்செல்வர் இந்தக் கதவைத் திறந்து கொண்டு வெளியே போனார். அங்கே கதவில் உள்ளேஇருந்து வெளியே பார்க்கவும்,

வெளியிலிருந்து உள்ளே பார்க்கவும் ஒரு சிறு கண்ணாடி இருக்கும். சில நிமிடங்கள் கழித்து அந்தக் கண்ணாடி வழியே பார்த்ததும் அதிர்ந்து போனேன்.

அருட்செல்வர் அந்தக் கதவைத் தன் தோள்களால் தள்ளித் திறந்த வண்ணம் இரண்டு நாற்காலிகளைத் தன் கைகளால் எடுத்துக்கொண்டு உள்ளே நுழைய முயற்சி செய்து கொண்டிருந்தார்.

வெளியில் உதவியாளர்கள் இல்லாத நிலையில் விருந்தினர்களை உதவிக்கு அழைக்க மனம் வராமல், அவராக நாற்காலிகளைத் தூக்கி வர முற்பட்டது இன்று நினைத்தாலும் சிலிர்ப்பும் நெகிழ்வும் தரும் சம்பவம் ஆகும்.

ஒரு மேடையில் எதேச்சையாக பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்களும் அருட்செல்வரும் கலந்துகொண்ட நிகழ்ச்சி ஒன்றில் நானும் இருந்தேன்.

அடிகளார், அருட்செல்வரிடம் "உங்களுக்குத் தெரியுமா? முத்தையா, திருக்கடவூர் கனகசபைப் பிள்ளை பேரன்" என்றதும் அருட்செல்வர் முகம் மேலும் மலர்ந்தது.

"இத்தனை நாள் சொல்லவே இல்லையே" என்றார். அப்போதுதான் என் பாட்டனாருக்கும் அவருக்கும் இருந்த நட்பு எனக்குத் தெரியவந்தது.

என் பொதுவாழ்வில் நான் அவ்வப்போது நினைத்துப் பார்த்துப் பெரிதும் மகிழக்கூடிய அங்கீகாரங்கள் சில உண்டு. அவற்றில் ஒன்று சில முக்கிய நிகழ்வுகளை யாரைக் கொண்டு செய்விக்கலாம் என அருட்செல்வரிடம் கேட்ட போதெல்லாம், அவர் என் பெயரைச் சொல்லியிருக்கிறார் என்பதுதான்.

அகில இந்திய வானொலியில் ஒரு நாளைக்கு ஒன்றரை மணி நேரங்கள் வீதம் 4 நாட்கள் அருட்செல்வரின் வாழ்வில் முக்கிய நிகழ்வுகள் அனைத்தையும் பதிவு செய்வதற்காக ஒரு தொடர் நேர்காணல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்கள்.

அந்த நேர்காணலை யாரைக் கொண்டு மேற்கொள்ளலாம் என அருட்செல்வரிடம் கேட்டபோது, அவர் என் பெயரைச் சொல்லியிருக்கிறார். அந்த நேர்காணலும் நடந்தது.

அருட்செல்வர் பத்மபூஷன் விருது பெற்றபோது, நிறுவனங்கள் சார்பில் அவருக்கு ஒரு பாராட்டு விழா நடந்தது. கோவை வெங்கடலட்சுமி திருமண மண்டபத்தில் நடந்த அந்தப் பாராட்டு விழாவிற்கு நிறுவனத்திற்கு வெளியே இருந்து ஒரு பேச்சாளர் சிறப்புரை ஆற்ற அழைக்கப்பட வேண்டும் என்ற போதும் அருட்செல்வர் என் பெயரைச் சொல்லியிருக்கிறார்.

அவர் வாழ்நாளில் அவரைப் பற்றி வெளிவந்த கடைசி நூல் டைம்ஸ் ஆஃப் இந்தியா நிறுவனத்தால் வெளியிடப்பட்ட 'Business Mahamanthras' எனும் நூலின் தமிழாக்கம்.

யாரைக் கொண்டு அந்தத் தமிழாக்கத்தைச் செய்விக்கலாம் எனக் கோவை சேம்பர் ஆஃப் காமர்ஸ் அமைப்பினர் அருட்செல்வரிடம் வினவியபோது, அருட்செல்வர் என் பெயரைச் சொன்னார். அந்த நூலும் வெளிவந்தது.

அவர் சொல்லி நான் நிறைவேற்றாமல் விட்ட பணி ஒன்று உள்ளது. கோவை கங்கா மருத்துவமனையின் உருவாக்கம் குறித்து 'ஓர் அன்னையின் கனவு' என்ற தலைப்பில் நான் எழுதிய நூலைப் பார்த்துவிட்டு அருட்செல்வர், "என்னுடைய அம்மா ருக்மணி அம்மையார் பற்றியும் இப்படி ஒரு நூல் எழுதுங்கள்" என்றார். அதற்கான பணிகளை மேற்கொள்வதற்கு முன்பாக அவர் மறைந்தார்.

எவரோடும் எளிதில் பழகிவிடும் இயல்பு கொண்டவர் அருட்செல்வர். முன்பின் தெரியாதவர்களுக்குக் கூட, தேவைப்படும் உதவியை உடனே செய்யக்கூடிய முனைப்பு உள்ள பேருள்ளம் அவரின் உள்ளம்.

அவர் மறைவதற்குச் சில மாதங்கள் முன்பாகப் பொள்ளாச்சிக்கு வரச் சொல்லியிருந்தார். என் நண்பர் குணசேகரன் என்னோடு வந்திருந்தார்.

அவர் விபத்தில் ஒரு கரத்தை இழந்தவர். அறிமுகம் முடிந்து உரையாடல் தொடங்கியது.

சில நிமிடங்கள் சென்றபின் அருட் செல்வர் குணசேகரனைப் பார்த்துத் தன் தோள்பட்டையில் கை வைத்து "ஆக்சிடெண்ட்டா?" என்று வினவினார்.

பிறகு மற்ற விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தோம். சில நிமிடங்கள் கழித்து விபத்து எப்படி நிகழ்ந்தது என்று கேட்டறிந்தார். மீண்டும் மற்ற விஷயங்களைப் பேசத் தொடங்கினார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு செயற் கைக் கரம் வைப்பது பற்றி ஆலோசனை வழங்கினார். "நீங்கள் வைத்துக்கொள்ள விரும்பினால், நான் ஏற்பாடு செய் கிறேன்" என்றார்


அதற்கான முயற்சியைத் தான் மேற் கொண்டதாகவும் அது சரியாக வர வில்லை என்றும் குணசேகரன் சொன்ன பிறகுதான் அருட்செல்வர் அமைதி அடைந்தார். சந்தித்துச் சில நிமிடங் களே ஆன ஒருவருக்குத் தாமாக உதவ முன்வரும் பாங்கு அவருக்கே உரியது.

நான் பாரீஸுக்குச் சென்றிருந்த போது அங்கே சன்மார்க்க அன்பர் ஒரு வரைச் சந்தித்தேன். சன்மார்க்கி என்ற வகையில் அருட்செல்வருடன் அவ ருக்குத் தொடர்பு உண்டு. பாரிஸ் நகரில் பயன்பாட்டில் இல்லாமல் கைவிடப் பட்ட கோட்டைகள் நிறைய உண்டு.

அப்படி ஒரு கோட்டையைத் தேர்ந் தெடுத்து அதனை வள்ளலார் கோட்ட மாக அமைத்தால், அதற்குத் தான் உதவு வதாக அருட்செல்வர் சொன்னாராம்.

தேசத்தின் மேம்பாட்டுக்காக எத் தனையோ வளர்ச்சித் திட்டங்கள் நடை முறையில் உள்ளன. அவற்றைக்கூட முற்றிலும் புதிய கோணத்தில் அணுகிய அரிய சிந்தனையாளர் அருட்செல்வர்.

ஒருமுறை அவரிடம் பேசிக் கொண் டிருந்தபோது மரங்கள் வளர்ப்புப் பற்றிப் பேச்சு வந்தது. "சாலையோரங் களில் எல்லாம் நிறைய மரங்கள் நட வேண்டும். இது நல்ல திட்டம்தான்.



அருட்செல்வர் கைப்பட எழுதிய 'திருக்கடவூர்' நூல் பற்றிய குறிப்புகள்

ஆனால், சாலை விரிவாக்கத்திற்கு இடையூறு என்று சொல்லி அரசாங் கமே மரங்களை அகற்றும் நிலைக்குத் தள்ளப்படுகிறது.

நம் தேசத்தில் இருக்கும் காப்பி எஸ் டேட்டுகள், டீ எஸ்டேட்டுகளை எல் லாம் மரங்கள் வளர்க்கப் பயன்படுத்த வேண்டும். காப்பி வேண்டுமானால் சுக்குக் காபி போட்டுக் குடித்துக் கொள்ளலாம்" என்றார். "வெள்ளையர் களின் வருகைவரை நம் நாட்டில் காப்பி கிடையாது. பின்னர் பழகிக் கொண் டதுதானே" என்றார்.

என்னுடைய ஐம்பதாவது நூல் 'திருக்கடவூர்' என்ற தலைப்பில் எழுதப் பட்டது. அதன் வெளியீட்டு விழாவிற்கு அருட்செல்வர் அவர்களைத் தலைமை தாங்க அழைத்திருந்தேன்.

நூலை முழுமையாகப் படித்து விட்டுத் தன் கைப்பட அந்த நூலில் இருந்து தான் மேற்கோள் காட்டிப் பேச வேண்டிய 17 குறிப்புகளை ஒரு காகிதத் தில் அவர் எழுதிக் கொண்டு வந்திருந்தார்.

மேடையில் அருகில் இருந்து அதனைக் கவனித்துக் கொண்டிருந்த நான், விழா முடிந்ததும் அந்தக் குறிப்பு களைக் கேட்டுப் பெற்றேன். இன்றளவும் என் பாதுகாப்புப் பெட்டகத்தில் அந்தக் குறிப்புகள் உள்ளன.

அருட்செல்வர் அவர்கள் மறைந்த போது நான் மலேசியாவில் மாண்புமிகு

அமைச்சர் டத்தோ ஸ்ரீசரவணன் அவர்களுடன் அவருடைய தாப்பா தொகுதி ஆலயத்தில் நவராத்திரி விழாவில் உரையாற்றிக் கொண்டிருந்தேன்.

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் என்னைத் தொடர்பு கொண்டு விவரம் தெரிவிக்க முற்பட்டார். திரு. வி.பி. குமார் அமைச்சரைத் தொலைபேசியில் அழைத்த வண்ணம் இருந்தார். விழா முடிந்த பின்பே விவரம் தெரிந்தது.

உடனடியாக மலேசியாவிலிருந்து திரும்ப முடியாத சூழல்.

ஆனால் சென்னையில் இருந்து அவருடைய நல்லுடல் பொள்ளாச்சி வந்து சேரும் முன்பே என்னுடைய அஞ்சலிக் கவிதை மின்னஞ்சல் வழியே அவரது நிறுவனத்தை எட்டியது.

பின்னர் கோவையில் அவருக்கு நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் பத்மஸ்ரீ அவ்வை நடராசன், திரு. ஏ.வி. வரதராஜன், கவிப்பேரரசு வைரமுத்து, நான் ஆகியோர் கலந்து கொண்டோம். அந்தக் கவிதையை அப்போது மேடையிலும் வாசித்தேன்.

கலங்கரை விளக்கம் எங்கே?
கல்வியின் கனிவு எங்கே?
உலகுக்குத் தமிழர் மேன்மை
உயர்த்திய செம்மல் எங்கே?
குலவிடும் காந்தீயத்தின்
குன்றத்து தீபம் எங்கே?
மலையென நிமிர்ந்த எங்கள்
மகாலிங்க வள்ளல் எங்கே?

என்னென்ன தொழிற்கூடங்கள்
எத்தனை கல்விச் சாலை
பொன்பொருள் வாரித் தந்த
பெற்றிக்கோ எல்லை இல்லை
மன்னர்க்கும் மன்ன ராக
மண்மிசை ஒருவர் வாழ்ந்தார்
அன்னவர் அருட்செல் வர்தான்
அவருக்கு நிகரே இல்லை

வித்தகத் தலைவர் போனார்
வள்ளலே போனார் – அந்தோ
புத்தகப் பிரியர் போனார்
புண்ணியத் தொண்டர் போனார்
சித்திவளாகத் துக்கோ
செம்மாந்த பிள்ளை போனார்
எத்தனை சொன்னால் என்ன?
“இனிவாரோம்” என்று போனார்

வெள்ளாடை பாலாய் மின்னும்
வெளிச்சமோ கண்ணில் துள்ளும்
தள்ளாத வயதில் கூட
திடமான சிந்தை தோன்றும்
கொள்ளாத நலன்கள் இல்லை;
கொடுக்காத கொடைகள் இல்லை
பொள்ளாச்சி என்றால் எங்கள்
பெருந்தகை நினைவே தோன்றும்

எண்ணம் போல் வாழ்க்கை இங்கே
எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை
மண்நலம் தேடுவோர்க்கோ
மனைநலம் அமைவதில்லை
பண்புறு குடும்பம் செல்வம்
பெருகிடும் தொழில்கள் கீர்த்தி
எண்ணம் போல் அடைந்த வள்ளல்
இறப்பையும் அது போல் பெற்றார்

இணையிலாத் தலைவர் எங்கே?
இயக்கங்கள் ஏங்கித் தேடும்
கணையிலா வில்லைப் போலே
காந்தீயம் வருந்தி வாடும்
துணைபுரி வள்ளல் இன்றி
தொண்டர்கள் திரளும் தேம்பும்
அணைந்திடா தீபம் போலே
அருட்செல்வர் பெருமை வாழும்

ஆதிநாள் மனிதர் தொட்டு
ஆனநல் பரிணாமங்கள்
ஓதியும் உணர்ந்தும் சொல்லும்
உயர்பெரும் அறிஞர் – தெய்வ
சோதியில் ஒளித்தார் தூய
செயல்களால் நிலைத்தார் – இந்த
மேதினி உளநாள் மட்டும்
மகாலிங்கர் நாமம் வாழ்க!



முனைவர் பாலகுருசாமி
முன்னாள் துணைவேந்தர்

மும்மொழிக் கொள்கையை அமல்படுத்தா விட்டால்...

"மும்மொழிக் கல்வியை அமல்படுத்தா விட்டால், தமிழக மக்களுக்கு அது வேதனை தருவதாக இருக்கும். தமிழக மாணவர்கள் கடுமையாகப் பாதிக்கப் படுவர்.

தமிழக கிராமப்புற ஏழை மாணவர்களுக்கும், அரசுப் பள்ளி மாணவர்களுக்கும், மும்மொழிக் கொள்கை பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், இருமொழிக் கொள்கையே அவர்களுக்குச் சிறந்தது என்றும் வாதம் செய்கின்றனர்.

இந்தியாவிலேயே தமிழக மாணவர்கள் மட்டுமே, தமிழைத் தவிர வேறு ஓர் இந்திய மொழியைக் கற்றுக் கொள்ள முடியாமல், 50 ஆண்டுகளாகத் தவிக்கின்றனர்.

பல்வேறு கிராமங்கள் மற்றும் நகரங்களில் வசிக்கும் வசதி படைத்த மாணவர்கள், சி.பி.எஸ்.இ. பாடத் திட்டத்திலும், வேறு பாடத் திட்டத் தனியார் பள்ளிகளிலும் சேர்கின்றனர். **அங்கு அவர்கள், தாங்கள் விரும்பும் கூடுதல் மொழியைக் கற்கின்றனர்.**

மும்மொழிக் கொள்கையை எதிர்க்கும் அரசியல் கட்சித் தலைவர்களின் பிள்ளைகளும், பேரப் பிள்ளைகளும் மூன்று மொழிகளில் படித்துள்ளனர்.

பல அரசியல் கட்சித் தலைவர்கள் நடத்தும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் இந்தி கட்டாய மொழியாக உள்ளது.

இந்தியை மட்டுமே படிக்க வேண்டும் என்று புதிய கல்விக் கொள்கை கூறவில்லை. அதிகம் பேர் பேசும் இந்தியையும் படிக்க இது வாய்ப்பளிக்கிறது. இளைஞர்களுக்கு எண்ணற்ற பலன்கள் கிடைக்கும். அனைவருக்கும் தேசப் பற்று மேலோங்கும்.

மத்திய அரசுத் துறைகள், பாதுகாப்புத் துறைகள் பன்னாட்டு நிறுவனங்களில் பல்வேறு மாநில மக்களைப் பணியமர்த்திக் கொள்ளலாம்.

இந்தி நமது நாட்டின் அலுவல் மொழி. அதே நேரம், வணிக மொழியாகவும் உள்ளது. இதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

முன்னாள் முதல்வர் அண்ணா 1968–இல் இருமொழிக் கொள்கையை உருவாக்கி, 50 ஆண்டுகளைத் தாண்டி விட்டது.

அண்ணா இருந்திருந்தால், தற்போதைய சூழலுக்கு ஏற்ப மொழிக் கொள்கையை மாற்றியிருப்பார்.

உலகம் எல்லையற்றதாக விரிந்துள்ளது. வணிகம், வியாபாரம், தொழில், கலாசாரம் எனப் பல துறைகளிலும் எண்ணற்ற மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

'**மொழியைக் கற்றுக் கொள்ளுங்கள். அதனால் ஒரு போரையே தவிர்க்க முடியும்**' என்பது பிரபலமான அரேபியப் பழமொழி.

கூடுதலாக ஒரு மொழியை நம் மாணவர்கள் கற்க ஏன் வாய்ப்பு வழங்கக் கூடாது என்பதை ஆய்வு செய்து, சிறந்த முடிவெடுங்கள்."

தமிழ்வேறு தான்வேறு என்று இருந்த நிலை மாற்றித் தானே தமிழாகக் கனன்றெழுந்த வரலாறு பாரதியினுடையது. அதனால்தான்,

"என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்
தமிழால், பாரதி தகுதி பெற்றதும்
தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்
எவ்வாறு என்பதை"

பாரதிதாசன் விளக்கிப் பலபடப் பாடுவார்; புகழ்படப் பேசுவார்.

'நெற்றிக்கண்ணுடைய சிவபெருமானும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் புலவராய் வீற்றிருந்து ஆராய்ந்து பேணிய பசுந்தமிழ்' என்று திருவிளையாடற் புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவர் பாடுவார்.



''பசி ஏற்பட்டபோது உணவு கிடைத்தது என்று சொல்லும்படியாகத் தமிழ்நாட்டில் தமிழ் நிலை குன்றியிருக்குங்கால், அறிஞர்கள் எதிர் பார்த்தபடி பாரதியார் தமிழர்களிடையே தோன்றினார். தமிழின் ஆதிகால இடைக்கால நிலைகள் வெவ்வேறாயிருந்தன. கடைக்கால நிலையும் மாறுபட்டே இருந்தது. ஆனால், கடைக்காலத்தில் தமிழுலகம் பாரதி தேவை தேவை என்று கதறிற்று.'' இது செட்டிநாட்டுக் கோட்டையூரில் பாரதிதாசன் (16.06.1940ல்) பேசியது.


அதன் மேல்விளக்கம்போல, திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் (1946–இல்) பாரதி குறித்த கவியரங்கத்தின் தலைமையேற்று அவர் கவிதையும் பாடினார். அதில் வாழையடி வாழையென பாரதி வந்த வழித்தடம் தெரிகிறது; அவர் நின்ற செயல்தளம் புரிகிறது.

சிறுவன் பாரதி செப்பிய அருள்நெறி



''கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடு அமர்ந்து, பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ் என்றதனால், சிவபெருமான் கூடச் சங்கத்தில் ஒரு மெம்பராக இருந்து தமிழை ஆய்ந்ததாகத் தெரிகிறது. இதிலிருந்து சிவபெருமானுக்கு முன்னாலேயே, தமிழும் தமிழரும் இருந்தார்கள் என்று சொல்ல வேண்டும்'' என்று பேசுகிற பாரதிதாசன், பாரதியார் என்ற பெயர்ச்சொல்லை, 'பாரதி யார்?' எனப் பிரித்து வினவிப் பின்வருமாறு விளக்கம் சொல்கிறார்.

"கொலைமலிந்த நாளில்
கொல்லா நோன்பு
நிலைபெற வேண்டி
நெடுந்தவம் புரிந்தநம்
தாயகம் சமணமதம்
தனைப்பெற்ற தன்றோ?
முத்தியோ சிலரின் சொத்தென இருக்கையில்
இத்தமிழ் நாடுதன் இருந்தவப் பயனாய்
இராமா னுசனை ஈன்ற தன்றோ?
இந்நாடு வடகலை ஏன்என எண்ணித்
தென்கலை ஈன்று திகழ்ந்த தன்றோ?
துருக்கர் கிறித்தவர் சூழ்இந்துக்களென்று
இருப்பவர் தமிழரே என்ப துணராது
சச்சரவு பட்ட தண்டமிழ் நாடு.
மெச்சவும் காட்டுவோன் வேண்டுமென்
றெண்ணி



கிருங்கை சேதுபதி


இராம லிங்கனை ஈன்ற தன்றோ?
மக்கள் தொகுதி எக்குறை யாலே
மிக்க துன்பம் மேவு கின்றதோ
அக்குறை தீர்க்கும் ஆற்றல்வாய்ந் தோனைச்
சிக்கென ஈன்று சீர்பெறல் இயற்கையாம்.
ஜாரின் கொடுமை தாங்கா உருசியம்
ஏருற லெனினை ஈன்றே தீரும்!
செல்வர் சில்லோர் நல்வாழ் வுக்கே
எல்லா மக்களும் என்ற பிரான்சில்
குடிகள் குடிகட் கெனக்கவி குவிக்க
விக்டர் யூகோ மேவினான் அன்றோ?
தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்
இமைதிற வாமல் இருந்த நிலையில்
தமிழகம், தமிழுக்குத் தகும்உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்."

என விரிகிறது பாரதிதாசனின் பாடல். இராமா நுசர், இராமலிங்கர், லெனின், விக்டர்யூ கோ, இவர்களுக்குப் பின் எழுந்த பாரதியின் தோற்றம், பைந்தமிழின் மீள்தோற்றம் என்பது பாரதிதாசனின் துணிபு.

அதற்கான வீறு இளம்பருவத்தில் இருந்தே பாரதியிடம் இருந்தது என்பதை வரலாறு சொல் கிறது; அதற்குத் துணையாகிறது பாரதியின் ஒரு பாடல்.

எட்டயபுரத்துச் சுப்பையா, இளசைபுர மன்ன ரின் அரண்மனையில், இளங்கவி பாரதி யாக உலா வந்த காலத்தில் பாடிய பிள்ளைக் கவிகள் அத்தனையும் காற்றோடு போய்விட்டன. கவனத் தில் வைத்திருப்போரும் முறையாய் நினைவுகூர வழியற்றுப்போன நிலையில், பாரதி எழுதிய கடிதக் கவிதையாக நமக்குக் கிடைப்பது, 'தென்னிளசை நன்னகரில் சிங்கமென விளங்கிய வெங்கடேசு ரெட்ட மன்னருக்கு எழுதிய விண் ணப்ப மடல்.'

இது திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் பயிலப் போன காலத்தில் பாரதி பாடியது. அப் போது அவருக்கு வயது பதினைந்து தொடக்கம். (24.01.1897) பள்ளியில் பயிலும் மாணவர் ஆயினும் பாரதியின் உள்ளத்தில் இன்னும் அரண் மனை வாசம் மாறவில்லை. ஆதலால், பாடலின் நிறைவில், இங்ஙனம் ஊழியன் இளசைச் சுப்பிரமணியன் என்றே தன் பெயர் குறிக்கிறார். தன்நிலை விளக்கம் போல் அமைந்த பாடல் இது ஆயினும் தன் காலத்துத் தமிழின் நிலை குறித்து விரிவுறப் பேசும் வரலாற்றுச் செழுமை இப் பாடலுக்கு உண்டு.



அக்கால வழக்கப் படி, பிள்ளையார் சுழியிட்டு. (உ) சிவமயம் என்று எழுதிய பின்னர், 'தென் னிளசை நன்னகரிற் சிங்கம் வெங்கடேசுரெட்ட கன்னன் சுமுக சமூகம்' என்று முன் விலாசமிட்டு, 'திருவருள் மருமத் தொருவனும் அயனும்' என்ற மங்கல வாசகத்தோடு இம்மடற் கவிதை தொடங்குகிறது.

முதல் 25 அடிகளில் மன்னர் குறித்த புகழ் மொழி விரிகிறது; அதன் பின்னர், தன் நுவல் பொருள் மொழிகிறது.

"மன்னர்தம் மன்ன, நீ மகிழ்வொடு காண்க
இன்னணம் எளியேன் எழுதிய விண்ணப்பம்"

என்று தொடர்கிற பாடல் வரிகளில் தமிழின் நிலைமை, தன்னைக் காட்டி நிற்கிறது; அதன் செய்தி இவ்வாறு அமைகிறது.

'கடல் சூழ்ந்த இப்பெருநிலத்தில் உள்ள மொழிகள் பலவாகும். அவற்றுள், பெருஞ்சிறப்பு ஏற்றுப் பிறைச்சடைக்கடவுளான சிவபெருமானால், அருந்திரு நூல் ஒன்று அருளப்பெற்று, இனிய அமுதினை விடவும் சுவை எய்தி நிறைந்தது செந் தமிழ்த் திருமொழி; இதனைச் சிறிதும் ஆதரிப்பவர் இல்லாமையால், இந்நாளில் இனிது கற்பவர் களுக்கு நன்மை ஏதும் தாராது நலிந்து போனது. அதனால் மற்றைய புன்மொழிகள் பலவும் பொலிவு பெற்றுவிட்டன. மேலும், இந்த உலகினைப் பற்பல வகையினர், புலைஞர் மாண்பினொடு ஆள்வதால், ஐயே நின் அருளே அருங்கதி என்று உய்ய இவண் வந்து உற்ற என் தந்தையார், என்னையும் புறமொழியாகிய ஆங்கிலம் கற்கச் சொல்லி அனுப் பினார். என்ன யான் செய்குவது?

இனிய தமிழைக் கற்பேன் என்றால், பின்னால் ஒருவரும் பேணுதற்கு இல்லை. ஆத லால், யானும் அம்மொழி கற்கத் துணிந்தேன். என்றாலும், கைப்பொருள் அற்றவன் கற்பது எவ்வகை?' என்று கேட்கிறார்.

கல்வி பெறவேண்டும் எனில் பொருள் வளம் வேண்டும். பொருள் ஈட்டுவதற்குக் கல்வியே துணை. இந்த வயதில் எனக்குத் தேவை, கல்வியா? செல்வமா? என்றால், 'முதற்கண் கல்வியே பயிறல் முறைமை' என்று தெளிகிறார். 'அதற்குப் பொருள் இல்லை. ஆதலின் அடியேன் வருந்தியே நின்பால் வந்து அடைந்தேன்' என்கிறார்.

ஏற்கெனவே, தனது தந்தையார் மேற் கொண்ட தொழில் முயற்சிக்குப் பெரிதும் உதவி யவர் மன்னர். ஆனால், அம்முயற்சி ஊணர்செய் சதியால் தோல்வி எய்தி, வறுமைவயப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது, பாரதியின் குடும்பம். வரவுக்கு மீறிய நிலையில் அடிப்படைத் தேவைக்கான பொருள் செலவு செய்ய வழியின்றித் தன் தந்தை இருக்கும் நிலையுணர்ந்த தனயன் பாரதி, அவருக்குத் தெரியாமல், தன்னை, இளசை மன்னரின் ஊழியனாக்கிக் கொண்டு உதவிகோரி, இந்த விண்ணப்பத்தை வைக்கிறார்.

"பெருந்திரு உடையை, நின் பேரருள்
உடைமையான்
மாந்தர்ப் புரத்தல் வேந்தர்தம் திருவருட்கு
இலக்கியம் ஆதலின் எளியேற்கு, இந்நாள்
அரும்பொருள் உதவிநீ அனைத்தும்
அருள்வையால்"

என்று வேண்டுகிறார். 'அவ்வாறு, அருள் செய்யா விடில், நின்னைப் புகழ்ந்த தன் நா(க்கானது), புற மன்னர்பால் சென்று இரக்க வருந்திடும்' என் கிறார். வந்தது வறுமை என்றாலும் செம்மாந்து தன்னுள் நின்றது செந்தமிழ் தந்த செம்மை என்பதை நன்குணர்ந்த பாரதி,

"நின்னைக் கவியான் நிகழ்த்து நன் நாப்புற
மன்னர்பால் சென்றே இரக்க வருந்திடும்!"

என்று பாடுகிறார். இதற்கு எத்தகு துணிவு வேண்டும்? இது தன்னிரக்கம் போல், தோன்றும் தமிழ் இரக்கம் என்றாலும், மன்னரின் இரக்கமற்ற தன்மைக்கு இலக்கியமாகிவிடலாகாது என்று எச்சரிக்கிற நுண்ணறிவு என்பது புலப்படப் பாரதி பாடிய இப்பாடல், எட்டயபுர மன்னர்க்கு மட்டும் உரியதன்று; அக்காலத்து எல்லா மன்னர் களுக்கும், வள்ளல்களுக்கும் உரியது அல்லவா? இக்காலத்திற்கும் ஏற்புடையது தானே!

தன் கவிதையின் தரமும் தான்பெற்ற தமி ழின் திறமும் நுண்ணிதின் உணர்ந்த பாரதி, தோற்றத்தால் சிறுவனாகத் தெரிந்தாலும், ஆற்ற லால் பெரியன் என்பதை நினைவுகூர்வதற் காகவே, அடுத்த வரிகள் பின்வருமாறு பிறப் பெடுக்கின்றன.

"அன்னாய் நீயே அருங்கதி எனஉரைத்து
உன்னை வந்தடைந்தவர் உழல்வரோ, துயர்க்கடல்?
என்னை, இச் சிறுவன் இயம்புவது என்னாது
மன்ன, நின் அருளால் அடியனை வாழ்வித்து
உன்னரு ளாலே உய்ந்தோன் எனப் பிறர்
என்னைச் சாற்றலால் இரும்புக ழினைஎற்கு
ஈந்துஅருளுதிநீ, இனிது வாழ்கவே!"

என்றும் பாடுகிறார்.

சாதுர்யமாகத் தோன்றும் இப்பாடலில், 'தன் தமிழ் சாகாது காக்கும் அமுது' என்பதை நன்கு பதிவிடுகிறார். 'நின் பொருள் கொண்டு உதவும் நல் அருள் மனத்தால், நான் வாழ்வேன் என்றால், என்னை வாழ்வித்த புகழ் நின்னை வந்து எய்தும். உன் அருளாலே உய்ந்தோன்' என்று பிறர் என்னைப் புகழ்வதால் நின்புகழ் உயரும். நான் தமிழை வாழ்வித்து வாழ்பவன்; ஆதலால், தமிழால் நீயும் இத்தரணியில் நிலைத்த புகழுடன் இருந் திடுவாய்' என்பதை, 'இரும்புகழ்' என்ற சொல் கொண்டு தமிழின் திறம் பாடுகிறார்.

இது சிறுவன் பாரதி செப்பிய அறநெறி; அருள்நெறியும்கூட! ஏறத்தாழ, ஒன்றேகால் நூற்றாண்டுக்கு முன்னர், தமிழ் இருந்த நிலை இது; தமிழ் மன்னர்கள் இருந்த விதம் இது. தக்கோர் இருந்து பேணுநர் இல்லாவிட்டால்,

"பெருஞ்சிறப் பேற்றுப் பிறைச்சடைக் கடவுளும்
அருந்திரு நூல்ஒன்று அருளப் பெறீஇ
இன்னமு தினும்சுவை எய்வுறீஇ அமைந்த
செந்தமிழ்த் திருமொழி"

தனது இன்னிலை இழந்து அழிவெய்தும் என்பது உறுதி.

இதை முன்னுணர்த்திய பாரதியின் வயது அப்போது சிறிதாக இருந்தாலும், அவர் முன் வைத்த எச்சரிக்கைச் செய்தி சீரியது என்று மன்னர்களும் வள்ளல்களும் உணராமையால் தம்புகழ் இழந்தனர்; தமிழ் நிலை சரிந்தது; தமிழர் தம் வாழ்வும் முடிந்துவிடுமோ? என்று கவலை கொள்வதை விடுத்துக் களம் இறங்கினார் பாரதி. காரணம், அவர் வாழ்விக்க வந்த வரலாற்று நாயகர் அல்லவா? ●

கட்டுரை

சின்னஞ்சிறு கிளி

முனைவர் சரசுவதி இராமநாதன்



பாரதியார்

"**க**ணந்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும் / கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்" என்று பாரதி சொன்ன வரிகள் அவன் படைப்புக்களுக்கே பொருந்தும்.

ஒரே பாடலை 9 வயதில் நடனம் கற்கும்போதும், 12 வயதில் பாட்டாகப் பாடும்போதும், பின்னர் மேடையில் 25 வயதில் பேசும்போதும் இந்த அனுபவம் எனக்குக் கிடைத்தது (வியப்பு! கனவு!). அந்தப் பாடல் – கண்ணன் பாட்டில் வரும் (கண்ணம்மா என் குழந்தை) 'சின்னஞ்சிறு கிளியே பாடல்தான்!

இந்தப் பாட்டுக்கு நடனம் ஆடாத நடன மணிகள் உளரா? இசைக் கருவூலமாக, கற்பனைக் களஞ்சியமாகக் கண்ணன் பாட்டுத் திகழ்கிறது. இதை அரை அணாவுக்கு விற்க முடியாமல் பாரதி சிரமப்பட்டதை வ.வே.சு. ஐயர் எழுதி வருந்தியுள்ளார்.

அதாவது 'கவிதை அழகை மட்டும் அனுபவித்துவிட்டு இந்நூலின் பண்ணழகை மறந்து விடக்கூடாது' என்று வீரவிளக்கு வ.வே.சு. ஐயர் எழுதியுள்ளார். பாரதி கடற்கரையில், நிலவொளியில் கம்பீரமான குரலில் பாடியதைக் கேட்ட பாக்கியசாலி அவர்.

'எந்தை யாய், என்னுடைச் சுற்றம்' எல்லாம் கண்ணன் என்ற ஆழ்வார்களின் மனநிலையைப் பாரதி கண்ணன் பாட்டில் அனுபவிக்கிறார். பராசக்தியை அல்லது கண்ணனைத் தன் பெண் குழந்தையாக்கிக் கொஞ்சும் பாடல்தான் 'சின்னஞ்சிறு கிளியே!'

மக்கட்பேறு : 'மங்கலம் என்ப மனைமாட்சி' என்றால், அதன் நன்கலம் நன்மக்கட் பேறல்லவா? மக்கட்பேற்றைச் சந்தானலட்சுமி என்று கொண்டாடுகிறோம்.

'மகவு நான், தாய் நீ' என இறைவனைத் தாயாகப் பார்த்துப் பக்தி செய்வதுண்டு. ஆனால் பாரதி எதிலும் புதுமை காண்பவன். அவனைக் குழந்தையாக்கி மகிழ்கிறான்! அதிலும் பெண் குழந்தையாக! ஆரியப் படை



கடந்த நெடுஞ்செழியன் என்ற மன்னன், புறநானூற்றுப் பாடலில்,

"குறு குறு நடந்து, சிறு கை நீட்டி / இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும் /

நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்" – மயக்குறு மக்கட்பேறு அவசியம் எனப் பாடினான்! குறளாசான் 'தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ், அமிழ்தத்தைவிட இனிது' என்றார்! அரசன் நெய்ச்சோறு எனச் சொன்னான். சாமானியன் 'கூழ்' என்றான். சுகம் ஒன்றே!



வ.வே.சு. ஐயர்

காலந்தோறும் கற்பனை : தெய்வங்களைக் குழந்தையாக்கிய பிள்ளைத்தமிழில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், அகிலாண்டேசுவரி பிள்ளைத் தமிழ் இவற்றில் பெண் குழந்தை குறித்த வர்ணனைகள் அழகு! அபிராமி அந்தாதியில் 'கிளியே' என்றழைக்கும் பாடல்கள் 16 உண்டு.

"முத்துமணிப் பல்லக்கு முளைத்தெழுந்த சிறுகீரை / தத்தும் கிளி, தேவதாரு உதிர்த்த இலை / கொத்து மலர் ஒன்றாய்க் கூடிச்சமைத்த முகம்" என்று கவியரசர் தனிப்பாடலில் புதுவிதமாகக் கற்பனை செய்வார்.

"சின்னஞ்சிறு கண்மலர், செம்பவள வாய்மலர்" கொண்ட குழந்தை என்றுமே காவியம்தான்; பாரதியின் சொல்லோவியத்திலும் பெண் சின்னஞ்சிறு கிளியே! என அழைக்கப் படுகிறாள். கிளி நிறத்தால் அழகு. இளம் பச்சை வண்ண உடல், சிவந்த மிளகாய், கோவைக்கனி போன்ற சிவந்த இதழ், சிறு சிறகுகள். பட்டுப் போல் மென்மை, 'கீச்'சென்ற சிறு குரல்! ஆஹா! சின்னஞ்சிறு கிளி அழகுதானே!

'செல்வக் களஞ்சியமே!' எந்தச் செல்வமும் தர முடியாத இன்பத்தை **மக்கட் செல்வம்** தருமே!

துன்பத்தை நீக்கி ஏற்றம் தர வந்த அழகுக் குழந்தையை 'என்னைக் கலி தீர்த்தே உலகில் ஏற்றம் புரிய வந்தாய்!' எனக் கொஞ்சும் பாரதி, உலகியல் செல்வங்களான பொன், பொருளை அதிகம் பெறவில்லை.

'பிள்ளைக் கனி அமுது' கண்ணம்மாவாம்! பாரதிக்குப் பின் இந்தத் தொடர் அதிகம் கையாளப்பட்டது. கனி என்றால் அழுகலாம், அமுது கெடாததே! 'கனியமுதே!' என்றார்.

'பேசும் பொற்சித்திரம்!' சித்திரம் அழகு. அதிலும் பொன்னாலான சித்திரம் உயர்ந்தது, சிறந்தது, உவகை தருவது. ஆனால் தங்கப் பொம்மை, சித்திரம், பேசி மயக்காதே! குழல், யாழைவிட இனிய குதலைப் பேச்சால் கிறுகிறுக்க வைக்கும் குழந்தையைப் **பேசும் பொற் சித்திரமே** என்றது புதிய சொல்லாட்சி.

தேன் இனிமையானது. ஆனால் திரவம். குழந்தை கண்ணம்மா இனியவள்; தேன் – அதுவும் ஆடிவரும் தேனாம்.

"பிள்ளைக்கனி அமுதே கண்ணம்மா / பேசும் பொற் சித்திரமே! / அள்ளி அணைத்திடவே என்முன்னே / ஆடி வரும் தேனே!" (சின்னஞ்சிறு கிளியே).

குழந்தை தத்தித் தளர் நடையிட்டு அதன்பின் ஓர் ஓட்டம் கற்கும் பாருங்கள்! "ஓடி வருகையிலே கண்ணம்மா உள்ளம் குளிருதடீ! / ஆடித் திரிதல் கண்டால் – உன்னைப்போய் ஆவி தழுவுதடீ" – அகராதி தேவையில்லையே! அனுபவ சுகம்!

"உச்சிதனை முகர்ந்தால் கருவம்

ஓங்கி வளருதடி” பெரியாழ்வாரின் தாக்கம் கண்ணன் பாட்டில் நிறைய உண்டு! “ஞாலத்துப் புத்திரனைப் பெற்ற யசோதையின் கர்வம் கண்ணம் மாவைப் பெற்ற பாரதி அம்மாவுக்கு வந்துவிடுகிறது! அடுத்த அடிகள் ஆழமானவை!

“ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் / சான்றோன் எனக் கேட்ட தாய்” என்றார் வள்ளுவர்! உரை தந்த பரிமேலழகர், ‘தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்!’ என்றார். ‘மகன்’ ஒன்றொழி பொதுச்சொல்தான்! பொதுவான பெயர்தான். ‘மகன் எனல்; மக்கட் பதடி எனல்’ என்று வருவதும் அப்படியே. ஆனாலும் ஆண்மகன் சான்றோன், வீரன் எனப் பிறர் சொல்லக் கேட்ட தாய், அவனைப் பெற்ற நாளைவிடப் பெரிதும் மகிழ் வாள் எனப் பொருள் சொன் னார்கள்!

ஆனால் பாரதி கண்ணனையல்ல; கண்ணம்மாவை ஊரார் புகழ்ந்தாலும் மேனி சிலிர்க்குமென்றார். பெண் விடுதலைக் கவிஞனல்லவா! “மெச்சி உனை ஊரார் புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடி!” குழந்தையின் “கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம்தான் கள்வெறி” கொள்கிறதாம். தழுவி னாலோ, உன்மத்தம் பிடித்த மாதிரி உற் சாகம் கரைபுரண்டு வருகிறதாம்.


திருவள்ளுவர்

குழந்தை சற்று முகம் சிவந்தால் சஞ்சலம் வருவதும், நெற்றி சுருங்கினால் நெஞ்சம் பதைப் பதும் பாசத்தின் வெளிப்பாடு. அதன் உச்சமோ, குழந்தை கண்களில் நீர் வடிந்தால் தாயின் நெஞ்சத்தில் உதிரம் வருகிறது என்றது! இந்த அடி தன்னைக் கவர்ந்ததால் கவியரசர் இதையே முதலடியாக்கி ‘வியட்நாம் வீடு’ படத்தில் பாடல் தந்தார்.

“உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடீ! நீ என் கண்ணில் பாவையல்லவா! என் உயிரே நீதானே! நீ மழலையால் என் துயர் தீர்த்திடுவாய்! உன் முல்லைச் சிரிப்பாலே என் மூர்க்கத்தனத்தை மாற்றி விடுவாய்!” – உண்மைதானே! குழந்தை முகத்தில் கோடித் துக்கம் போய்விடும்! அது சிரித்துவிட்டால் நம் ஆத்திரம், கோபம் எல்லாம் பறந்துவிடாதா?

ஆபரணங்கள் சுமைதான்! குத்தும்! ஆனால் மார்பில் குழந்தை தவழ்ந்தால் வலியா வரும்? இன்ப சொர்க்கமல்லவா தெரியும்! ‘மார்பில் அணிவதற்கே உன்னைப்போல், வயிரமணிகள் உண்டோ?’

இப்படிப் பெண்குழந்தையைக் கொஞ்சினால் அவள் சந்திர மண்ட லத்தியல் கண்டு தெளிவாள். சட்டங் கள் செய்வாள்! பட்டங்கள் பெறு வாள்! சிந்தித்துத்தான் பாரதி கண்ணம்மாவை இவ்வளவு ஏற்றிப் போற்றிப் பாடியிருக்கிறான்! சீர் பெற்று வாழ ஒரு சின்னஞ்சிறு கிளி அவசியம் வீட்டில் இருக்க வேண்டும்! அவள்தான் பெருஞ்செல்வம்! ●

வ.உ.சி. இயக்கிய கப்பல்கள்



தூத்துக்குடி துறைமுகத்தி லிருந்து கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. இயக்கிய இரு நீராவிக் கப்பல்களின் பெயர்கள் : எஸ்.எஸ். கலிலியோ, எஸ்.எஸ். லாவோ.

காளமேகம் எனும் கவிதைப் புயல்


காளமேகப் புலவர்

சென்ற இதழ் தொடர்ச்சி

பலரும் மாறி மாறிச் சிலேடைக்குச் சமிக்கை தந்தனர். அவற்றையெல்லாம் உடனுக்குடன் மிக எளிதாகப் பாடி முடித்தார் காளமேகம். மீனுக்கும் பேனுக்கும், தேங் காய்க்கும் நாய்க்கும், ஆட்டக் குதிரைக்கும் காவிரியாற்றுக் கும், கீரைப்பாத்திக்கும் ஏறு குதிரைக்கும், ஆட்டுக்கும் குதிரைக்கும், துப்பாக்கிக்கும் ஓலைச் சுருளுக் கும், பூசணிக்காய்க்கும் பரமசிவனுக்கும் எனப் பல்வேறு குறிப்புகளுக்கும் சிலேடைகள் பாடினார்.

ஒருவர் சற்றே வித்தியாசமாக, காளமேகமே திகைத்துப் போகும்படியாக ஒரு குறிப்பைத் தந் தார். அவர் பெயர் காமன். 'டுடுடுடுடு' என ஐந்து டு ஒரு சீராக அமையப் பாடுக என்றார். தீர்ந்தார் காளமேகம் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கையில், காள மேகம் புன் முறுவல் பூத்தப டி, குறிப்புக் கொடுத்தவரை நோக்கி 'ஓ! காமா வீதோ...' என்று தொடங்கிவிட்டார்.



"ஓகாமா வீதோநே ரொக்க டுடுடுடு

நாகார் குடந்தை நகர்க்கிறைவர் – வாகாய்

எடுப்பர் நடமிடுவர் ஏறுவர்அன் பர்க்குக்

கொடுப்பர் அணிவர் குழைக்கு!"

'ஓ, கா, மா, வீ, தோ' என்ற ஐந்தெழுத்துக் களோடும் முறையே 5 'டு'க்களைச் சேர்த்து விட்டால், ஓடு, காடு, மாடு, வீடு, தோடு என 5 சொற்கள் கிடைக்கும். குடந்தை நகர்ச் சிவபெரு மான் ஓடு எடுப்பார், காடு நடனமிடுவார், மாடு வாகனமாக ஏறுவார், வீடு அன்பர்க்குக் கொடுப் பார், தோடு அணிவார் குழைக்கு.

இன்னொருவர் கேட்டார்! எங்கோ அடிபட்டு, அவமானப்பட்டு வந்திருப்பார் போல! 'செருப்பு' என்று தொடங்க வேண்டுமாம், 'விளக்குமாறு' என்று முடிக்க வேண்டுமாம். அப்படி ஒரு வெண் பாப் பாடுக. நாகரிகமற்ற இந்தக் குறிப்புக்குக் காளமேகம் எவ்வளவு நாகரிகமாகப் பாடுகிறார் பாருங்கள்!

"செருப்புக்கு வீரர்களைச் சென்றுழக்கும் வேலன்

பொருப்புக்கு நாயகனைப் புல்ல – மருப்புக்குத்

தண்டேன் பொழிந்திருக்கும்

தாமரைமேல் வீற்றிருக்கும்

வண்டே விளக்கு மாறே!"

'செரு என்றால் போர். போருக்குச் சென்று எதிரிகளைத் திணறச் செய்யும் வேலன். அவன் இந்த மலைக்குத் தலைவன். அவனை நான் காதலிக்கிறேன். அவனைச் சென்று அடைய,

வண்டே! தாமரைமேல் அமர்ந்திருக்கும் வண்டே! விளக்கும் ஆறு – வழி காட்டுவாயாக!' ஒரு பெண்ணின் காதல் குரலாக அக்குறிப்பை மாற்றி நாகரிகப்படுத்திப் பாடுகிறார் காளமேகம்! இங்கே செருப்பும் இல்லை! விளக்குமாறும் இல்லை! ஒரு பெண்ணின் அருமையான காதல் மட்டுமே இருக்கிறது!

இப்படியாக 64 தண்டிகைப் புலவர்களும் கேட்ட குறிப்புகளுக்கெல்லாம் தட்டுத் தடங்க லின்றிப் பாடியவர்க்கு, இறுதியாகத் 'த'கர வரிசை எழுத்துக்கள் மட்டும் அமைய ஒரு பாட்டுப் பாட வேண்டும் என்ற வேண்டுகோள் வைக்கப்பட்டது. ஒரே எழுத்தை வைத்து எப்படிப் பாடுவது? பாடுகிறார்...

"தாதிதூ தோதீது தத்தைதூ தோதாது
தூதிதூ தொத்தித்த தூததே – தாதொத்த
துத்தித்த தாதே துதித்தேத் தொத்தீதே
தித்த தோதித் திதி!"

ஏவற் பெண்ணைத் தன் தலைவன்பால் தூது அனுப்புகிறாள் ஒருத்தி! அவள் சொல்கிறாள் : தாதிப்பெண்ணைத் தூதாக அனுப்பினால் தீதாக முடிகிறது (தாதி தூதோ தீது). கிளியை அனுப் பலாமென்றால் அது பேசாது. (தத்தை தூது ஓதாது). எனவே தூதாக நியமிக்கப்பட்ட பெண்ணே! (தூதியே) உன் தூதே ஒத்தது! இன்பமானதும் அதுவே (தூது ஒத்து, இதத்தூது அதே!). அதனால் என் மேனியில் தேமல் படராமுன் (துத்தி தத்தாதே) சென்று அவன் மனம் தெளிய ஒத்தபடி தூது சொல்! வணங்கி இனிய மொழி கூறித் தேற்று; ஒத்தபடி சொல்! (துதித்துத் தேத்து – தேற்று), இனியன கூறி என்னைக் காப்பாற்று! (தித்தித்தது ஓதித் திதி. திதி – காப்பாற்று).

தமிழின் ஆழ, அகலம் கண்டு அதன் செழுமையையும் உள்ளத்தில் பொழிந்து அதுவே சிந்தனையாக – அதுவே தன்வயமாகத் தேர்ந்த ஒரு புலவனால் மட்டுமே இப்படிப் பாட முடியும்! அவன்தான் காளமேகம்.

இப்படி வென்றவனை அந்த 64 பேரும் ஒப்புக்கொண்டார்களா? இல்லை! மாறாகக் கூச்ச லிட்டார்கள், அவமதித்தார்கள்! எமகண்டத்தி லிருந்து கீழே இறங்கிய காளமேகம், சினத்தால் முகம் சிவந்து மன்னன் முன்னிலையில் "அறம் பாடினார்!"

"கோளர் இருக்குமூர்! கோள்கரவு கற்றவூர்
காளைகளாய் நின்று கனைக்குமூர் – நாளையே
விண்மாரி யற்று வெளுத்துமிகக் கறுத்து
மண்மாரி பெய்கஇந்த வான்"

என்று சாபமிட்டார். அவர் சாபம் பலிக்காமற் போகுமா? பலித்ததாகவே செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

காளமேகம் ஓரூரில் ஒரு தெருவில் முடங்கிக் கிடந்தவர் அல்லர். திருத்தலங்கள் தோறும் சென் றார். அங்குள்ள மக்களோடு மட்டுமல்லாமல், தெய்வங்களோடும் தோழமை பாராட்டினார். யாவரும் வணங்கும் தெய்வங்களை நட்புரிமை யோடு கேலி செய்தார். நிந்தாஸ்துதி பாடினார்!



பொன்முடி சி. சுப்பையன்

காஞ்சியில் உற்சவம்! கருட வாகனத் தில் பெருமாள் பவனி வந்தார். எல்லோரும் கனிந்து கன்னங்களில் ஒற்றிக்கொண்டு வணங்கியிருக்கையில் காளமேகம், "பெருமாள் இருந்த இடத்தில் சும்மா இருந்திருக்கலாமே! திரு நாளும் அதுவுமாக அவரைப் பருந்து தூக்கிக் கொண்டு போகிறதே! என்று கேலி செய்தார்.

தில்லையில் உற்சவத்தில் பிச்சாடன மூர்த்தியாகச் சிவன் பவனி வரக்கண்டு,

"ஐயா, சிவபெருமானே! பிச்சாடனராகப் பிச்சை எடுக்கத்தானே புறப்பட்டீர்! அதற்கேன் இப்படி எக்காளம், யானை, மத்தள வாத்தியங் கள்?" என்று நிந்தாஸ்துதி பாடினார்.

காஞ்சியில் விநாயகர் உற்சவத்தில் மூசிக வாகனத்தில் உலா வரக்கண்டவர், "ஐயோ, விநாய கரை எலி இழுத்துக்கொண்டு போகிறதே! சிவனின் மழுவும், திருமாலின் சக்கரமும்

பிரம்மாவின் கதாயுதமும் என்னவாயின?'' என்று நிந்தாஸ்துதி பாடினார்.

ஒரு தலத்தில் முருகப்பெருமான் விழாக் கண்டு, இவனுக்கென்ன இத்தனை ஆடம்பரம்?

"அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி

ஒப்பரிய மாமன் உறிதிருடி – சப்பைக்கால்

அண்ணன் பெருவயிறன்! ஆறுமுகத் தானுக்(கு)இங்

கெண்ணும் பெருமை இவை!"

என்றார். மதுரை மீனாட்சியையும் இவர் விட்டு வைக்கவில்லை.

"நல்ல தொருபுதுமை நாட்டிற்கண் டேன்அதனைச்

சொல்லவா சொல்லவா சொல்லவா – தொல்லை

மதுரைவிக்கி னேச்சுரனை மாதுமையாள் பெற்றாள்

குதிரைவிற்க வந்தவனைக் கூடி"

(குதிரை விற்க வந்தவர் சிவபெருமான்) என்றார்.

வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் போனார். புள்ளிருக்குவேளூர் என்பது அத்தலத்தின் பழம் பெயர். 'இவர் என்ன பெரிய வைத்தியரா? எவர் நோயை இவர் தீர்த்திருக்கிறார்? இவர் குடும்பமே நோயாளிக் குடும்பம் ஆயிற்றே!

"வாதக்கா லாம்தனக்கு! மைத்துனர்க்கு நீரிழிவாம்!

போதப் பெருவயிறாம் புத்திரற்கே – ஓதக்கேள்

வந்த வினைதீர்க்க வகையறியார் வேளூரார்

எந்தவினை தீர்த்தார் இவர்?"

பழைய தொன்மச் செய்திகளை உள்வாங்கிக் கொண்டு, கடவுளரிடம் நெருக்கமான தோழமை யோடு, உலகியல் வாழ்முறைக்கு ஒப்ப இவர் குரல் நிந்தனைக் குரலாக இருப்பினும் உண்மையில் அது வந்தனைக் குரலே! இத்துறையில் அவர் தனித்தன்மையும் தனிவீறும் கொண்டவராகத் திகழ்கின்றார். மனிதர்களோடும் இவர் பழகு கிறார், கேலிகள் செய்கிறார், திட்டுகிறார், வாழ்த் தவும் வாழ்த்துகிறார்!

குடந்தையில் ஒரு சமாராதனை விருந்து. அதாவது, கூடும் விருந்து. நல்ல விருந்துணவு. அதற்கேற்ற பசி! பந்தியில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார் காளமேகம். எதிர் வரிசையில் முன்குடுமி வைத்த அந்தணர் ஒருவருக்கு நல்ல பசி போலும்! அள்ளி அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தார். அவரது முன்குடுமி அவிழ்ந்து இலையில் விழுந்துவிடுகிறது. அதை எடுத்து அவர் உதற, ஒட்டிக் கொண்டிருந்த பருக்கைகள் எதிரில் இருந்த காளமேகத்தின் இலையிலும் சித றின. இவருக்கு வந்ததே கோபம்! கோபம் வந்தால் வெண்பாவும் வருமே!

"சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்

பொருக்குலர்ந்த வாயா, புலையா – திருக்குடந்தைக்

கோட்டானே நாயே குரங்கே உனையொருத்தி

போட்டாளே வேலையற்றுப் போய்"

என்று திட்டிவிட்டு எழுந்து சென்றுவிட்டார். வெண்பாவில் திட்டுவதும் ஓர் அழகாகத்தான் இருக்கிறது. இனி வாழ்த்தியதற்கு ஒன்று பார்ப்போம்.

அன்போடு உபசரித்து, விருந்தினரை வர வேற்று உணவு படைத்தான் பட்டன் என்பவன். திருப்பனந்தாள் ஊரில் இது நடந்தது. உண்டு பசியாறிய காளமேகம் அவனை வாழ்த்தினார், கட்டளைக் கலித்துறையில்.

"விண்ணீரும் வற்றிப் புவிநீரும் வற்றி

விரும்புமழைத்

தண்ணீரும் வற்றிப் புலவோர் தவிக்கின்ற

காலத்திலே

உண்ணீருண் ணீரென் றுபசாரஞ் சொல்லி

யுபசரித்துத்

தண்ணீரும் சோறும் தருவான் திருப்பனந்

தாட்பட்டனே!"

காளமேகம் வாழ்ந்த கி.பி. 15–ஆம் நூற்றாண் டில்தான் இரட்டைப் புலவர்களும் வாழ்ந்திருக் கின்றனர். அவ்விருவர் பற்றிய குறிப்பொன்று காளமேகத்துடன் இணைகின்றது. ஆயினும் சந்திப்பு நிகழவில்லை.

ஒரு சமயம் திருவாரூருக்கு வந்த இரட்டை யர்கள் ஒரு சத்திரத்தில் தங்கினர். உணவு உண்டு ஓய்வாக இருக்கையில், திருவாரூர்த் தியாகேசனைப் பற்றி ஒரு வெண்பா இயற்றலாம் என்று நினைத்தனர். சிவன் முப்புரங்களை எரித் ததைப் பாடலாம்! ஆனால், கேலி செய்து பாட வேண்டும்.

மகாமேருமலையை வில்லாக எடுத்தார்! வாசுகி என்னும் பாம்பை நாணாகக் கட்டிக்

கொண்டார். திருமாலை அம்பாக வைத்து எய்து திரிபுரங் களை அழித்தார் சிவபெருமான்.

எடுத்த வில் மலை – அதாவது கல். கல் வில் வளை யுமா? உடையும்! வாசுகி பாம்பு – நஞ்சி ருக்கும் அதாவது நைந்து போய் இருக்கும். அது அறுந்து போகாமல் பயன் படுமா? என்ற சிந்தனையில், ''நாண்என்றால் நஞ்சிருக்கும், நற்சாபம் கற்சாபம் / பாணந் தான்....''



மதுரை மீனாட்சியம்மன்

என்று ஆசை தோன்றியது. காளமேகம் எங்கே இருக்கிறாரோ? யாருக்குத் தெரியும்? காலம் கழிகிறது.

இரட்டையர்கள் நாகப் பட்டினத்திற்குப் போனார்கள். முடவர் தோளில் குருடர் அமர்ந்து கொண்டுதான் அவர்களின் பயணம் தொடர்ந் தது. ஊருக்கு வெளியே மக் கள் கூட்டமாக வந்து கொண்டி ருந்தார்கள். யாரோ இறந்து விட்டார்கள் போல. ஊர்வலத் திற்கு வழிவிட்டு இரட்டையர்கள் ஒதுங்கி நின்றனர்.

பாணமும் பயனற்றது என்று கேலி செய்ய வேண்டும். என்ன சொல்லைப் போடுவது? வெண்பா அதற்குமேல் ஓடவில்லை. பாணமாக வந்தவர் திருமால். அதற்குரிய சிலேடைச் சொல் லுக்காக இருவரும் சிந்தித்தார்கள். இரவெல்லாம் சிந்தித்தும் விடை கிடைக்கவில்லை. வெண் பாவை முடிக்க முடியவில்லை. சிந்தித்தவரை வந்த வரிகளை,

"நாண்என்றால் நஞ்சிருக்கும் நற்சாபம் கற்சாபம்

பாணந்தான்......"

என்று சுவரில் ஒரு கரிக்கட்டையால் எழுதி வைத்துவிட்டு, விடிந்ததும் புறப்பட்டுப் போய் விட்டனர். 'பாணந்தான்' அதற்கேற்ற சொல் கிடைக்கவே இல்லை அவர்களுக்கு.

ஆறு மாதங்கள் கழித்து அதே சத்திரத்திற்கு வந்தார்கள். அந்த வரிகளைப் பார்க்கிறார்கள். பாடல் முடிக்கப்பட்டிருந்தது.

"நாணென்றால் நஞ்சிருக்கும் நற்சாபம் கற்சாபம்

பாணந்தான் மண்தின்ற பாணமே – தாணுவே

சீராரூர் மேவும் சிவனேநீ எப்படியோ

நேரார் புரமெரித்த நேர்"

'அடடா! எப்படிப்பட்ட சொல்! பாணந்தான் மண்தின்ற பாணமே! ஆ, ஆ! திருமால் மண் தின்றவர்தாமே! பாணமும் மண்தின்று இற்றுப் போன பாணம் என்பதாகப் பொருந்துகிறதே!' என்று இரட்டையர்களுக்கு மகிழ்ச்சி தாங்க வில்லை. பாடலுக்குக் கீழே காளமேகம் என்று இருந்ததைப் பார்த்தவர்களுக்கு, அந்தக் காளமேகத்தை எப்படியாவது காண வேண்டுமே

இறந்து போனது யார்? என்று விசாரித்தனர். ஒருவர் சொன்னார், ''சில நாட்களுக்கு முன்னே இந்த ஊரில் புலவர் ஒருவர் வந்து தங்கியிருந்தார். அவர்தான் இறந்துவிட்டார். அடக்கம் செய்யக் கொண்டு போகிறோம்.''

''புலவர் என்கிறீர்களே, அவர் பெயர் என்னவோ?''

''அவர் பெயரா? அவரைக் 'காளமேகம்' என்பார்கள்'' என்றார் அந்த மனிதர். இரட்டையர் களுக்கு எப்படி இருந்திருக்கும்? அந்த மரண ஊர்வலத்தில் தாங்களும் இணைந்து சுடு காட்டுக்குப் போய் உட்கார்ந்து கொண்டனர்.

கட்டைகளை அடுக்கிக் காளமேகத்தின் உடலை வைத்துச் சடங்கு செய்து, தீ மூட்டிவிட்டு ஊரார் புறப்பட்டுப்போன நிலையில், இரட்டை யர்கள் அங்கேயே காத்திருந்தனர்.

தீ ஓங்கி எரிந்தது. குருடருக்கு முடவர் விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு கட்டை விலகி விழுந்தது. காளமேகத்தின் முகம் தெரிந்தது. வாய் தீயில் வெந்து கொண்டிருந்தது. தாங்க முடியவில்லை இரட்டையருக்கு!

"ஆசு கவியால் அகில உலகெல்லாம்

வீசு புகழ்க்காள மேகமே – பூசுரா

விண்கொண்ட செந்தழலில் வேகுதே அய்யய்யோ

மண்தின்ற பாணம்என்ற வாய்!"

பாட்டு, தமிழன்னையின் கதறலாக விண்ணில் எதிரொலித்தது. காலத்தால் மறக்க முடியாத புலவர் காளமேகம்! ●

கட்டுரை



எழுத்தாளர் சே.ப. நரசிம்மலு நாயுடு

சேலம் பகடாலு நரசிம்மலு நாயுடு என்பவர் தமிழ்ப் பத்திரிகையாளர்களில் மூத்தவர். சேலத்துக்காரரான அவர், *1854*–இல் ஈரோட்டில் பிறந்து, சேலத்தில் வளர்ந்து, படித்து, வேலை பார்த்து, பின் கோவைக்குச் சென்று வாழ்ந்து புகழ்பெற்று *1922*–இல் மறைந்தார். சேலத்தில் பள்ளிக் கல்வியை முடித்த அவர், வீட்டிலிருந்தவாறே பல்கலைக் கழகத் தேர்வுக்குப் படித்தவர்.

சேலம் குமாரசாமிப்பட்டியிலிருந்த பள்ளியில் நரசிம்மலு நாயுடு ஆசிரியராகச் சேர்ந்தார். சிறுவயது முதல் எழுத்தில் நாட்டம் கொண்ட அவர், *1877*–இல் “சேலம் சுதேசபிமானி” என்றொரு பத்திரிகையை ஆரம்பித்தார். அப்போது அவர் பள்ளி ஆசிரியராகவும் தொடர்ந்தார். கூடவே பிரம்ம சமாஜத்தில் சேர்ந்து, அதன் சேலம் கிளையில் தீவிரமாகப் பணியாற்றினார். மேடைகளில் சொற்பொழிவுகளும் செய்தார்.



தமது பத்திரிகையில் மாவட்டக் கலெக்டர் பற்றி விமர்சனம், அரசுத் துறைகளில் ஊழல், தேசிய உணர்ச்சி, மிட்டாதார்களின் கொடுஞ்செயல் முதலிய விஷயங்களை எழுதியதால் இடமாற்றம் செய்யப்பட்டார். யோசித்துப் பார்த்தவர், தமது ஆசிரியர் வேலையைவிட்டு விலகினார். பத்திரிகை ஆசிரியராகத் தொடர்ந்தார்.

அதன்பிறகு அதையும் விடுத்து, *1879*–இல் கோயம்புத்தூருக்குக் குடிபெயர்ந்தார். அங்கு ‘கோயம்புத்தூர் அபிமானி’ என்றொரு பத்திரிகையை ஆரம்பித்தார். நிர்வாகக் கோளாறினால் அது நின்றுபோக, *1881*–இல் “கோயம்புத்தூர் கலாநிதி” என்று வேறொரு பத்திரிகையை ஆரம்பித்தார். *1910* வரை அவ்விதழை நடத்தினார். ஆனால் நஷ்டம்தான் ஏற்பட்டது. சமாளித்துக் கொண்டார்.

இடைப்பாடி அமுதன்

இடையில், நரசிம்மலு நாயுடு பல நூல்களையும் எழுதி வெளியிட்டார். 'சேலம் பூகோள சாஸ்திரம்' (1873), 'கோயம்புத்தூர் பூமி சாஸ்திரம்' என்ற அவரது இரண்டு பாடநூல்கள் குறிப்பிடத்தக்கவை. சேலம் பூகோள சாஸ்திரம் நூலின் விலை அரை அணா. 50 பிரதிகள் வாங்கினால் 10 பிரதிகள் இலவசம் என்று அவர் விளம்பரம் செய்திருந்தார்.

அரசியலும் அவரை ஈர்த்தது. 1885–இல் காங்கிரஸ் கட்சி தொடங்கப்பட்டபோது, நாயுடுகாரு கோயம்புத்தூர் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் செயலாளரானார். காங்கிரஸின் முதல் மாநாட்டில் கலந்துகொள்ளத் தமிழ்நாட்டிலிருந்து பம்பாய்க்குச் சென்ற பிரதிநிதிகளில் இவரும் ஒருவர்.

அடுத்த ஆண்டுக் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலும் மாகாணப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். அந்த முறை தன் குடும்பத்துடன் சென்றார். அந்த இரண்டு மாநாடுகளிலும் கலந்துகொள்ளச் சென்ற பயணங்களின் அனுபவங்களைத் "திவ்விய தேசாந்திரியின் சரித்திரம்" என்று நூலாக எழுதி 1889–இல் வெளியிட்டார். தமிழில் பயண நூல் வரிசையில் இவரது நூல் முன்னோடியானது.

இப்படிப் பத்திரிகை, அரசியல், பிரம்ம சமாஜம் என்று வலம்வந்த நரசிம்மலு நாயுடுவிற்குத் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் உண்டு. அவர் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதினார் என்பது வியக்க வைக்கும்!

வரலாறு, மதம், தத்துவம், அரசியல், பெண் விடுதலை, கும்மி – சிந்து முதலிய இசைப் பாடல்கள், ராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசங்கள், வேளாண்மை முதலான தலைப்புகளில் அவர் நூல்களை எழுதினார். பன்மொழி வித்தகரான அவர் பெரிய நூலகத்தை வைத்திருந்தார்.


முதல் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் அவர் கலந்துகொள்ளச் சென்றபோது, காங்கிரசைத் தோற்றுவித்தவர்களில் ஒருவரான தாதாபாய் நௌரோஜி, பெரோஸ்ஷா மேத்தா முதலானவர்களுடன் சென்னை மாகாணத் தலைவர்களான ஜி. சுப்பிரமணிய ஐயர், பி. அனந்தாச்சார்லு, எம். வீரராகவாச்சாரியர் ('தி இந்து' இதழின் உரிமையாளர்களில் ஒருவர்) முதலியோரையும் சந்தித்துப் பழக்கம் கொண்டார்.

அப்படியான நிலையில், நாயுடு காருவுக்குப் பாலவநத்தம் ஜமீன்தார் பாண்டித்துரைத் தேவரிடமும் தொடர்பு ஏற்பட்டது. 'தட்சிண இந்தியாவின் சரித்திர சாரசங்கிரகம்' என்ற தென்னிந்தியாவின் வரலாற்று நூலை அவர் 1905–இல் வெளியிட்டார். இந்த நூலைப் பற்றி இதுவரை யாரும் ஆய்வும் செய்ததாகத் தெரியவில்லை. அப்புத்தகத்தின் முதல் இரு பக்கங்கள் வாயிலாக நாம் தெரிந்து கொள்பவை :

- 'கோயமுத்தூர் கலாநிதி' பத்திரிகையின் ஆசிரியர் நரசிம்மலு நாயுடு.
- ஆஸ்திக மதம், மத விருட்சம், ஆரியர் வேதம், ஆரியர் ஆசாரம், கிருஷி (விவசாயம்) சாஸ்திரம் முதலிய நூல்களை இயற்றியவர் அவர்.
- அந்த நூல் பொ. பாண்டித்துரைத் தேவருக்கு ஞாபகச் சின்னமாகச் சமர்ப்பிக்கப் பெற்றது.
- பாண்டித்துரைத் தேவர் மதுரையில் (1901–இல்) கூடிய சென்னை மாகாணக் காங்கிரசின் வரவேற்புக் குழுத் தலைவராயிருந்தார்.
- மதுரை தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர், அதன் தலைவர் மற்றும் தேசாபிமான – வித்தியாபிமான, பிரபுமானவர் பாண்டித்துரைத் தேவர்.
- பன்னூற் திரட்டு முதலிய நூல்களின் ஆசிரியர் பாண்டித்துரைத் தேவர்.

பன்னூற் திரட்டு என்னும் நூலைப் பாண்டித்துரைத் தேவர் எழுதி, 1897–இல் வெளியிட்டார். இந்நூல் சம்பந்தமானதொரு குறுஞ்செய்தி என்னவெனில், பாண்டித்துரைத் தேவர் 1896 இறுதியில் கும்பகோணம் சென்றிருந்தார். அப்போது அவர் உ.வே. சாமிநாதையர் வீட்டிற்கும் சென்றார்.

உ.வே.சா.–வின் அப்போதைய நூல் முயற்சியாக ‘மணிமேகலை’ அச்சாகி வருவதை அறிந்து, அதற்குப் பொருளுதவி செய்வதாகத் தெரிவித்தார். அதற்கு முன்பு ஒருமுறை (1894) உ.வே. சா.–வின் ‘புறப்பொருள் வெண்பா மாலை’ நூல் வெளிவர ரூ. 500 அளித்தார் தேவர்.


தாதாபாய் நௌரோஜி


பாண்டித்துரைத் தேவர்

கும்பகோணம் வருகையின் போது, தாம் பல நூல்களிலிருந்து நீதிகளைக் கூறும் செய்யுட்களைத் திரட்டி வகுத்து ஒரு நூல் எழுதியிருந்ததைக் காட்டி, அதை ஒருமுறை படித்துத் தரும்படி உ.வே.சா.–வைக் கேட்டுக் கொண்டாராம். அவ்வாறே நிகழ்ந்தது. ஒரு நூலை வெளியிடுவதில் உள்ள பணத் தட்டுப்பாடு மற்றும் தகவல் குறைவை நீக்க நூலாசிரியர்கள் சந்திக்கும் இக்கட்டுகளை இவை புலப்படுத்துகின்றன.

நரசிம்மலு நாயுடுவும் இந்நிலையைச் சந்தித்தார். அவருக்கும் பாண்டித்துரைத் தேவருக்குமான தொடர்பைக் காண்போம் :

1901 மே மாதத்தில் சென்னை மாகாண காங்கிரஸ் சபை மதுரையில் கூடியது. அம்மாநாட்டில் ஜி. சுப்பிரமணிய ஐயர், எம். வீரராகவாச்சாரியார், சேலம் விஜயராகவாச்சாரியர் உட்பட நரசிம்மலு நாயுடுவும் கலந்து கொண்டு உரையும் ஆற்றியுள்ளனர். அத்துடன், அச்சமயத்தில் பாண்டித்துரைத் தேவர் அழைத்ததின் பேரில் தமிழ்ச் சான்றோர் பலர் திரண்டு, மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவுதல் சம்பந்தமாகக் கலந்தாய்வு செய்தனர். அப்போது நாயுடுகாரு நிகழ்த்திய உணர்ச்சிகரமான உரையின் ஒரு பகுதி :

“அகத்தியர் நாவிலே பிறந்து, ஆரியத்தின் மடியில் வளர்ந்து, ஆந்திர, கன்னடா பாஷைகளோடு கூடிக் குலாவி, சங்கப் புலவர் நாவிலே சஞ்சரித்து, வித்துவான்களுடைய வாக்கிலே விளையாடி, திராவிட தேசத்திலே சக்கராதித்தியம் செய்து, சேதுபதியவர்களுடைய குன்றாக் கொடையைக் கொடிகட்டிப் பரவச் செய்து, பாண்டித்துரையவர்களுடைய பெருமையைப் பன்னூற்றிரட்டினால் பாரெங்கும் புகச்செய்து, கடைசியாக இந்த மதுராபுரியை மண்டலமெங்கும் மேன்மையடைச் செய்த, மதுராபுரியில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை ஸ்தாபித்துத் தமிழ்க் கொடியைத் தழைத்தோங்கச் செய்ய வாருங்கள்... தமிழ்த் தாயே, உமக்கு மங்களம் உண்டாகுக!”

மதுரைத் தமிழ்ச் சங்கம் உதயமான காலத்தில், அதில் நரசிம்மலுவின் பங்கை இந்த உரையின் மூலம் உணரலாம். அவர் அந்தத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராக இருந்தார். இவற்றின் மூலம் ‘தட்சிண இந்தியாவின் சரித்திர சாரசங்கிரகம்’ நூலை அவர் பாண்டித்துரைத் தேவருக்கு ‘ஞாபகார்த்தமாக’ச் சமர்ப்பித்ததின் பின்னணியை நாம் உணரலாம்.

அடுத்ததாக, அந்த நூல் தரும் வேறு சில செய்திகளைக் காண்போம் :

அந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிப் பெருமைப்படுத்துபவர் ஜி. சுப்பிரமணிய ஐயர்! ‘ஆசிரியர் மற்றும் உரிமையாளர், ‘சுதேசமித்திரன்’ என்றும், ‘முன்னாள் ஆசிரியர் ‘தி இந்து’ என்றும் தன் பெயருக்குப் பின்னால் அவர் குறிப்பிட்டுள்ளார் (மே 30, 1905). அப்போது சுப்பிரமணிய ஐயர் ‘தி இந்து’ இதழிலிருந்து விலகியமை (1905) தெரிகிறது.

‘நரசிம்மலு நாயுடு அவர்கள் இதமூளர் என்ற வகையில், என்னைவிட மூத்தவர்’ என அவர் குறிப்பிட்டுள்ளார். ‘தமிழ்ப் பண்டிதராக இல்லாவிட்டாலும், தமிழ் இலக்கியத்தில் அவருக்கு நல்ல பரிட்சயம் உண்டு. அனுபவத்தாலும் புத்தகப் படிப்பினாலும் தத்துவம், விவசாயம், வரலாறு முதலிய பல்வேறு துறைகளின் ஞானத்தை அவர் பெற்றிருக்கிறார். நான் அறிந்த வரையில் நரசிம்மலு நாயுடுவைத் தவிர, தென்னிந்தியாவில் வாசகர்களை ஈர்க்கும் வகையில் வரலாற்றை எழுதத்

தகுதிவாய்ந்த நபர்கள் குறைவு' எனக் குறிப்பிட்டுள்ளார் சுப்பிரமணிய ஐயர்.


தமிழ்நாட்டின் மூத்தப் பத்திரிகையாளரான ஜி. சுப்பிரமணிய ஐயரை விடவும் மூத்தப் பத்திரிகையாளர் நரசிம்மலு நாயுடு என்பதுவும் பதிவாகியுள்ளது.

'சரித்திரம் விவேகம் தரும்' என்னும் பேகன் பிரபுவின் மேற்கோளுடன் தனது நூல் முகவுரையைத் தொடங்கும் நரசிம்மலு நாயுடு, தனது ஆப்த சிநேகிதரும், சிறந்த தேசாபிமானியுமான சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தென்னிந்தியத் தேச சரித்திரத்தைப் பற்றித் தமது சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுதும்படி கேட்டுக் கொண்டமையால் அடிக்கடி எழுதிக் கொண்டு வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

அன்பர்கள் பலரும் அவற்றைத் திரட்டிப் புத்தகமாக வெளிக்கொணர்ந்தால், பெரிதும் பயன்படும் என்று கேட்டுக் கொண்டாராம். அவர் களில் ஒருவராகத் தென்னாப் பிரிக்கக் கண்டம் நாட்டாலில் வசித்த விருத்தாச்சலம் பிள்ளையவர்கள் அந்த நூலின் இருநூறு பிரதிகளை வாங்கிக் கொள்வதாக வாக்குத் தந்தபடியாலும் புத்தகத்தைப் பதிப்பிக்கத் துணிந்ததாகக் குறிப்பிடு கிறார்.


ஜி.சுப்பிரமணிய ஐயர்

தமிழ் நூல் ஒன்று சுடச்சுட வெளிநாட்டில் விற்பனையாகிறது என்ற பெருமையும் இந்த நூலுக்கு உண்டு.


உ.வே.சா.

தென்னாட்டில் மத்திய காலத்தில் ஆண்ட வீர, தீர அரசர்களுடைய சரித்திரங்களை எழுதும்போது, அவர்கள் காலத்தில் இந்நாட்டை அலங்கரித்த அடியார், ஆழ்வார், ஆச்சாரியார், வித்வான்கள், தர்மவான்கள், தேசாபிமானிகள் முதலியவர்களின் சரித்திரங்களையும் எழுத வேண்டியது என்ற நோக்கில் இந்நூலைப் பதிப்பிப்பதாக எழுதுகிறார் நாயுடுகாரு.

'சேர, சோழ, பாண்டியர் தம்தம் நாடுகளில் நிம்மதியாக ஆண்டு கொண்டிருக்கையில், கொங்குநாட்டார் என்னும் ஒரு ஜாதியார் கிளம்பி, சேர நாட்டின் கீழ்ப் பாகங்களைப் பிடித்துக் கொண்டு, ஹைசாள பல்லாளரையும் தாக்க, அந்த ஹைசாளர், கொங்கர்களைத் தாக்க அவர்களுடைய கொங்கு நாடு சோழர் வசமாகிவிட்டதாகத் தெரிய வருகிறது' என்றும் அவர் குறிப்பிடுகிறார். மூவேந்தர்களையும் விடுத்துக் கொங்குநாட்டைத் தனி நாடாக – மண்டலமாக உருவகம் தருவதைக் காணலாம். இவ்வாறான நோக்கில் எழுதிய தமிழ் நூலாசிரியர்களில் அவர் மூத்தவர் என்றே தோன்றுகிறது.

நூலை எழுத உதவிய நீண்ட நூல் பட்டியலைத் தந்திட்ட முதல் நூலாசிரியர் நரசிம்மலு நாயுடுவாகத்தான் இருப்பார். ரிக் வேதம், யஜூர் வேதம், பாரதம், சிவ புராணம் முதலிய 44 சமஸ்கிருத நூல்களையும், பாகவதமு, ஆந்திர கவுலு சரித்திரமு, ஆமுக்த மாலியோதயமு முதலான 20 தெலுங்கு நூல்களையும் கம்பர் இராமாயணம், வில்லிப்புத்தூரார் பாரதம், கர்நாடக ராஜாக்கள் கதை, சீவகசிந்தாமணி, தொண்டை மண்டல துளுவ வேளாளர் நடவடிக்கைச் சரித்திரம், சேலம் ஜில்லா கோர்ட்டுத் தீர்ப்பு, தஞ்சை நாயக்கர் விருத்தாந்தம், சென்னை பசவ புராணம், சிலப்பதிகாரம், கலிங்கத்துப் பரணி முதலிய 47 தமிழ் நூல்களையும் விஜயநகர வரலாறு, கால்டுவெல்லின் இந்திய வரலாறு, புக்கானனின் மைசூர்ப் பயணம், பல்வேறு மாவட்ட கஜட்டியர்கள், மானுவெல்கள், ராணடேவின் மராத்தியர் வரலாறு, புருவென்சா பாதிரியாரின் நூல் முதலிய 98 ஆங்கில நூல்களையும் மிக நீண்ட பட்டியலாகத் தந்துள்ளார்.

இறுதியாக, 'இந்தத் தட்சிண தேசத்தின் மத்திய காலச் சரித்திரத்தை ஆங்கிலம், ஆந்திரம் முதலான பாஷைகளில் இது வரையிலும் எவரும் துணிந்து வந்ததாகத் தோன்றவில்லை. ஆகவே, ஆனை உலாவுங் காட்டில் பூனை உலாவத் துணிந்ததைப் போல நான் இதைத் தமிழ் பாஷையில் முதலில் எழுதத் துணிந்தேன்' என்று நரசிம்மலு நாயுடுகாரு குறிப்பிட்டுள்ளார்.

தாய்மொழி தெலுங்காக இருப்பினும் சேலம் பகடாலு நாயுடு அவர்கள் செய்த தமிழ்த் தொண்டை எண்ணி, கரம்கூப்பி வணங்கத் தோன்றுகிறது. ●

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 38 அக்டோபர் 2020 இதழ் : 9

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர்: **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **து. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும்,
சம்பவங்களும் கற்பனையே.

படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ
ஆசிரியருக்கு உரிமை உண்டு.

'ஓம் சக்தி'யில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகள்
அவற்றின் எழுத்தாளர்களுக்கு உரியவையே தவிர,
பத்திரிகை அவற்றிற்குப் பொறுப்பேற்காது.

தனிப் பிரதி ரூ.15/-
ஆண்டு சந்தா ரூ. 265/-
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/-
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை "SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI" என்ற பெயரில் D.D.–யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423
வெளியிட்டோர் : **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com



சமையல்

மூங்கில் அரிசி அல்வா

தேவையான பொருள்கள் : *மூங்கில் அரிசி மாவு : 1 கப், சர்க்கரை இல்லாத கோவா : 1/2 கப், கோதுமை மாவு : 2 டீஸ்பூன், நெய் : 1/4 கப், வெல்லம் : 1 கப், முந்திரி, திராட்சை, பாதாம் : தேவைக் கேற்ப, பால் : 4 டீஸ்பூன்.*

செய்முறை :

1. அடுப்பில் வாணலியை வைத்துக் கொஞ்சம் நெய்விட்டுச் சூடானதும் பாதாம், முந்திரி, திராட்சையைச் சேர்த்து வறுத்தெடுத்துத் தனியாக வைக்கவும்.
2. அதே வாணலியில் மூங்கில் அரிசி மாவு, கோதுமை மாவை வாசம் வரும் வரை வறுத்து எடுத்துக் கொள்ளவும்.
3. அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து வெல்லம், தண்ணீர் சேர்த்து வெல்லத் தைக் கரைய விடவும். பிறகு வடி கட்டித் தனியாக வைக்கவும்.
4. அடிக் கனமான பாத்திரத்தில் வறுத்த மூங்கில் அரிசி மாவு, கோதுமை மாவு, பால், வெல்லக் கரைசல், சர்க்கரை இல்லாத கோவாவைச் சேர்த்துக் கை விடாமல் கிளறவும். இடையிடையே நெய்விட்டுக் கிளறவும்.
5. கலவை வாணலியில் ஒட்டாமல் வரும்வரை கிளறி இறக்கி முந்திரி, திராட்சை, பாதாம் தூவிப் பரிமாறவும்.

– பி. சந்திரகலா,
சென்னை.

கட்டுரை

உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்!

அண்மையில் இந்தியாவின் எல்லையில் லடாக் கல்வான் பள்ளத்தாக்கில் நடந்த சீனாவின் அத்துமீறலால் இந்திய மக்களிடையே பெரிய கலக்கத்தையும், சீனாவின் மேல் வெறுப்பையும், கோபத்தையும் கிளப்பி விட்டது.

பாரதப் பிரதமர் இதில் வெகுண்டு, சீனாவின் இறக்குமதிப் பொருள்களையும்,



வியாபாரம், இறக்குமதி ஒப்பந்தங்கள் அனைத்தையும் உடனே நிறுத்த வேண்டும் என்று தீர்மானமாகச் சொன்னார். மக்களில் பெரும்பாலும் அதை ஏற்றுக் கொண்டனர். ஆயினும் உடனுக்குடன் இது எவ்வாறு முடியும்? பொருளாதாரத்திலும், ஏற் படுத்திய ஒப்பந்தங்களையும் என்ன செய்வது என்று சிலர் திகைத்தனர்.



டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதன்

இந்தியா – சீனா வியாபாரங்களில் சீனாவின் பங்கு இந்தியாவைவிட பன்மடங்கு மிகுதியாக உள்ளது. இந்தியத் தேவையில் 60% சீனாவிடமிருந்து இறக்குமதியாகிறது. சீனாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி மிகவும் குறைவாக உள்ளது. இந்திய – சீனா வியாபாரத்தில் அதிக வேறுபாடு உள்ளது. சீனாவின் வியாபாரத்தில் விலை மிக மலிவு என்பதே காரணம். அத்துடன் அவர்களது விற்பனை முயற்சியும் தந்திரமும் அதிகம்.

சீனப் பொருள்கள் விலை மலிவாக இருப்பதில் ஒன்றை அறிய வேண்டும். இரு சக்கர வாகனங்களை (Two Wheeler) சீனா உதிரிப் பாகங்களாகப் பெட்டியில் போட்டு ஏற்றுமதி செய்வார்கள். இதில் அதை முழுமையாக ஆக்குவதின் செலவும், ஏற்றுமதியின் செலவும் வெகுவாகக் குறைகிறது. இதைப் பெற்றவர் இங்கு மெக்கானிக்கிடம் கொடுத்து முழுமையாக்க

அசோகா என்று பெயர். இந்தப் பெயர் வைத்ததால், இது இந்தியப் பென்சில் என்றே நினைக்கத் தோன்றியது.

மேலும் சைனா வியாபாரி ஒரு பெரிய மூட்டையில் சில்க் துணிகளைச் சைக்கிள் பின்னால் வைத்துத் தெருவில் சுற்றி வருவார். விலை மலிவால் அந்தச் சில்க் துணி நல்ல வியாபாரமாகும். இது மாதிரியே சிறுசிறு விளையாட்டுப் பொம்மைகள். இதுவே நாளடைவில், எண்ணற்ற பொருள்களாக இன்று கடைகளில் மலிந்து குவிந்து இருக்கின்றன. பார்ப்பதற்கு அழகாகவும் விருப்பமும் (Attract) உண்டாவதால், மக்கள் அவற்றை அள்ளி அள்ளி வாங்குகிறார்கள்.

நாளடைவில் சீனாவிலிருந்து இறக்குமதியாகும் பொருளின் பட்டியல் மிகமிக அதிகமாகிவிட்டன. எனினும் அவை தரம் குறைந்தவையாகவே பலர் கூறுகின்றனர்.

இன்று கடைகளில் மலிந்து குவிந்து இருக்கின்றன. பார்ப்பதற்கு அழகாகவும் விருப்பமும் (Attract) உண்டாவதால், மக்கள் அவற்றை அள்ளி அள்ளி வாங்குகிறார்கள்.

நாளடைவில் சீனாவிலிருந்து இறக்குமதியாகும் பொருளின் பட்டியல் மிகமிக அதிகமாகிவிட்டன. எனினும் அவை தரம் குறைந்தவையாகவே பலர் கூறுகின்றனர்.

சீனப் பொருள்கள் எவை எவை எனத் தெரிந்து கொள்வது நல்லது. ஜியோமி உட்பட அதன் டி.வி. பெட்டிகள், கம்ப்ரெசர்கள், எல்.இ.டி. சிப்ஸ், மொபைல்,

ரசாயனப் பொருள்கள் குறிப்பாக விவசாயப் பொருட்கள், கடிகாரங்கள், இசைக்கருவிகள், விளையாட்டுப் பொம்மைகள், மரச்சாமான்கள், மெத்தைகள், கார்கள், கார் உதிரிபாகங்கள், சாலைகள், ரயில்வே பாதை ஒப்பந்தம் எனப் பல தொழில் முதலீடுகளின் மதிப்பு சுமார் ரூ. 36,000 கோடி.

இவ்வளவு மலிவாக எப்படிச் செய்ய முடிகிறது? அவர்களது வேலை 10 மணி நேரம். நமது நாட்டைப் போல வேலை நேரத்தில் அரட்டையடிக்கவும், சிகரெட் குடிப்பது, காப்பி டிபனுக்குப் போவதும் அங்குக் கிடையாது. வேலை நேரத்தில் மிகக் கண்டிப்பு.

சீனாவில் ஒரே கட்சியான கம்யூனிஸ்ட் இருப்பதால், சங்கங்கள், மக்கள் உரிமைப் போராட்டம், வேலைநிறுத்தம் முதலியவற்றிற்குச் சாத்திய மில்லை. மேலும் கைதிகளும் சம்பளமில்லாமல் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். கடினமான, உண்மையான, கண்டிப்பான வேலையால் அதிக உற்பத்தி செய்யப்பட்டு மலிவான விலையில் கிடைக்க உதவுகிறது.

இதை எழுதும்போது மாமனிதர் அப்துல்கலாம் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. விண்வெளிக் கலங்கள் செய்யும் போது, அவரது தலைவர் விக்ரம் சாராபாய் அதில் ஒரு தவறைக் கண்டுபிடிக்கிறார். அன்று வெள்ளிக்கிழமை சாயங்காலம். அதைத் திங்கட்கிழமை காலைக்குள் சரிசெய்து விட வேண்டும் என உத்தரவு.

ஒரு வார வேலை, இரண்டு நாட்களில் செய்ய வேண்டுமே! ஆனால் செய்தாக வேண்டும். இரண்டு நாளும் உறக்கம், உணவு உண்ணாமல் அந்த வேலையை முடிக்கிறார்கள். வேலையின் கடமையை உணர்ந்து சலிப்பில்லாமல் செய்த வேலை. இந்த உணர்வு நமது தொழில்களில் இருந்தால் உற்பத்தி வெகுவாகப் பெருகும். இந்த மனப்பான்மை தொழில் அதிபர்களுக்கும் வர வேண்டும்.



செய்தித்தாள்களில் சில தொழில் அதிபர்கள் குறிப்பாக சிறுகுறு தொழில் நிறுவனங்கள், ‘உடனே சீனப் பொருட்களை, ஒப்பந்தத்தை நீக்க வேண்டும் என்றால் அது சாத்தியமா? பொருள் நஷ்டம், பண விரயம் ஏற்படாதா?’ என்று வினா எழுப்புகிறார்கள்.

ஆம், உண்மைதான். ஆனால், சீனா அக்கிரமமாக நம் எல்லையில் அத்துமீறும்போது, அதை நாம் பொறுத்துக்கொள்ள வேண்டுமா?

ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்ட போதும் இது மாதிரியேதான் பேசிக் கொண்டு, அடிமைத் தனத்தை ஆயாசமாகப் பொறுத்துக் கொண்டிருந்தோம். 20 இலட்சம் ஆங்கிலேயர்களை 30 கோடி இந்தியர்கள் விரட்ட முடியவில்லையே? அடிமைத்தனம், தேசாபிமானம் இல்லாமை, சுதந்திரத்தின் பெருமையைக் கொண்டாட அவாவின்மை, சுதந்திரத்திற்காகப் போராடி உணர்ச்சியூட்டத் திறமின்மை என்பதே இதன் காரணம். இதைத் உணர்ந்த பாரதியார், “பாரத நாடு பழம்பெரு நாடு / நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்” என்று பாடினார்.

ஆம். இதுதான் நமது தேசீயம். இப்போது நம் கடமையென்ன? சீனாவிடமிருந்து வாங்கும் பொருள்களை நாமே துணிந்து தயார் செய்வோம்! அதற்கான முன்முயற்சியை உடனே ஆரம்பிப்போம்.

நம் நாட்டைக் கல்வியில் குறிப்பாகத் தொழிற்கல்வி நுட்பத்திலும் செய்வன்மையிலும் வளமாக்கிக் கொண்டிருக்கிறோம். சாப்ட்வேர் (Software) துறையில் இந்தியர்கள் மிகவும் சிறந்தவர்கள். அமெரிக்காவே இவர்களை நம்பியிருக்கிறது. தற்போது உயர் கல்வி, தொழிற்கல்வி எல்லாவற்றிலும் தேர்ச்சி பெற்ற இளைஞர்கள் உள்ளனர்.


தொழில் ஞானம் வாழ்வில் வளம் பெருக்கும். நாடும் உலகில் உயர்ந்து நிற்கும். ஆரம்ப நிலையில் சிறிதோ, பெரிதோ தொய்விருந்தாலும் நம் சிந்தனை எழுச்சியால் விரைவில் உயர்நிலை அடைவோம்.

நாமும் நாடும் நலம் வளம் பெறும் பொழுது, “பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால் / புன்மையிருட்கணம் போயின யாவும்” என்ற பாரதியின் பாட்டை நாம் எல்லோரும் சேர்ந்து பாடுவோம்.

அதற்காகத்தான் அவரது பாடல் மூலமாகவே “உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்” என்று உறுதிமொழியெடுப்போம். பிரதமர் மோடியின் உறுதிக்கு உரம் கொடுப்போம்.

கட்டுரை

'ஆற்ற' எனும் சொல்லின் ஆற்றல்



எண்ணிக்கையற்ற, கணக்கிட முடியாத, அளவிட முடியாத, இவ்வளவு ஏன் கற்பனை செய்துபார்க்க முடியாத ஒன்றை நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போன்று விளக்கிவிடுகின்ற ஆற்றல் "ஆற்ற" என்ற அழகிய சிறிய சொல்லுக்கு இருக்கிறது.

"ஆற்ற" என்னும் இந்தச் சொல்லை அதன் ஆற்றலைச் சற்றும் குறைக்காமல் பயன்படுத்தித் தாங்கள் கூற வந்ததைப் பசுமரத்தாணி போன்று நம் நெஞ்சங்களில் பதித்துவிட்டுச் சென்ற உயரிய படைப்பாளிகள் இருவரின் படைப்புகளில் உள்ளதைப் பார்ப்போம்.



திருப்பாவை பாடிய ஆண்டாள் பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை. பூமாலையாலும், பாமாலையாலும் திருமாலைக் கட்டிப்போட்ட பக்தகவி. 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே' என்று சபதம் செய்து திருவரங்கனையே தன் மணாளனாக வரித்தவள். அவ்வாண்டாள் இயற்றிய திருப்பாவைப் பாசுரங்கள் இரண்டில் "ஆற்ற" எனும் சொல் எவ்வளவு அழகாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்தால் உள்ளபடியே வியந்துபோவோம்.

"நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்" என்ற திருப்பாவையின் பத்தாவது பாசுரத்தில் குறிப்பிடப்படும் தோழி ஆழ்ந்தத் தூக்கத்தில் இருக்கிறாள். ஆண்டாளும் மற்ற தோழிகளும் அவளது இல்லத்தின் வாயிலில் நின்றுகொண்டு எத்தனை முறை அழைத்தாலும் அவள் வாசற் கதவைத் திறக்கவில்லை. இல்லத்தின் உள்ளேயிருந்த போதிலும் அவள் பதில் மொழி ஏதும் கொடுக்கவில்லை. சற்றே சினம் வருகிறது வெளியிலிருந்து அழைப்பவர்களுக்கு.



எஸ். ஸ்ரீதுரை

"பண்டொருநாள் கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகருணனும், தோற்றும் உனக்கே பெரும் துயில் தான் தந்தானோ? தன் அண்ணன் தவறு செய்திருந்தாலும் அவனுக்காகப் போராடித் தானே கூற்றுவனுக்கு இரையான கும்பகர்ணன் தூங்கும் போட்டியில் உன்னிடம் தோற்றுப்போய்த் தன்னுடைய தூக்கத்தையும் சேர்த்து உன்னிடத்தில் கொடுத்துவிட்டானோ?" என்று இவர்கள் எழுப்பும் கேள்விக்கும் பதிலில்லை அத்தோழியிடமிருந்து.

இதன் பிறகுதான் தமிழ் விளையாடுகிறது.

இந்தத் தோழியோ தன் தூக்கத்தால் அந்தக் கும்பகர்ணனையே தோற்கடித்துவிட்டு இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறாள். இந்தப் பெருந்தூக்கத்தினை என்னவென்று சொல்லி அழைப்பது?

"ஆற்ற அனந்தல் உடையாய்...

தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்...!"

"அவளது தூக்கத்தை யாராலும் அளவிட முடியாது. எனவே அதனை 'ஆற்ற' என்ற அழகிய உரிச்சொல்லால் காட்சிப்படுத்துகின்றாள் ஆண்டாள்.

"அளவிட முடியாத பெருந்தூக்கத்தினை அதாவது ஆற்ற அனந்தலைக் கொண்டவளே. உன் தூக்க நிலையிலிருந்து தெளிவு கொண்டு எழுந்துவந்து கதவைத் திறப்பாயாக...!" என்ற

அந்தத் திருப்பாவைப் பாசுர வரிகளைப் படிக்கும் போது நமக்கும் அந்தப் பெருந்தூக்கத் தோழியை ஓர் உலுக்கு உலுக்கி எழுப்ப வேண்டும் போலவே தோன்றுவது உண்மை.

அடுத்து நாம் பார்க்க இருப்பது, "ஏற்ற கலங்கள்" என்று தொடங்கும் திருப்பாவையின் இருபத்தோராவது பாசுரம்.

ஒருவழியாகத் தன்னுடைய தோழிமார்களை எல்லாம் எழுப்பி அழைத்து வருகின்ற ஆண்டாள், ஆயர்பாடிக்கு அரசனாகிய நந்தகோபனின் அரண் மனையை அடைந்து கண்ணபிரானின் வளர்ப்புத் தந்தை நந்தகோபன், வளர்ப்புத் தாய் யசோதை, அன்புக் காதலியும் மனைவியுமாகிய நப்பின்னைப் பிராட்டி, கண்ணன் மற்றும் அவனுடைய அண் ணன் பலராமன் ஆகியோரையும் துயிலெழுப்பும் படலத்தைத் தொடங்குகின்றாள்.

இதற்கு முன்னர் பதினோராவது திருப் பாவைப் பாசுரத்தில் அந்தக் கோகுலத்தின் செல்வச்செழிப்புமிக்க பெண் ஒருத்தியைச் "சிற்றாதே பேசாதே செல்வப்பெண்டாட்டி" என்று கூறி அவள் கோபிக்காதபடி துயிலெழுப்ப வேண்டி யிருக்கிறது. அந்தச் செல்வச் செழிப்புமிக்க தோழியின் தந்தை பெற்றிருந்த செல்வ வளத்தைக் குறிப்பதற்குக் "கற்றுக் கறவை கணங்கள் பல கறந்து செற்றார் திறல் அழியச் சென்று செருச் செய்யும் குற்றம் ஒன்றில்லாத கோவலர் தம் பொற் கொடியே...?" என்று வருணிக்கின்றாள் ஆண்டாள்.

கன்றுகளை உடைய பசுமாடுகளின் கூட்டங் கள் பலவற்றுக்கு உரிமையாளராம் அந்தப் பணக் காரத் தோழியின் தந்தை.

கோகுலத்தின் குடிமகன் ஒருவருக்கே இத் தனை செல்வம் என்றால், அந்தக் கோகுலத் துக்கே அரசரான நந்த கோபருக்கு எத்தனை


கும்பகர்ணன்

ஆவினங்கள் உடைமையாக இருக்கும். அத் தகைய ஆகப்பெரிய பசுச்செல்வத்தை எப்படித் தான் அழைப்பது. இதோ "ஆற்ற" என்ற சொல் தான் நினைவுக்கு வருகிறது ஆண்டாளுக்கு.

"ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப மாற்றதே பால்சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள் ஆற்றப் படைத்தான் மகனே, அறிவுறாய்...!"

பால் கறப்பவர்களுக்கு நந்தகோபன் திருமாளிகையில் வேலையே இல்லையாம். பசுக் களின் மடியின்கீழ் பாத்திரத்தை வைத்துவிட்டால் போதும். அது எவ்வளவு பெரிய பாத்திரம் என்றாலும், அந்தப் பாத்திரம் நிரம்பி வழியும் அளவிற்குத் தம்மிடம் மிச்சம்மீதி வைத்துக் கொள்ளாமல் பாலைப் பொழிகின்ற வள்ளல் களாகிய பசுக்கள் கணக்கில்லாமல் இருக்கிறதாம் நந்தகோபரிடத்தில்.

"வள்ளல் பெரும்பசுக்கள் ஆற்றப் படைத்தான்"

நந்தகோபரின் செல்வச்செழிப்பினை இதைவிட அருமையாக வேறு எப்படிக் கூறிவிட முடியும் என்று தோன்றுகின்றதல்லவா? தன்னு டைய வளர்ப்புத் தந்தையின் செல்வச்செழிப்பினை ஆண்டாள் தனது திருவாக்கினால் புகழக் கேட்டு விட்ட கிருஷ்ணனும் திருப்பாவைப் பெண்கள் அனைவருக்கும் "ஆற்ற" அருள்புரிந்திருப்பான் என்பதில் ஐயமில்லை.

இப்போது திருவள்ளுவர் பக்கம் கொஞ்சம் திரும்புவோம்.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்னும் படியான ஒரு நிலையினை அடைய வேண்டும் என்பதே மனிதராகப் பிறந்த எல்லோரும் விரும்பு வது. அந்நிலையை அடைய திருவள்ளுவர் ஓர் எளிமையான தீர்வினைக் கூறுகின்றார்.

"ஆசையை அறுத்தொழியுங்கள்" என்பதே அவர் நமக்குக் கூறும் தீர்வு. அதனையும் எப்படி எப்படி அறுப்பது என்றால், அதற்கும் பதில் இருக்கிறது திருவள்ளுவரிடம் –

"அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை

தான்வேண்டும் ஆற்றான் வரும்"

ஆசைக்கு அளவேது. மானிடனின் ஆசைகளோ அளவில்லாதவை. அளவிற் பெரியவை. ஆற்றப் பெரிய ஆசைகளை

உடையவன் மனிதன். எனவேதான் அந்த ஆசைகளை அறுக்க அவன் எடுக்கின்ற முயற்சியும் தன்னிகரற்றதாக இருக்க வேண்டும். எனவேதான் அறுக்க அறுக்க முளைத்துக் கொண்டிருக்கும் எண்ணிலடங் காத தன்னுடைய ஆசைகளை ஒரு மனிதன் மிகுந்த பிரயாசையின் துணைக் கொண்டு "ஆற்ற" அறுத்தொழித்தால் அதன்பின்னர் அவன் வருந்தாமல், இருக்கின்ற நிலை மையும் அதற்கேற்ற வினைச்செயல்களும் தாமாகவே அம்மனிதனை வந்தடையுமாம்.



"ஆற்ற அனந்தல்" என்பதைப் போல "ஆற்ற அறுத்தல்" என்ற புதியதொரு சொல் லாட்சியை நமக்குக் காட்டியருள்கின்றார் திருவள்ளுவர்.

இதோ இன்னுமோர் இடத்தில் "ஆற்ற" என்ற சொல்லின் மிகப்பெரிய அதேசமயம் மிக நுண் ணிய பொருளுக்கு எடுத்துக்காட்டாய்த் திருவள்ளுவர் தீட்டும் ஓவியத்தைக் காண்போம்.

சிறு குழந்தை ஒன்றிடம் சென்று, "உனக்கு உன் அம்மாவைப் பிடிக்குமா?" என்று கேட்டால், "ம்... நிறையப் பிடிக்கும்!" என்று பதில் கூறும்.

"நிறையப் பிடிக்கும் என்றால் எவ்வளவு பிடிக்கும்?" என்று கேட்டுத்தான் பாருங்களேன். வார்த்தைகளால் விவரிக்கத் தெரியாத அந்தக் குழந்தை, தன் பிஞ்சுக் கரங்கள் இரண்டையும் தலைக்குமேல் தூக்கி அகலமாக விரித்துக் காட்டி, "இவ்ளோ பிடிக்கும்" என்று தன் மழலைக் குரலில் பதில் கூறும்.

அக்குழந்தையைப் பொறுத்தவரையில் கைவிரித்துக் காட்டுவதுதான் "ஆற்ற" என்பதன் மறுபதிப்பு. தன் அம்மாவிடம் அதற்கு இருக்கும் அன்பும் பாசமும் எல்லையற்றவை என்பதே அதன் பொருளாகும். இதோ அத்தகைய குழந்தைமையை வைத்தே ஒரு வார்த்தை விளையாட்டை விளை யாடுகின்றார் நம் திருவள்ளுவப் பெருந்தகை.

தாம் சாப்பிடும் உணவின் மிச்சத்தை யாரேனும் நமக்குக் கொடுக்க முன்வந்தாலும் சரி, நாம் சாப்பிடும் உணவில் யாராவது ஒருவர் தமது கையை வைத்துப் பிசைந்தாலும் சரி, நமக் கெல்லாம் எத்தகைய கோபமும் அருவெறுப்பும் ஏற்படும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

அதேசமயம், நாம் பெற்றெடுத்த மழலைச்செல்வம் தன்னுடைய கலத்தில் வைத்திருக்கும் உணவினைப் பிசைந்துக் கூழாக்கி "இந்தா சாப்பிடு" என்று தன்னுடைய பிஞ்சுக்கைகளால் நமக்குக் கொடுத்தவுடன், நம் மனம் எத்தனை மகிழ்ச்சி கொள்கிறது. உண்மையில், வயதில் பெரியவர்கள் உட் கொள்ளும் அறுசுவை உணவு வகைகளுடன் ஒப்பிட்டால், குழந்தைகளுக்கு ஊட்டப்படும் நெய்யும் பருப்பும் கலந்த அன்னம் அத்தனை சுவையானது என்று கூற முடியாது. அதையே நம் குழந்தை தன் அழகான தளிர்க் கைகளால் பிசைந்து கூழ் வடிவத்தில் தரும்போது, அது அமுதத்தைவிடச் சுவையானதாகி விடுகின்றது.

மனிதர்கள் உண்ணும் உணவைவிட, தேவர்கள் உண்ணும் தேவாமிருதம் சுவை மிகுந்த தாகக் கருதப்படுகின்றது. ஆனால், அவரவர் பெற்றெடுத்த குழந்தைகளால் பிசையப்பட்ட உணவோ, அந்தத் தேவாமிருதத்தைவிடக் கணக்கிட முடியாத அளவில் சுவை மிகுந்ததாகி விடுகின்றது.

இதோ திருவள்ளுவர் களம் புகுந்து விளையாடுகின்றார் –

"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

"ஆற்ற" என்ற தமிழ்ச் சொல்லின் ஆற்றலை நம்பிக் கவிதைக் களத்தில் களமாடிய ஆண்டாள் மற்றும் திருவள்ளுவர் இருவரின் கவிபாடும் ஆற்றல் உள்ளபடியே நம்மை வியக்க வைக்கின்றதல்லவா...?



வைகைக் கரையில் வரலாற்றுக்கான யுத்தம்

வெறுமனே இலக்கியப் பாடல்கள் மட்டுமே பாடித் தொன்மையை விளக்கிக் கொண்டிருக்க முடியுமா? என்ன சான்று இருக்கிறது என்று கேட்டவர்களுக்குத் தகுந்த சான்றுகளுடன் நிரூபிக்கப்பட்ட இடம்தான் கீழடி. புராதன நதிக்கரையான வைகை நதி நாகரிகமாக வெளிப் பட்டிருக்கிறது கீழடி.

ஆம். சங்கத் தமிழுக்குச் சான்றளித்த இடம் கீழடி. சான்று செய்தவர் அமர்நாத் ராமகிருஷ்ணா. அதற்குப் பரிசாக உடனடியாக இடமாற்றம் செய்து மகிழ்ந்தது இந்தியத் தொல்லியல் துறை!

கங்கை நதிச் சமவெளிப் பகுதியில்தான் மனிதர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். தென்னிந்தியப் பகுதிகளில் கட்டடக் கலையுடன் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் எதுவும் இல்லை என்பதால், கங்கைச் சமவெளிப் பகுதியைத்தான் முதன்மைப் படுத்தியது இந்திய தொல்லியல் துறை. ஆனால் கீழடி இந்த வரலாற்றையே கலைத்துப் போட்டு விட்டது.

அமர்நாத் ராமகிருஷ்ணா தலைமையிலான அகழாய்வுக் குழுவினர் கடந்த 2013 அக்டோபரில் தொடங்கி செப்டம்பர் வரையில் வைகை நதிக்கரையில் தொல்லியல் இடங்களைத் தேடிக் களஆய்வு நடத்தினர்.

வைகை நதியின் பிறப்பிடமான வருசநாடு தொடங்கி நிறைவுறும் பகுதியான அழகன் குளம் வரையில் இந்தக் களஆய்வு செல்கிறது. ஆற்றின் இரண்டு பக்கக் கரைகளில் உள்ள நிலப்பகுதியை 5 கிலோ மீட்டர் அகலத்திற்குத் தொல்லியல் பகுதிக்காக ஆய்வுகளை மேற்கொண்டபோது, கிடைத்த இடம்தான் மதுரைக்கு அருகில் இருக்கும் சிலைமான் பகுதியில் உள்ள பள்ளிச்சந்தை எனும் கிராமத்தில் இருக்கும் கீழடி.

சுமார் 110 ஏக்கர் பரப்பளவில் பரந்துவிரிந்த தென்னந்தோப்புகள் கொண்ட பகுதி அது. வைகை நதி தோன்றி அது நிறைவுறும் பகுதி வரையில் உள்ள 193 கிராமங்கள் தொன்மை வாய்ந்தவை எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

முதல் கட்ட கீழடி அகழாய்வு 2014 மார்ச் மாதம் தொடங்கி 2015 செப்டம்பர் 30 வரையிலும், இரண்டாம் கட்ட அகழாய்வுப் பணிகள் 2016 ஜனவரி முதல் செப்டம்பர் 30 வரையில் நடத்தப் பட்டன. இந்த இரண்டு கட்ட அகழாய்வில் கிடைத்த தொல்லியல் எடுப்புகள் உலகளவில் உள்ள தொல்லியல் ஆர்வலர்களின் கவனத்தைக் கவர்ந்தன.

முதல் இரண்டு கட்ட அகழாய்வில் கிடைத்த தொல்லியல் பொருட்களைக் கால நிர்ணயம்

செய்வதற்கு அமெரிக்காவில் உள்ள BETA நிறுவனத்திற்கு அனுப்பப்படுகின்றன. அவை கி.மு. 300–க்கு முன்னர் வாழ்ந்த மக்களால் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் எனக் கரிமத் தேதி நிர்ணயம் செய்யப்படுகிறது. இன்றைய அறிவியல் தொழில் நுட்பத்தின் மூலம் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட வகையில் இந்த ஆய்வுகள் வெளிப்பட்டன.


தன் பெயரைத் தானே எழுதும் வல்லமை கொண்ட சமுதாயத்தினர் 2300 ஆண்டுகளுக்கு முன்னர் வைகை நதிக்கரையில் நாகரிகமான முறையில் வாழ்ந்துள்ளனர். அதற்குச் சான்றாகச் சாமானியர்கள் பயன்படுத்தும் பானை ஓட்டின் மேல் தமிழி (தமிழ் பிராமி) எழுத்துக்கள் பொறிக் கப்பட்டுள்ளன.

1100 டிகிரி வெப்பத்தை உண்டாக்கிச் சுடுமண் குழாய் அமைத்து, அதில் கழிவு நீர் கடத்துவதற்கான தொழில்நுட்பம் கீழடி மக்களுக்குத் தெரிந்திருக்கிறது. தொட்டி வடிவி லான பெரிய பானைகள் கிடைத்ததன் மூலம் அவை அங்குச் சாயப் பட்டறைகள் இருந்ததற் கான சான்றாக அமைந்துள்ளன. அந்த வகையில் நெசவுப் பட்டறைகளும் இருந்துள்ளன. பஞ்சை நூலாக்கும் 180–க்கும் மேற்பட்ட தக்களி ஊசிகள் கிடைத்துள்ளன. 20–க்கும் மேற்பட்ட எலும்பினா லான கூரிய முனைகள் கொண்ட தூரிகை, தறியில் தொங்கவிடும் கருங்கல் செம்பினாலான ஊசிகள் எனத் தறிமேடைக்கான அனைத்துப் பொருட்களும் கிடைத்துள்ளன.

கல்மணிகள், கண்ணாடி மணிகள், சுடுமண்ணாலான மணிகள், பெண்கள் அணியும் தொங்கட்டான், வளையம், தங்கத்தினாலான 7–க்கும் மேற்பட்ட ஆபரணங்கள், சங்கு வளையல் கள், தந்தத்தில் வளையல் துண்டுகள், சீப்புகள் என 4000–க்கும் மேற்பட்ட மதிப்புமிகு அணிகலன் கள், விளையாட்டிற்கான பகடைக்காய்கள், ஆட்டக்காய்கள், வட்டச் சில்லுகள் மொத்தத் தொல்லியல் மேட்டில் 10 சதவீத நிலத்தில் இத் தனை பொருள்கள் கிடைத்துள்ளன.

மேலும் உடைந்த ஆணிகள், கத்திகள் என 180–க்கும் மேற்பட்ட இரும்பாலான பொருள்கள் கிடைத்திருக்கின்றன.

ஏனோ இரும்பை உருக்கும் உலைகள் இருந்ததற்கான சான்றுகள் தற்போது வரை



கீழடியில் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள்

கிடைக்கவில்லை. இரும்பை உருக்க 1500 சென்டிகிரேட் வெப்பம் தேவை. ஆனால், கீழடியில் கிடைக்கப்பெற்ற கருப்பு, சிவப்பு நிறப் பானை களைத் தயாரிப்பதற்கு 1100 டிகிரி செல்சியஸ் வெப்பத்தை உருவாக்கும் தொழில் நுட்பத்தை அறிந்துள்ளனர் என்பது மட்டும் உறுதி செய்யப் பட்டுள்ளது.

வைகை நதி என்றைக்குமே ஜீவ நதியாக எப்போதுமே ஓடியது இல்லை. பருவகாலத்து நீரோடை எனலாம். ஆகவே தண்ணீரை முறை யாகச் சேமிக்கவும், நிலத்தடி நீரைப் பெறுவதற் கான வகையிலும் அமையப்பட்ட உறை கிணறு கள் கண்டுபிடிக்கப்பட்டன. தென்னிந்தியப் பகுதி களில் முதல் முறையாகச் செங்கல் கட்டு மானத்துடன் கூடிய சுவர்கள் கீழடியில்தான் கண்டெடுக்கப்படுகின்றன. செங்கல்லின் அளவு, நீளம் மற்றும் தடிமன் ஆகியவை ஒரே நேர்த்தியாக உள்ளது ஆச்சர்யத்தைத் தருவதாக அமைந் திருக்கிறது.

இவை அனைத்துமே இந்தியத் தொல்லியல் துறையில் முதல் இரண்டு கட்ட அகழாய்விலேயே உறுதி செய்யப்பட்டன. தமிழக அரசு முன்னெடுத்த நான்கு மற்றும் 5–ஆம் கட்ட அகழாய்விலும் கிடைத்து வருகின்றன. ஒரு நாகரிக முதிர்ச்சி



நீ.சு. பெருமாள்

பெற்ற சமுதாயம் வாழ்ந்ததற்கான அடையாள மாகத்தான் கீழடியின் வைகை நதிக்கரை நாகரிகம் நமக்கு உணர்த்துகிறது.

ஆனால் மத்திய அரசின் தொல்லியல் துறை மட்டும் இங்கு எதுவும் இல்லை என்று கடந்து சென்றதுதான் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. இந்தியப் பகுதிகளில் அசோகர் காலத்துக் கல்வெட்டின் காலம் என்பது கி.மு. 1 அல்லது கி.பி. 2–ஆம் ஆண்டிற்குள் என்று வரையறுக்கப் பட்டது. அதுவும் மன்னன் சொல்லிக் கல்வெட் டில் செதுக்கிய பறைசாசனம்தான் அசோகர் காலத்து எழுத்து.

ஆனால் கீழடியிலோ, தற்போது ஐந்தாம் கட்ட முடிவில் 2650 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பானை ஓடுகளில் எழுதும் ஆற்றலைப் பெற்றிருந்தார்கள் என்கிற சான்று உறுதியாகிறது. அதுமட்டுமல்ல, இன்றைக்கும் கிராமங்களில் இருக்கும் சிறுவர், சிறுமியர் ஆடும் பாண்டி ஆட்டம் எனச் சொல்லப்படுகின்ற வட்டச் சில்லு கள் கீழடியில் கிடைத்துள்ளன.

கீழடி மக்களின் நாகரிகம் அறுந்து போகாத அளவுக்கு அது நம்மிடையே இன்றும் தொடர் கிறது. ஆனால் இதையெல்லாம் மத்திய தொல் லியல் துறை ரசிக்கவில்லை. மூன்றாம் கட்ட அகழாய்வு தொடரலாமா என்கிற வகையில் இடைக்கால அறிக்கை மத்திய அரசால் அமர்நாத் ராமகிருஷ்ணாவிடம் கேட்கப்படுகிறது.

இதே சம காலத்தில் இந்திய வடபகுதியில் நடைபெற்ற அகழாய்வுப் பணிகள் நடைபெற்ற இடத்தில் இடைக்கால அறிக்கை கேட்கப்பட வில்லை. இருப்பினும் இடைக்கால அறிக்கையில், தாராளமாகத் தொடரலாம் என்றும், விரிந்த தொல்லியல் மேடாகக் கீழடி இருப்ப தால், குறைந்தபட்சம் 10 ஆண்டு களுக்கு மேல் இந்த ஆய்வுகளை முன்னெடுக்கலாம் என அமர்நாத் ராம கிருஷ்ணாவின் இடைக்கால அறிக்கை சொல்கிறது.

இந்த அறிக்கையை விரும்பாத மத்திய அரசு, உடனடியாக அமர்நாத் ராமகிருஷ்ணாவைப் பணியிட மாற்றம் செய்து அசாமிற்கு அனுப்பி வைக் கிறது. மூன்றாம் கட்ட அகழாய்வைத் தொடர ஸ்ரீராமன் என்கிற துணை கண்காணிப்பாளரை அனுப்பி வைக்கிறது. அவர் ஒரு வருடம் என்ன கண்டுபிடித்தார் என்பதற்கான தரவுகள் இன்னும் வெளியாகவில்லை.


அமர்நாத் ராமகிருஷ்ணா

ஆனால் அவர் இனியும் கீழடியில் ஆய்வுகள் செய்வதற்கு ஒன்றுமில்லை என்று வெட்டிய குழிகளை மூடிவிட்டுச் சென்று விடுகிறார். தமிழ் ஆர்வலர்கள் சிலர் கீழடியில் அகழாய்வுத் தொடர வேண்டும் என மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் முறையிடுகின்றனர்.

உயர்நீதிமன்றம் கொடுத்த அழுத்தம் மற்றும் உலகம் தழுவிய தமிழர்களின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமல், தமிழகத் தொல்லியல் துறை நான்காம் கட்ட அகழாய்வுப் பணியைத் தொடங்கியது.

தற்போது 5 மற்றும் 6–ஆம் கட்ட அகழாய்வுப் பணிகளை 2020 செப்டம்பர் மாத்ததுடன் நிறைவு செய்ய உள்ளது. கீழடி அகழாய்வின் தெளிவான அல்லது ஒரு நிறைவான முடிவுகளை இந்தியத் தொல்லியல் துறை ஏன் நடத்த விரும்பவில்லை? இந்தியத் தொல்லியல் துறை வரலாற்றில் கண்காணிப்பாளர் ஒருவரை இடமாற்றம் செய்தது இதுதான் முதல்முறை.

மைசூரில் உள்ள தொல்லியல் தொழிலாளர் தீர்ப்பாயத்தில் தமது இடமாற்றம் செல்லாது என வும், கீழடியில் அகழாய்வுப் பணிகள் நிறை வடையும் வரையில் தம்மைப் பணியாற்ற உத்தர விட வேண்டும் என்றும் அமர்நாத் ராமகிருஷ்ணா முறையிடுகிறார். தீர்ப்பாயமும் அமர்நாத் ராமகிருஷ்ணா கீழடிக்குச் சென்று பணியாற்றலாம் என்று தீர்ப்பு வழங்குகிறது. மதுரை உயர்நீதி மன்றக் கிளையும் இதே கருத்தைத் தெரிவித்தது. ஆனாலும் இந்தியத் தொல்லியல் துறை கண்டு கொள்ளவில்லை.

இதுவரையில் 16 ஆயிரம் தொல் லியல் பொருள்கள் கண்டெடுக்கப் பட்டிருக்கின்றன. கிடைக்கப்பெற்ற பொருள்கள் சில ரோம் நகரம் உள் ளிட்ட வெளிநாட்டவருடன் வணிகத் தொடர்புகள் இருந்ததற்கான சான்று கள் பகர்கின்றன.

தற்போதைய ஆறாம் கட்ட அகழாய்வில் 70–க்கும் மேற்பட்ட எலும்புத் துண்டுகள் கிடைத்துள்ளன. இவை இன்றைய நவீன அறிவியல்

தொழில்நுட்ப முறையில் பகுப்பாய்வு செய்தபோது, திமில் உள்ள காளை, எருமை, வெள்ளாடு, கலைமான், காட்டுப் பன்றி மற்றும் மயில் முதலிய உயிரினங்களின் எலும்புகள் என அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதில் கவனிக்க வேண்டியது என்னவெனில், சிந்துவெளிப் பகுதியிலும் குதிரையின் எலும்புகள் கிடைக்கவில்லை. எனவே, இந்த இரு நாகரிகங்களும் ஆரியர் தொடர்பற்ற, அவர்களின் வருகைக்கு முந்திய காலகட்டத்தில் சிறப்பானதொரு நாகரிகம் இருந்துள்ளதைப் பறைச்சாற்றுகிறது.

அதுமட்டுமல்ல, இந்த ஆறு கட்ட அகழாய்வில் பெருமதங்கள் இருந்ததற்கான அடையாளங்களும் கண்டெடுக்கப்படவில்லை. ஆதி மனிதர்களின் வழிபாடு என்பதே இயற்கை வழிபாடுதான் என்பதைக் கீழடி சொல்கிறது. பெருமதங்களின் துணையின்றியே ஒரு நாகரிகமான சமுதாயத்தினர் 2600 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்தனர் என்பதைக் கீழடி உறுதி செய்கிறது.

இந்த வரலாற்றையெல்லாம் முன்னிலைப் படுத்தினால், மத உணர்வுகளை வைத்து அரசியல் செய்வதெப்படி என்பதால்தான் கீழடி அகழாய்வின் உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவர மத்திய அரசு விரும்பவில்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

தற்போது தேவையற்ற வகையில் கீழடி முடிவுகளை மதத்துடன் இணைத்துச் சிலர் முடிச்சுப் போடுவது வேதனையைத் தருகிறது. ஏசுநாதரின் சீடரான தாமஸ், முசிறியில் வந்து இறங்கிப் பரப்புரை செய்தார். கீழடி, முசிறியில் கிடைத்த தடயங்கள் மூலம் தமிழர்கள் இந்துக்கள் அல்ல என்பதை நிலைநிறுத்த சிலர் முயற்சிக்கின்றனர். அதற்குக் கீழடி அகழாய்வைத் தொடங்கி வைத்த அமர்நாத் ராமகிருஷ்ணாவும் துணை போகிறார் என்கிற ரீதியில் கட்டுரைகள் தீட்டி இணையதளங்களிலும், சில நாளிதழ்களிலும் எழுதி வருவது வேடிக்கையாக உள்ளது.

கீழடி மக்களின் காலம் என்பது 2600 ஆண்டுகளுக்கு முன்னர் எனக் கால நிர்ணயம் செய்த நிலையில், 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஏசுநாதரின் சீடருடன் முடிச்சுப் போடுவது அடிப்படையிலே தவறானது.


ஆதிமனிதர்கள் சூரியன், மலை முதலிய இயற்கைச் சக்திகளை வழிபட்டனர். பின்னர் சமயங்கள் தோன்றின. சங்ககால இலக்கியங்களில் சமயம் அல்லது மதம் என்ற சொல்லாட்சியே கிடையாது. சமயம் என்னும் சொல்லாட்சி முதன் முதலாக கி.பி. 3–ஆம் நூற்றாண்டுக் காலத்திய மணிமேகலையில்தான் காணப்படுகிறது.

“மூதூர் அகத்து அவ்வவர் சமயத்து
அறிபொருள் கேட்டு
உன்னிய பொருளுரைத்து
ஐவகைச் சமயமும் அறிந்தனன்”

என்றெல்லாம் இங்கிருந்தே தொடங்குவதாகத் தமிழறிஞர்கள் பெரும்பாலும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

கீழடி மக்கள் 2650 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தொழில் நகரத்தையே நிர்வகித்துள்ளனர் என்பது திடீரென உதயமாகி இருக்காது. மாறாக, அதற்கும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள்தான் படிப்படியாக முன்னேறி நாகரீக வாழ்க்கைக்கு வந்திருக்க வேண்டும்.

கீழடி மற்றும்சிந்துவெளி குறியீடுகளுக்கு இடையே உள்ள ஒற்றுமை



திருவள்ளூர் மாவட்டம் அத்திரம்பாக்கம் அகழாய்வில் பழைய கற்காலக் (Lower Paleolthic) கருவிகள் 15 லட்சம் ஆண்டுகள் என்றும், இரண்டாம் கட்ட பழைய கற்காலக் கருவிகள் 3,85,000 ஆண்டுகள் பழமையானவை என்றும், கற்கருவிகளை இயலுக புவிப் பரப்பியல் ஒளி ஆய்வு (Cosmogenic-Nuclide Burial Dating Method) உறுதி செய்கிறது. அதன் தொடர்ச்சிதான் நாகரிகமாக வளர்ந்திருக்க வேண்டும்.

இடப் பெயர்வுதான் பரிணாம வளர்ச்சிக்கு உந்துதல் என்பது மனிதகுல வரலாற்றின் பொது விதியாகும். அந்த வகையில், நடுநிலைமையுடன் கீழடியில் உள்ள 110 ஏக்கர் நிலத்தையும் முழுமையாக ஆய்வு செய்தால், சிந்துவெளி நாகரிகத்திற்கான தொடர்பும் வெளிச்சத்திற்கு வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. ●

நல்வாழ்த்துக்களுடன்!



ஜோதி ஜோதி ஜோதி சுயஞ்
ஜோதி ஜோதி ஜோதி பரஞ்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்

ஏ.பி.டி. இண்டஸ்ட்ரீஸ் லிமிடட்

சக்தி பைனான்ஸ் பில்டிங், டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோயமுத்தூர் - 641 018 போன் : 0422-2233982, 2233983

9–ம் பக்கத் தொடர்ச்சி

என்பதை மிக விளக்கமாகக் கூறியிருக் கிறார்.

நல்ல குழந்தை பிறக்க வேண்டும் என்று எண்ணும் கணவனும், மனைவி யும் அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்துவிட்டுத்தான் கூட்டுறவு கொள்ள வேண்டும் என்பதைத் திருமூலர்,

"கலக்குநாள் முன்னாள் தன்னிடைக் காதல்
நலத்தக வேண்டில்அந் நாரி உதரக்
கலத்தின் மலத்தைத்தண் சீதத்தைப் பித்தை
விலக்கு வனசெய்து மேலணை வீரே" (1955)

என்று குறிப்பிடுகிறார்.

"பெண்ணொடு கலக்கும் நாட்கு முன்னாளில் காதலால் விளையும் இன்பம் மிக வேண்டும் கணவன், அப் பெண்ணின் வயிறாகிய பாண்டத்தில் மலத்தையும், வாத பித்த சிலேத்துமங் களையும் விலக்குமளவு விலக்கிப் பொருந்த வேண்டும்" என்பது இதன் பொருள்.

கருவுற்ற தாயின் வயிற்றில் மலம் போகாமல் தடைப்பட்டிருக்குமானால், இரத்த நாளங்களில் அசுத்தக் கிருமிகள் மிகும். அதன் விளைவாகக் குழந்தை மந்த புத்தியுடன் பிறக்கும். மலம், நீர் ஆகிய இரண்டு கழிவுப் பொருட்களும் வெளியேற்றப்படாமல் வெகு நேரம் தாய் வயிற்றில் இருந்தால், குழந்தை குருடாகப் பிறக்கும். இச்செய்திகளை நாம் முன்பே கூறியிருக்கிறோம்.

பொதுவாக, ஒரு நாளைக்கு இரண்டு முறை மலம் கழிப்பதை நாம் அனைவரும் வழக்கமாகக் கொள்ள வேண்டும். மலச்சிக்கல் மனச்சிக்கலை உண்டாக்கும். தலைவலி வரும்.

இதை மாற்ற ஒரு மருந்து இருக் கிறது. வெந்தயத்தையும், சிறு சீரகத்தை யும் சம அளவு எடுத்து, தனித்தனியாகப் பொன் வறுவலாக வறுத்து, இரண்டையும் கலந்து பொடியாக்கி, அந்தப் பொடியை நாள்தோறும் இரவு உணவுக்குப் பின் ஒரு மேசைக்கரண்டி யளவு வாயில் போட்டுத் தண்ணீர் குடித்தால், அப்படிச் செய்பவருக்கு மலச்சிக்கல் வராது.

அன்னை நலம் பெற இம்மலம் கழிய வேண்டும். ஆன்மா உயர்வுற மும் மலம் கழிய வேண்டும். இதுதான் நம் வாழ்வில் முதலில் அறிய வேண்டிய பாடமாகும்.

தாயும், தந்தையும் அன்போடு இணைந்து கூடிய நேரத்தையும், நினைப் பையும் பொறுத்துத்தான் குழந்தையின் வாழ்நாள், சாகும் நாள், குணநலன்கள், வாழ்க்கை நெறி ஆகியவை தீர்மானிக் கப்படும். இதை,

"விட்டபின் கர்ப்பவுற் பத்தி விதியிலே
தொட்டுறும் காலங்கள் தோன்றக் கருதிய
கட்டிய வாணாள் சாநாள் குணம் கீழ்மை சீர்ப்
பட்ட நெறியிதென் றெண்ணியும் பார்க்கவே" (1944)

என்கிறார் திருமூலர்.

மேலும், கணவன் – மனைவி கூடுதற் குரிய காலத்தையும் வரையறுக்கிறார். வளர்பிறையில் பின் ஆறு நாட்களும், தேய்பிறையில் முன் ஆறு நாட்களும் கூடினால் நலமுண்டாகும். நல்ல குழந்தை பிறக்க வாய்ப்புள்ளது. வளர் பிறை, தேய்பிறை என்பன சந்திரனை வைத்துத் தீர்மானிக்கப்படுபவையல்ல. மாதவிடாயான நாட்களை வைத்துத் தீர்மானிக்கப்படுபவை.

பொதுவாக உடல் நலமுள்ள பெண்ணுக்கு மாதவிடாய் (பூப்பு) 28 நாட்களுக்கு ஒரு முறை வரும். சிலருக்கு அவர்கள் உடல் இயல்பைப் பொறுத்து இரண்டொரு நாட்கள் முன், பின்னாக வரலாம். மாதர் மாதவிடாயான நாள் தான் அமாவாசை என்று குறிப்பிடப் படுகிறது. அந்த நாளிலிருந்து பதி னான்கு நாட்கள் வளர்பிறை. அடுத்த பதினான்கு நாட்கள் தேய்பிறை.

இந்த வளர்பிறை நாட்களில் முதல் எட்டு நாட்கள் உறவு கொள்ளத் தக்க வையல்ல. அப்பொழுது கரு உற்பத்தி யாக வாய்ப்பில்லை. அடுத்த ஆறு நாட்கள் கூடத்தக்கவை. இதுபோலத் தேய்பிறை நாட்களில் பின்னுள்ள எட்டு நாட்கள் கூடத் தகாதவை. முன்னுள்ள ஆறு நாட்களும் கூடத்தக்கவை.

இப்படிக் கணக்குப் பார்த்தால், மாதவிடாயான நாளிலிருந்து எட்டு

நாட்களை விட்டுவிட வேண்டும். அதற் கடுத்த பன்னிரண்டு நாட்கள் குழந் தைப்பேறு வேண்டுவோர் கூடத்தக்க நாட்கள் என்பதைக் கீழ்க்கண்டவாறு பாடுகிறார் திருமூலர்...

"மாயாள் வசத்தே சென்றிவர் வேண்டில்
ஓயா இருபக்கத்து உள்வளர் பக்கத்துள்
ஏயா எண்ணாள் இன்பமேல்பனி மூன்றிரண்டு
ஆயா அபரத்துள் ஆதிநாள் ஆறாமே" (1939)

இப்பாடலில் பனி என்றால் துன்பம் என்று பொருள். பூப்பான முதல் எட்டு நாட்களில் கூடினால் துன்பம் விளை யும் என்கிறார் திருமூலர். வளர்பிறை யைப் பூர்வ பக்கம் என்பர். தேய் பிறையை அபர பக்கம் என்பர். அபரத் துள் ஆதிநாள் ஆறாமே என்றதால், தேய்பிறையில் முதல் ஆறு நாட்களில் கூடினால் கருப்பதிய வாய்ப்புள்ளது என்பது பெறப்படுகிறது.

நல்ல குழந்தைகள் பிறப்பதற்கான வாய்ப்புள்ள நாட்களைக் குறிப்பிட்ட திருமூலர் கணவனும், மனைவியும் கூடு வதற்குரிய நேரத்தையும் குறிப்பிடுவது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. பொழுது புலர்வதற்கு முன்னுள்ள நான்கு முகூர்த்தக் காலமே கூடுவதற் குரிய காலம் என்பதை,

"செய்யும் அளவில் திருநான் முகூர்த்தமே
எய்யும் கலைகாலம் இந்து பருதிகால்
நையுமிடத் தோடி நன்காம நூல்நெறி
செய்க வலம்இடம் தீர்ந்து விடுக்கவே" (1941)

என்கிறார் திருமூலர்.

இப்பாட்டின் பொருள், "போகம் செய்யும் அளவில் பொழுது புலர்வதற்கு முன்னுள்ள நான்கு முகூர்த்தமே விந் தைப் பதிப்பதற்குரிய காலமாகும். சந்திரகலை, சூரியகலையில் அடங்கிய போது, காம நூல்கள் கூறியவாறு சேரவும். விந்துவைப் பதிப்பதானால் வலமாகவும், இடமாகவும் இல்லாமல், சுழிமுனையில் மூச்சு ஓடும்பொழுது பதிப்பது நன்று" என்பதாகும்.

இப்பாடலில் இந்து என்றால் சந்திரன். பருதி என்றால் சூரியன். சந் திரன் நையும் காலம் இரவின் பின்பகுதி யாகும். ஒரு முகூர்த்தம் என்பது மூன்றே முக்கால் நாழிகை. ஒரு நாழிகை என்பது இருபத்து நான்கு நிமிடங்கள். மூன்றே முக்கால் நாழிகை என்பது தொண் ணூறு நிமிடங்கள். எனவே, ஒரு முகூர்த்தம் என்பது தொண்ணூறு நிமிடங்கள். அதாவது ஒன்றரை மணி நேரம்.

நான்கு முகூர்த்தங்கள் என்பது ஆறு மணி நேரம். பொழுது புலர்வது காலை ஆறு மணி என்றால் அதற்கு முந்தி ஆறு மணி என்பது ஏறத்தாழ இரவு பன்னி ரெண்டு மணி. இதுதான் போகத்திற்குரிய நேரம்.

நான்கு முகூர்த்தங்கள் என்பது ஆறு மணி நேரம். பொழுது புலர்வது காலை ஆறு மணி என்றால், அதற்கு முந்தி ஆறு மணி என்பது ஏறத்தாழ இரவு பன்னிரண்டு மணி. இதுதான் போகத் திற்குரிய நேரம்.

முன்னிரவில் போகம் செய்வோர் வீரியம் இழப்பர். பின்னிரவில் போகம் செய்வோர் உணர்வால் கிடைக்கும் மகிழ்ச்சியை இழப்பர். இத்தனை செய்தி களையும் அறிவியல் வளர்ச்சி பெறாத காலத்தில் மிகச் சிறப்பாகக் கூறுகிறார் திருமூலர்.

வாழ்வியல் இலக்கணத்திற்கு வழி யமைத்த சித்தர்களில் முதலிடத்தில் வைத்து மதிக்கத்தக்கவரான திருமூலர், ஆண் – பெண் உறவு பற்றிய செய்தி களைக் கூறும்போது நாம் வியப்படை கிறோம். இதையெல்லாமா சொல் வார்கள் என்று எண்ணுகிறோம்.

பன்னிரு திருமுறைகள் வழிபாட் டுக்கு உரியவை மட்டுமல்ல, நம் வாழ்க் கைக்கும் வழிகாட்டுபவை என்பதைத் திருமந்திரம் உணர்த்துகிறது. ஒரு தாய், தன் மகளுக்குச் சொல்வதுபோல, வாழ்க்கைச் செய்திகளைச் சிறப்பாகச் சொல்லும் திருமூலர், சைவப் பணியில் மட்டுமின்றிச் சமுதாயப் பணியிலும் முன்னிற்பதை இந்தச் செய்திகள் உணர்த்துகின்றன. இவையெல்லாம் இன்றைய மகப்பேறு மருத்துவர்களைத் திகைக்கச் செய்கின்றன.

போகத்தைப் பற்றி விளக்கமாகக் கூறிய திருமூலர், அந்தப் போகம் அளவோடு இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார். உணவின் சாரத்தால் உடலும், மனமும் அமையும். உண்ட உணவு மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதி உடலை வளர்க்கவும், ஒரு பகுதி மனத்தைப் பக்குவப் படுத்தவும் பயன்படுகின்றன. மூன்றாவது பகுதி மலமாக வெளிப்படுகிறது. உணவின் தன்மைக்கேற்ப உடலும், உள்ளமும் அமைகின்றன. சாத்விக உணவு நல்ல உடலையும், மனத்தையும் தந்து யோகம் பயில உதவுகின்றது.



“அருந்திய அன்னம் அவைமூன்று கூறாம்
பொருந்தும் உடல் மனம் போமலம் என்னத்
திருந்தும் உடல்மனம் ஆம்கூறு சேர்ந்திட்டு
இருந்தன முன்னாள் இரதம தாகுமே” (1933)

என்பது திருமந்திரம்.

உண்ட உணவு இரத்தமாகி, இரத்தம் சுக்கிலமாக இருபத்தொரு நாட்கள் ஆகின்றன. ஒரு புல்லின் நுனியில் ஒட்டிய பனிபோல் அருமையான சுக்கிலம் (விந்து) அமைந்திருக்கிறது. விந்து நீக்கம் அழிவைத்தரும். அழிகின்ற விந்தின் அளவை அறியாமல் மக்கள் தங்களைக் காப்பாற்ற முடியாமல் தடுமாறுகிறார்கள். உடல் வளம் குறைவதை அறியாமல் மக்கள் இந்தச் சுக்கிலத்தை வீணாக்குகிறார்கள் என்பதை,

“அழிகின்ற விந்து அளவை அறியார்
கழிகின்ற தன்னையுட் காத்தலும் தேறார்
அழிகின்ற காயத்து அழிந்தயர் வுற்றோர்
அழிகின்ற தன்மை அறிந்து ஒழியாரே” (1936)

என்று குறிப்பிடுகிறார்.

போகத்தின்போது மனத்தை மூலாதாரத்தில் வைத்து மூச்சுக்காற்றை ஒழுங்குபடுத்தினால், நீண்டநேரம் சுக்கிலம் வெளிப்படாது காப்பாற்றலாம். இதனால் மனைவிக்கும் சொல்ல முடியாத இன்பம் கிடைக்கும். புருவ மத்தியில் பார்வையை வைத்தாலும் இது சித்திக்கும். நம்மைப் பார்க்கின்ற பெண்ணை நாம் பார்க்காமல், மூலாதாரத்திலோ, ஆக்ஞை என்ற புருவ மத்தியிலோ எண்ணத்தை வைக்க வேண்டும்.

“பார்க்கின்ற மாதரைப் பாராது
அகன்றுபோய்
ஓர்க்கின்ற உள்ளம் உருக அழல்மூட்டிப்
பார்க்கின்ற கண்ணாசை பாழ்பட மூலத்தே
சேர்க்கின்ற யோகி சிவயோகி தானே” (1937)

என்ற திருமந்திரம் அளவான போகத்திற்கு வழிகாட்டுவதாகும்.

உலக மக்களில் சில பேர் விதை நெல்லை விதைக்காமல் அதையே அரிசியாக்கி உண்பார்கள். சில பேர் விதை நெல்லை வறுத்து உண்பார்கள். அறிவுடைய பெருமக்கள் விதை நெல்லை விதைத்து, விளைவைப் பெருக்கி உண்பார்கள். இவர்களில் சுக்கிலத்தின் பயனை அறியாமல் இழப்பவன் முதல் வகை. ஹடயோகத்தால் சுக்கிலத்தைக் காய வைப்பவன் இரண்டாம் வகை. விந்து நீக்கமில்லாமல் அதை மேலே எழுப்பி உடம்பை ஒளி மண்டலம் ஆக்குபவன் போற்றத்தக்க மூன்றாம் வகை. இதை,

“வித்துக்குற் றுண்பான் விளைவறி யாதவன்
வித்துக்குற் றுண்ணாமல் வித்துச்சுட் டுண்பவன்
வித்துக்குற் றுண்பானில் வேறல்லன் ஈற்றவன்
வித்துக்குற் றுண்ணாமல் வித்துவித்
தானன்றே” (1964)

என்கிறார் திருமூலர்.

உலக மக்கள் கருவிலே திருவுடையவர்களாகப் பிறக்க வேண்டும் என்ற பேரருட் பெருங்கருணையால், மறைத்து வைத்த செய்திகளையெல்லாம் வெளிப்படையாகச் சொல்லி, வெறியோடு சேராமல் நெறியோடு சேர வழிகாட்டி, இல்லறத்தை நல்லறமாக்கிச் சமுதாயம் சிறக்க வழி செய்த திருமூலருக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்? செந்தமிழுக்கும் செங்கதிருக்கும் திருமூலருக்கும் கைம்மாறு செய்ய யாரால் முடியும்?

வாசகர் கடிதம்

செப்டம்பர் 2020 'ஓம் சக்தி' இதழின் இராமர் கோவில் அட்டைப்படம் அருமை. மனத்தை நிறைய வைத்த படம். பாராட்டுகள்!

– உஷாமுத்துராமன், திருநகர்.

கோவை ஞானியின் பண்பு, எளிமை நெஞ்சை நெகிழ வைத்தன. அவரது மறைவு தமிழ் இலக்கியத்திற்குப் பெரிய இழப்பு என்பதை மரபின் மைந்தன் முத்தையாவின் கட்டுரை மூலம் உணர முடிந்தது.

– ஆர்.கே. லிங்கேசன்,
மேலகிருஷ்ணன்புதூர்.

செப்டம்பர் மாத 'ஓம் சக்தி'யில் சுரங்கம் பகுதியில் வெளியான அருட்செல்வரின் கட்டுரை, பஞ்சாயத்து ஒன்றியங்களுக்குப் பரவலான அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்பதை நிர்சனமாகக் கூறியது. அருட்செல்வரின் நாட்டுநலன் கருதிய இச்சிந்தனையை அரசியலாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

– ஏ. பாஸ்கர், சேலம்.

'கோவில்கள், பிரச்சினைகள், தீர்வுகள்' எனும் வி.வே. சுவாமிநாதன் அவர்களின் கட்டுரை, மற்றவர்களும் இதே போல் பின்பற்றும்படியான நடைமுறைச் சீர்திருத்தக் கட்டுரையாக அமைந்துள்ளது.

– சுப்பிரமணிய வெங்கடாசலம்,
குளிபிறை.

செப்டம்பர் 'ஓம் சக்தி' இதழில் சுவாமி விமூர்த்தானந்த மகராஜ் பற்றித் தக்கவகையில் அறிமுகம் செய்துள்ளீர்கள். பாராட்டுகள்!

– கே.ஆர். கிருஷ்ணமாச்சாரி,
மதுரை.

"உலக விவசாயிகளே ஒன்று சேருங்கள்" கட்டுரை இன்றைய விவசாயம் பற்றிய தெளிவான நிலையை எடுத்துக் கூறியது. இன்றுள்ள அரசியல் கட்சிகளால் விவசாயிகள் ஒன்றுபட்டு உரிமைகோரும் நிலையில் இல்லை.

– லிங்கம் சின்னசாமி, தாராபுரம்.

தான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் என்பதை ஆட்டனத்தியின் 'நிலாச் சோறு' சிறுகதை நன்கு உணர்த்துவதாய் அமைந்தது.

– கே. பிரபாவதி,
மேலகிருஷ்ணன்புதூர்.

சூட்சுமங்களை எல்லாம் அவிழ்க்கும் அறிவுலகப் புதையல் திருமந்திரத்தைத் திறந்து திகட்டத் திகட்ட அள்ளிப் படைக்கும் சொ.சொ.மீ. அவர்களின் சொல், சொக்க வைக்கும் மந்திரச் சொல்.

– முத்தமிழருவி மாரிமுத்து,
அ.வாடிப்பட்டி.

கோவில் பிரச்னைக்கு அருமையான தீர்வு கண்டு, அதைச் செயல்படுத்தியதை அற்புதமாகச் சொல்லியிருந்தார் மேனாள் அமைச்சர் வி.வே. சுவாமிநாதன். இவர் போன்றவர்கள் இப்பொழுது முக்கியத் தேவை.

– தங்கவேல் பழனிச்சாமி,
பெரியகள்ளிவலசு.

'ஓம் சக்தி' 2020 செப்டம்பர் இதழின் ஒவ்வொரு பக்கமும் அற்புதம், ஆனந்தம், உன்னதம். திருமிகு. கோவை ஞானி அய்யா அவர்களைப் பற்றிய நினைவுச் சிதறல்கள் மனதைக் கனக்கச் செய்தன.

– கா. சித்ரா காமராஜ், கோவை.

'கனவில்லாத தூக்கம் வேண்டும்' ஈரோடு தமிழன்பன் கவிதை, வார்த்தைகளில் வசந்தத்தைக் காட்டியிருப்பதோடல்லாமல், காலத்தைக் கரைய வைக்கும்படியான நேர்த்தியைக் கூறுகின்றது.

– கா.பழனிச்சாமி, திருவாரூர்.

இன்றைய தேவை இரு மொழியா? மும்மொழியா?

விவாதக் கடிதங்களில் சில... சில... சில...

மத்திய அரசு கொண்டு வந்த பல்வேறு திட்டங்களில் புரட்சிகரமான திட்டம் இந்தப் புதிய கல்விக் கொள்கை. இப்புதிய கல்விக் கொள்கையில் மூன்று மொழிகள் பயில வேண்டும் என்பது அவரவர் விருப்பம். நாட்டில் பெரும்பாலான மாநிலங்களில் இந்தி மொழி பேசப்படுகிறது. நம் இளைஞர்கள் வேலை வாய்ப்புகளுக்கோ, பிற அலுவல்களுக்கோ சென்றால் இந்தி மொழி மிக அவசியம். நம் சந்ததியினரின் எதிர்காலம் சிறந்து விளங்க வேண்டுமெனில், மும்மொழிக் கொள்கையை ஆதரித்தே ஆக வேண்டும்.

– **பே. சண்முகம்,** செங்கோட்டை.

குழந்தைகளின் மூளை ஆறு வயது வரை வளர்வதற்கான நெகிழ்வுத் தன்மை கொண்டிருக்கிறது என்ற ஒரு காரணத்தினால் மழலையரை இரண்டு அல்ல, மூன்று மொழிகளை முறையாகக் கற்க வைத்து எழுத்துத் தேர்வு எழுதும் அளவிற்குத் தேர்ச்சி பெற வைப்பது குழந்தைகளைச் சித்திரவதை செய்வதாகும் என்றெல்லாம் அருணா ரத்னம் முதலிய கல்வியாளர்கள் அறிவுறுத்துவதைப் புறந்தள்ள முடியவில்லை. கற்பவர்களின் விருப்பத்திற்கேற்ப விட்டு விடுவதே சிறந்தது.

– **நவீன்குமார்,** நடுவிக்கோட்டை.

தமிழகத்தில் இருமொழிக் கொள்கைதான் தேவை என உடும்புப் பிடியாக இருந்தால், பாதிக்கப்படப் போவது என்னவோ அரசுப்பள்ளி மாணவர்கள்தான். ஆனால், இன்றைய காலகட்டத்தில் இருக்கும் ஒரு மாணவனின் தாத்தா, இளம் பட்டப் படிப்புப் படித்தவராகவும், அந்த மாணவனின் தந்தை முதுநிலைப் பட்டப்படிப்புப் படித்தவராகவும் இருப்பதால், அம்மாணவன் என்னவிதப் படிப்புப் படிப்பது என்பதை அவர்கள் மூவரும், நெருங்கிய இரத்த உறவுகளும்தான் தீர்மானிக்கின்றனர். அரசியல்வாதிகளின் பேச்சை எல்லாம் காது கொடுத்துக் கேட்க அவர்கள் தயார் இல்லை. கல்வியில் மும்மொழிக் கொள்கை நிச்சயம் வெற்றி பெற்றே தீரும் என உறுதியாக நம்பலாம்.

– **கோ.செ.மு. கந்தசாமிப்பாண்டியன்,** திருப்பூர்.

சிறு வயதில், அதாவது 16 வயதுக்குள் 7 மொழிகளைக் கற்கும் திறன் குழந்தைகளிடம் உண்டு. அதைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டது தி.மு.க. கருணாநிதி குடும்பத்தார் மட்டும் இந்தி படிக்கலாம். ஆனால் மற்றவர்கள் ஏழை மக்கள் படிக்கக்கூடாது. அவர்கள் கீழ்த் தட்டு மக்களாகவே இருக்க வேண்டும். வசதி படைத்தவர்கள் படிக்கும் தனியார் மெட்ரிக் பள்ளிகள் சுமார் 40% அரசியல்வாதிகளிடம் உள்ளன. அதில் இந்தி படிக்கும் மாணவர்கள் உண்டு. அந்தப் பள்ளிகளில் போய் இந்தி எதிர்ப்புக் கோஷம் போட திராவிடக் கட்சிகளுக்குத் திராணி உண்டா?

– **தி. இராதாகிருட்டிண்ன்,** அரூர்.

இதுவரை இந்தி மட்டும்தான் பிரச்சனைக்குரியது. ஆனால் சமஸ்கிருதம் தற்போது ஒட்டிக்கொண்டது ஏன்? சமஸ்கிருதம் எந்த மாநிலத்தின் மொழி? அதற்கென்ன அவ்வளவு முக்கியத்துவம்? பேச்சு மொழியும், எழுத்து மொழியும்தான் செம்மொழிக்கான இலக்கணம். அதைச் சமஸ்கிருதம் முழுமையாகப் பெற்றதா? சிக்கலான மொழிப் பிரச்சனைக்குப் பொதுவான

வாக்கெடுப்பு நடத்தலாம் என்ற யோசனை, அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா எனக் கூப்பிடலாம் என்ற நப்பாசைக் கற்பனை! ஒவ்வொரு பொதுத்துறை நிர்வாகத்தையும் தனியாருக்குத் தாரை வார்ப்பதில் முனைப்புக் காட்டும் மத்திய அரசுக்கு 22 மொழிகளையும் தேசியமாக அறிவித்தால் நிர்வாகம் செய்வது விரயமாகும் என்பது கையாலாகாத்தனம்!

– **தெ. முருகசாமி,** புதுச்சேரி.

கூடுதலாக ஒரு மொழியைக் கற்றால் அவன் இரண்டு மனிதனுக்குச் சமம். ஒருவருக்கு எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்கும் உரிமை உள்ளது. அதைத் தடுக்கும் அரசியல்வாதிகள் தரமற்ற தன் கருத்தைத் திணிப்பதில் ஆர்வமாக உள்ளனர் என்பது கண்கூடாகத் தெரிகிறது. தமிழகத்தில் மும்மொழிக் கொள்கை பற்றிய நேர்மையான புரிதலுடன் அரசியல்வாதிகள் இல்லை என்பதே உண்மை!

– **மு. சுரேஷ்குமார்,** சென்னை.

அகில இந்திய அளவிலும், தமிழக அளவிலும் ‘ஆங்கிலம் எந்த நிலையிலும் வேண்டாம் என்ற நிலைப்பாடு நடைமுறைக்கு வந்தாக வேண்டும். தமிழ் நாட்டில் கல்வி, நீதித்துறை என்று அனைத்தும் முழுமையாகத் தாய்மொழியில் மட்டுமே என்ற நிலைப்பாடு எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஒருவர் அமெரிக்கா, இங்கிலாந்து சென்று தொழில் செய்ய விரும்பினால், அவர் ஒரு தனியார் நிறுவனம் வழியே ஆங்கிலம் கற்றுக்கொள்ள வேண்டும். அவரது ஆங்கில அறிவுக்காக நாடும், மக்களும் பொறுப்பேற்க முடியாது. மொழியை முன் நிறுத்திய கழகங்கள் தாய்மொழியோடு இந்திய மொழி ஒன்றைக் கற்றுக்கொள்ள விருப்பமில்லையென்றால், ‘பிரிவினை’ கேட்டுப் போராடித் ‘தனிநாடு’ பெற்றுக்கொள்ள வேண்டும். தனிநாடு கேட்பது ஓர் அரசியல் நிலைப்பாடுதான். கேட்டுப் பெறுவதற்குத் தெளிவும், துணிவும் வேண்டும்.

– **மு. பழனி இராகுலதாசன்,**
தேவகோட்டை.

மாணவர்களின் இன்றைய தேவை மும்மொழிதான். இரு மொழிக் கொள்கையில் கல்வி பயின்ற அந்த மாணவர்களைக் கேட்டால் மூன்றாவது மொழியின் அருமையும் அவசியமும் நிச்சயம் தேவை என்பது புரியும். அக்காலத்தில் இருமொழிக் கொள்கையால் அவர்கள் வசதியும், வாய்ப்பும் இருப்பவர்கள் பணம் செலவழித்து மூன்றாவது மொழியைக் கற்றனர். இல்லாதவர்கள் என்ன செய்ய முடியும்? எனவே, இந்த மும்மொழிக் கொள்கையால் அனைவருக்கும் மூன்றாவது மொழியைக் கற்கும் நல்ல வாய்ப்புக் கிடைக்கும். அது இளமைக் காலத்தில் பள்ளியிலேயே கிடைத்தால் சிறந்ததுதானே!

– **உஷா முத்துராமன்,** திருநகர்.

இந்தியாவுடன் சமஸ்தானங்களை இணைக்கும் பொழுது அந்தந்தச் சமஸ்தானங்களின் மொழி, பண்பாடு, கலாச்சாரம் பாதுகாக்கப்படும் என்ற உறுதிமொழி அளிக்கப்பட்டது. அதன் நோக்கமே அந்தந்த மாநில மொழிகள் வளர்ச்சியடைய வேண்டுமென்பதே. தாய்மொழியில் ஒருவன் கல்வி கற்கும் பொழுதுதான் முழுப்புரிதலுடன், சுய சிந்தனையுடன் கற்க முடியும். கல்விக்குத் தாய்மொழியும், உலகத் தொடர்புக்கு ஆங்கிலமும் இருந்தால் போதுமானது. மூன்றாவது மொழியைக் கற்பது கால விரயம். நான் கருநாடக மாநிலத்தில் பணியாற்றச் சென்றபோது ஒரு மாதத்தில் கன்னட மொழியைப் பேசவும், எழுதவும் கற்றுக்கொண்டேன். அவ்வாறே தெலுங்கு மொழியையும் கற்றுக் கொண்டேன். வாழத் தேவை என்கின்ற பொழுது எத்தனை மொழிகளையும் நாம் கற்றுக் கொள்ளலாம். இதற்கு அடிப்படை, தாய்மொழிக் கல்வியும், தொடர்புக்கு ஆங்கிலமும் எனப் பள்ளி, கல்லூரிகளிலும் இருமொழிக் கொள்கையே போதுமானது.

– **புலவர் கருமலைத் தமிழாழன்,**
ஒசூர்.

மும்மொழிக் கொள்கை பொது மக்கள் கருத்துக் கணிப்புச் சாத்தியமா?

தெரியவில்லை. பள்ளி இறுதிநிலை, பட்டப்படிப்பு இறுதி நிலைத் தேர்வு எழுதும் மாணவர்க்கு இந்தக் கேள்விகள் கொடுக்கலாம். வரும் பதிலில் இருந்து இளையவர்கள் மூலம் எதிர்காலம் நிர்ணயம் செய்யலாம். முதல் மொழி தாய்மொழி. இரண்டாம் மொழி இந்திய மண்ணில் உள்ள பிற மொழிகளில் ஏதாவது ஒன்று. மூன்றாம் மொழி உலகப் பொதுமொழி ஆங்கிலம், பிரெஞ்ச் ஏதாவது ஒன்று. எந்த மொழிக்கு எந்த விதம் வாக்கு வரும் எனத் தேர்ந்து மத்திய அரசு முடிவெடுக்க வேண்டும்.

– **சீத்தலைச் சாத்தன்,** திருப்பத்தூர்.

கர்நாடகத்தில் கன்னடத்தில் சமஸ்கிருத, இந்திச் சொற்கள் ஏற்கனவே அதிகம் கலந்திருப்பதாலும், எல்லைப் பகுதிகளிலே இந்தி மொழி பேசப்படுவதாலும், அதனை அவர்கள் பெரிதுபடுத்த விரும்பவில்லை என்றாலும், எதிர்ப்புகள் கன்னடத்திலும் இருக்கின்றன. ஆந்திரத்திலே நிஜாம் மன்னர் காலத்திலிருந்தே இந்தியும், உருதுவும் கலந்து வந்தமையாலும், எல்லையொட்டிய பகுதிகளிலே முழுமையான இந்தி பேசப்படுவதாலும், ஏற்கனவே அவர்களுக்கு அறிமுகமானதென்பதாலும் திணிப்பாகத் தெரியவில்லை. தேவையானவர்கள் தேவைக்கேற்றதைத் தேடிக் கற்றுக் கொள்வார்கள்.

என் தேவையைத் தேர்ந்தெடுப்பது என் விருப்பம். தேவையைக் கட்டாயப்படுத்த வேண்டாம். சட்டம் என்ற கட்டுப் போட்டுக் கட்டாயப்படுத்தி மருந்து செலுத்த தமிழ்மொழி நோயாளியுமில்லை, இந்தி மொழி டாக்டருமில்லை. எனவே, மாநில ஆட்சியாளர்கள் புகைந்து கொண்டிருக்கும் கொதிப்பு நொதியோடு கூடவே மொழி எதிர்ப்பு எண்ணெயையும் ஊற்றாமல் தவிர்ப்பது தமிழ் மக்களுக்கும், ஒட்டு மொத்த இந்திய மக்களுக்கும் நல்லது. நியூட்டனின் விஞ்ஞான விதிப்படி எவ்வளவு அழுத்தம் கொடுக்கிறோமோ, அதற்கு இணையாகவும், எதிர்ப்பாகவும் சக்தி உருவாகும்.

– **விஜய் சண்முகம்,** கோவை.

பிரதமர் மோடி அறிவித்த புதிய கல்விக் கொள்கையைத் தமிழக மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. 1967–ஆம் ஆண்டிலிருந்து இருமொழிக் கொள்கை நடைமுறையில் இருந்து வருகையில், மக்களைக் குழப்பச் செய்வது வீண் வேலை. இந்தி / சமஸ்கிருத மொழிகளைத் திணிப்பதே இதன் குறிக்கோள் ஆகும். இன்றைய நாளில் அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை மிகவும் குறைவாக உள்ளது. இதில் கூடுதலாக ஒரு மொழியைக் கற்கச் சொன்னால், மாணவர் எண்ணிக்கை மேலும் குறையும். இன்றைய காலகட்டத்தில் தாய்மொழிக்கு எவ்விதமான தொல்லையும் கொடுக்கக்கூடாது. மும்மொழிக் கொள்கையைக் கட்டாயமாகப் பலவந்தப்படுத்தித் திணிப்பது தவறாகும். மும்மொழிக் கொள்கையை மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதில் அரசியல்வாதிகளும், ஆளும் தரப்பினரும் உறுதியாக இருக்க வேண்டும் என்பதே எமது கருத்து.

– **லிங்கம் சின்னசாமி,** தாராபுரம்.

தன் விருப்பத்தின் பேரில் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும், எந்த மொழியை வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம். அதில் தவறில்லை. ஆனால் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி மொழித் திணிப்பில் ஈடுபடுவது ஏற்கத்தக்கதல்ல. தமிழகத்தில் தாய்மொழியாகிய தமிழும், உலக மொழியாகிய ஆங்கிலமும் மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும். மும்மொழி என்பது தேவையற்ற சுமையாக அமைந்து மாணவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைந்துவிடும்.

இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை இணைப்பு மொழியாக ஆங்கிலமே தொடருமென்ற ஜவகர்லால் நேருவின் உறுதிமொழி காப்பாற்றப்பட வேண்டும். நடுவணரசால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய மொழிகள் அனைத்தும் எவ்வித ஏற்றத் தாழ்வுமின்றி நடுவணரசால் சமமாகவே மதிக்கப்பட வேண்டும்.

– **மேலை. தமிழ்க்குமரன்,**
முத்தரசநல்லூர்.

இந்தியாவில் பேசும் பெரும்பான்மையான மொழி இந்தியைத் தமிழகத்திற்குள் அனுமதித்தால், நாளடைவில் அது தமிழகத்திற்குள்ளும் வளர்ந்து தமிழை ஆக்கிரமித்துவிடும் என்று அச்சப்பட்டுக் கொண்டிருப்பது தவறு. தமிழகத்தில் எட்டாம் வகுப்பு வரை தமிழ் கட்டாயம். தமிழக அரசு வேலைகளில் தமிழ்வழியில் படித்தவர்களுக்கே முன்னுரிமை என்று தமிழைக் காக்கச் சட்டங்களையும், நடவடிக்கைகளையும் பலப்படுத்த வேண்டுமே தவிர, இப்படிப் பயப்படக்கூடாது.

மேலும் புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்த நாம் மற்ற மாநிலங்களை உதாரணம் காட்டக்கூடாது. ஏனெனில், தமிழ் மற்ற மாநில மொழிகளைப் போன்றது அல்லாது, தனித் தகுதியும், பெருமையும் உடைய செம்மொழி, உலக முதன்மொழி. எட்டாம் வகுப்பு வரை தமிழைக் கட்டாயமாக்குவதே அந்தத் தமிழுக்கு நாம் கொடுக்கும் மரியாதை, கடமை.

– **முத்தமிழருவி மாரிமுத்து,**
அ. வாடிப்பட்டி.

இருமொழிகள் கற்கலாம் என்றபோதே தமிழ் பேசுவதில்லை, எழுதுவது இல்லை. ஆனால் மும்மொழியால் தமிழ் வளருமா என்றால் கேள்விக் குறியே. தமிழில் உள்ள நூல்களைப் படிக்க நேரமில்லை. இதில் மற்ற மொழி நூல்களைப் படிப்பது எப்படி முடியும்? இங்குத் தமிழ் பேசுபவர்களே ஆங்கிலத்தில் பேசவும், எழுதவும் என்ற நிலையில் இருக்கிறார்கள். தமிழே தெரியாதவர்கள் – வடக்கில் இருந்து வந்தவர்கள் எல்லாம் வியாபாரம் செய்யவில்லையா? ஏன் மார்வாடிகள் இங்கு நிறையப் பேர் உள்ளார்கள். அவர்கள் தமிழைக் கற்றார்களா? இல்லையே! அப்படி இருக்க, வடமொழி கற்றுத்தான் வாழ வேண்டிய நிலையில் இல்லை தமிழ்நாடு. வள்ளுவன் தன்னை உலகுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாட்டில் மும்மொழி தேவையில்லை.

– **தங்கவேல் பழனிச்சாமி,**
பெரியகள்ளிவலசு.

தமிழ்நாட்டு மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முதலியவற்றிற்காகப் பள்ளிகளில் மூன்று மொழிக் கல்வி அவசியமாகிறது. தென் இந்தியாவில் மற்ற மாநிலங்களில் ஐந்தாவது வகுப்புவரை ஆங்கிலமும் தாய்மொழியும் கற்பிக்கப்படுகிறது. பிறகு ஆறாவது வகுப்பு வந்தவுடன் மூன் றாவது மொழியாக இந்தி கற்பிக்கப்படுகிறது. இதனால் வேலை பார்க்கவோ அல்லது தொழில் செய்யவோ பிற்காலத்தில் வேறு மாநிலங்களுக்குச் செல்வது எளிதாகிறது. அதையே நமது மாநிலத்திலும் பின்பற்றலாம். இதில் திணிக்கப்படுகிறது என்ற பேச்சுக்கு இடமே இல்லை. மதிப்பெண்கள் பெறுவதற்காக மட்டுமே அயல்நாட்டு மொழிகளான பிரெஞ்சு, ஜெர்மனி முதலிய மொழிகள் பள்ளிகளில் கற்பிக்கப்படுவது தேவையே இல்லை. ஒவ்வொரு மாணவனும் தனது தாய்மொழி அறிவைச் சிறு வயதிலேயே கட்டாயம் வளர்த்துக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட முறையில் எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம்.

– **வி. ஜெயலட்சுமி,** கோவை.

பள்ளிகளில் மூன்றாம் மொழி ஒரு கட்டாயமில்லாப் பாடமாக 6 – 8ஆம் வகுப்பிலிருந்து மட்டுமே இருக்க வேண்டும். அதன் மதிப்பெண்கள் தேர்ச்சியில் எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆனால், மூன்றாம் மொழி முதலில் தன் குழந்தைகளுக்கு வேண்டுமா? வேண்டாமா? என்பதையும் ஒருவேளை வேண்டுமெனில் எந்த மொழி வேண்டும் என்பதையும் பெற்றோர்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அதே நேரத்தில் தங்களுடைய தாய்மொழியை மூன்றாம் மொழி ஆக்கிரமிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அந்தந்த மாநில ஆட்சியாளர்கள், படித்தவர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகளின் கடமை. இல்லையெனில் பிராந்திய / தாய்மொழிகள் மெல்ல இனிச் சாகும்.

– **டாக்டர் எஸ். பேச்சியப்பன்**
பாரதி, கோவை.

குழந்தையின் சாட்சியம் கொல்லுமோ அன்னையை?



ஜென்னெட் டிவைஸ்

ஒரு பொய்சாட்சியாய் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு, தன்னை ஈன்றெடுத்த அன்னைக்கே தூக்குத் தண்டனையைப் பெற்றுக்கொடுத்த ஜென்னெட் டிவைஸ் (Jennet Device) எனுமிந்த 'சூனியக்காரி' தனது வாழ்வு குறித்து எதையும் எழுதி வைக்கவில்லை.

ஒன்பது வயது நிரம்பிய சிறுமியான அவள், எதையும் எழுதிவைக்கும் அளவு கல்வியறிவும், பொருளாதார நிறைவும் கொண்ட குடும்பத்திலும் பிறந்திருக்கவில்லை.

வீதியோரங்களிலும், நகரத்தின் பரபரப்பான சாலைச் சந்திப்புகளிலும் நம்மிடம் பிச்சைப் பாத்திரத்தை ஏந்தி நிற்கும் இன்றைய சில மனிதர்களைப் போல்தான் ஜென்னெட்டின் தாயும், தந்தையும், அவளது உடன்பிறந்தோரும் பிழைத்து வந்தார்கள்.

இங்கிலாந்தில் 1600-களின் தொடக்கத்தில் மதத்துடன் கைகோர்த்து அரசியல் விளையாடிய ஒரு சூதாட்டத்தில் பலியான இவர்களை, ஆங்கில இலக்கிய வரலாற்றாளர்களும் திறனாய்வாளர்களும் இன்றுவரை தேடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

அவர்கள் கொலையுண்ட அந்தக் குரூரச் சம்பவத்தை நினைத்துப் பார்க்கும்பொழுது, ஒரு நிமிடம் தெளிவின்றித் தோன்றி நிழல்களாய் மறையும் அவர்களின் முகங்கள், அரசு நிகழ்த்திய அதிகாரப் படுகொலைகளுக்கு ஆதாரங்களாய்த் தெரிகின்றன.

இங்கிலாந்தின் அன்றைய நீதியரசர்கள் எல்லாம் தத்தமது ஆதாயங்களுக்காக நீதி தேவதையின் விழித் திரையை அகற்றியபோது பரிதாபமாய்க் கொலையுண்ட, சமூகத்தின் இந்த விளிம்புநிலை மனிதர்கள், இரந்து பிழைப்பதைத் தம் தொழிலாகக் கொண்டிருந்தாலும், இங்கிலாந்தின் மன்னராட்சி வரலாற்றோடு இணைத்துப் பேசப்படுவதுதான் இன்று வரலாற்றை நோக்கிக் காலம் எழுப்புகிற உரத்த குரல்.

இங்கிலாந்தின் வரலாற்றைப் பொறுத்தவரை ஜென்னெட் வாழ்ந்து வந்த லேன்கஷயர் (Lancashire) எனுமந்த மலை சார்ந்த மண் ஒழுங்கீனத்திற்குப் பேர் போனதாகவும், தீவிரவாதிகளின் வாழ்விடமாகவும் இருந்தது.

இங்கிலாந்தில் செயல்பட்டு வந்த ரோமன் கத்தோலிக்கத் திருமடங்கள் அனைத்தையும் மன்னர் எட்டாம் ஹென்றி (Henry VIII) இடித்துத் தரைமட்டமாக்கிய காலத்தில், லேன்கஷயருக்கு அருகில், அவ்வூர் மக்களின் ஆன்மிகத் தேவைகளை நிறைவு செய்து வந்த சிஸ்டர்சியேன் திருமடமும் (Cistercian Abbey) 1537-இல் அழிக்கப்பட்டது.



பா. மீனாட்சிசுந்தரம்

இதனால், தமது வழிபாட்டு உரிமையைப் பறிகொடுத்த அவ்வூரின் ரோமன் கத்தோலிக்கச் சமயத்தவரைச் சமூக விரோதிகளாகவும், ‘Witchcraft’ எனும் சூனிய வித்தை கொண்டு மனிதர்களைக் கொன்று குவிப்போராகவும் பார்த்தது அந்நாளைய இங்கிலாந்து அரசு.


பிச்சை எடுப்பது தவிர, ஜென்னெட்டின் குடும்பம் வேறு சில பணிகளிலும் ஈடுபட்டு வந்தது. அவர்களின் மரபுசார்ந்த மருத்துவ முறை களின் வழியே நோய்களைக் குணப்படுத்துதல், அக்கம்பக்கத்தினருக்கு வீட்டுவேலைகள் செய்து கொடுத்தல் போன்றவை அவர்களின் வாழ்வா தாரங்களாய் இருந்தன.

ஒருவித ஊசிகளைக் கொண்டு உடல்மேல் உண்டான கட்டிகளை அகற்றுதல் (Treating Warts), குறி சொல்லுதல் (Divination), மாந்திரீகத் தால் பாலுணர்வை விளைவித்தல் (Love Magic) என்பதாக அவர்களின் மரபுசார்ந்த நம்பிக்கை களும், செயல்களும் தொடர்ந்து கொண்டிருந்தன.

ஒருநாள் ஜென்னெட் டிவைஸின் மூத்த சகோதரியான ஆலிசன் டிவைஸ் (Allison Device), காட்டுப்பாதை ஒன்றில், நடந்து போய்க் கொண்டிருந்தபோது, தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த வணிகன் ஒருவனை எதிர் கொண்டாள். அவனிடம் சில ஊசிகள் வாங்க வேண்டி, அவன் சுமந்துவந்த மூட்டையைத் திறந்து காட்டச் சொன்னாள். எதன் காரண மாகவோ அதை மறுத்த வணிகனை, ஆலிசன் டிவைஸ் ஒருமுறை உற்றுநோக்கிச் சபித்தாள். மறுநொடியே கீழே விழுந்த வணிகன், தனது கைகளும், கால்களும் அசைவற்றுக் கிடப்பதை உணர்ந்தான்.

வணிகனின் மரணத்தில் முடிந்த இச் சம்பவத்தை அப்பகுதியின் நீதியரசர் ரோஜெர் நோவெல் (Roger Nowell) வழக்காகப் பதிவு





செய்து விசாரித்தார். இதைத் தொடர்ந்து ஆலிசன் டிவைஸ், அவளது அண்ணன் ஜேம்ஸ் (James), அவளது பாட்டி டெம்டைக்ஸ் (Demdikes) மற்றும் அவர்களது அக்கம்பக்கத்தினர் என இருபது பேர் கைது செய்யப்பட்டு, லேன்கஷயர் மண்ணிலிருந்து லேன்கேஸ்டெர் கோட்டைக்கு (Lancaster Castle) இழுத்துச் செல்லப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நடந்த சில காலத்தில், ஒரு புனித வெள்ளியன்று பெரும்பான்மை மக்களெல் லாம் தேவாலயங்களில் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, ஜென்னெட்டின் தாய் எலிசபெத் டிவைஸ் (Elizabeth Device) மட்டும் தனது வீட்டில் சுமார் இருபது பேர்களுக்கு விருந் தொன்றை ஏற்பாடு செய்திருந்தாள். அவ்விருந் திற்குத் திருடப்பட்டிருந்த யாரோ ஒருவரின் செம்மறி பலியாகியிருந்தது.

மறைமுகமாய் நிகழ்ந்த இக்கூடுகை, லேன் கேஸ்டர் கோட்டையைத் தகர்க்க வேண்டியும், அதன் சிறைக்காவலரைக் கொலை செய்ய வேண்டியும், 'சூனியக்காரிகள்' ஒன்றுசேர்ந்து நடத்திய சந்திப்பு என்று சந்தேகித்த ஓர் உள்ளூர்க் காவலர், விருந்தில் பங்கேற்ற அனைவரையும் கைது செய்தார். ஆனால் ஜென்னெட்டை மட்டும் அவர் விட்டுவைத்ததுதான் இவ்வழக்கின் பின்னா லிருந்த சதியைக் கண்டுபிடிக்க உதவிய சாவி.

நவம்பர் 5, 1605–இல் இங்கிலாந்தின் பாராளு மன்றத்தை அழிக்கவிருந்த Gun Powder Plot எனும் அந்த 'வெடிமருத்து வியூகத்திற்கு' ஜேம்ஸ் மன்னரின் குடும்பம் தப்பித்திருந்த நாள் முதலே, நாடெங்கும் ஒருவகையான பேரச்சம் பரவியிருந் தது. ப்ராட்டஸ்டண்ட் (Protestant) அரசை வீழ்த்த, பதிமூன்று ரோமன் கத்தோலிக்கர்கள் செய்ய விருந்த இக்கூட்டுச் சதியிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பிய ஜேம்ஸ் மன்னர், சூனியக்காரிகளை வேட்டையாடித் தூக்கிலேற்றும் செயலில் பேர் போனவராகத் திகழ்ந்தார்.

விவிலியத்தை இரண்டு பெரும் இறையியல் அறிஞர் குழுக்களைக் கொண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜேம்ஸ் மன்னர் ஓர் எழுத்தாளரும்கூட. அவர் எழுதிய 'டீமொனாலஜி' (Demonology) என்ற நூல் சூனியக்காரிகளை வேட்டையாடும் பணிக்கு ஒரு கையேடாகவே திகழ்ந்த காலமது. இது தவிர 'மேலியஸ் மெலிபிகரம்' (Malleus Maleficarum) எனும் ஒரு நூலை யோகான் ஸ்பிரெங்கர் (Johann Sprenger) மற்றும் ஹெய்ன்ரிக் கிரேமெர் (Heinrich Kraemer) என்ற இரண்டு இறையியல் அறிஞர்கள், ஜெர்மனி யில் 1486–ஆம் ஆண்டு எழுதியிருந்தனர். சூனி யக்காரிகளைக் கண்டுபிடித்து அழிக்க வேண்டிய

கையேடாய் எழுதப்பட்ட இந்நூல் பெருமளவு ஐரோப்பிய நாடுகளில் புகழ் பெற்றிருந்தது.

தன் மனைவியுடன் ஸ்காட்லாந்திற்குக் கடற்பயணம் மேற்கொண்டபோது, அங்கே வீசிய சூறாவளிகூட யாரோ ஒரு சூனியக்காரியால் ஏவி விடப்பட்ட ஒன்று என எண்ணும் அளவுக்கு ஜேம்ஸ் மன்னரின் மதம் சார்ந்த நம்பிக்கைகள் இருந்தன. சூனிய வித்தைத் தொடர்பான வழக்குகளில் குழந்தைகள் கூறும் சாட்சியங்களை நீதிமன்றம் ஏற்க வேண்டும் என்பது அவரின் 'டிமொனாலஜி' நூலில் அடிக்கோடிட்ட வாக்கிய மாய் இருந்தது. அவரின் இந்த வாக்கியமே ஜென் னெட்டை, அவளது தாய்க்கு எதிராகச் சாட்சியம் கூறவைத்து, அவளுக்கு மரண தண்டனையையும் பெற்றுக் கொடுத்தது.

ஏதும் அறியாச் சிறுமியான ஜென்னெட்டை நீதிமன்றத்தில் சாட்சியமாக நிறுத்த வேண்டும் என்ற ரோஜர் நோவெல்லின் திட்டத்திற்குச் சாதக மாய் அமைந்திருந்ததும் அந்த வாக்கியமே. கைது செய்யப்பட்ட சூனியக்காரிகளின் குற்றத்தை ஜென்னெட் எனும் சாட்சியைக் கொண்டு நிரூபித்து, அவர்களுக்கு மரண தண்டனையை நிறைவேற்றினால், ஜேம்ஸ் மன்னரின் மனதில் இடம்பிடிக்க முடியும் என்பதும் ரோஜர் நோவெல் லின் எண்ணம்.


தனது தந்தை இறந்தபின், தன் விதவைத் தாய்க்கும் வேறோர் ஆணுக்கும் பிறந்தவள் ஜென்னெட். தன் பிறப்பின் உண்மையை அறிந் திருந்ததால், ஜென்னெட்டின் ஆரம்பகால வாழ்வென்பது அவளிலிருந்தே அந்நியப்பட்ட ஒன் றாக இருந்ததை இன்றைய ஆங்கில எழுத்தாளர் கள் தமது வாசிப்பின் வழியே எடுத்துரைக் கின்றனர்.

ஆகஸ்டு 18–ஆம் தேதி, 1612–ஆம் ஆண்டு சூனியக்காரிகள் மீதான அந்த வழக்கு விசார ணைக்கு வந்தது. அதற்கு முன்னரே, ஜென்னெட் டின் பாட்டியான டெம்டைக் சிறை வளாகத்தி லேயே தன் உயிரை விட்டிருந்தாள். இப்போது சாட்சியம் கூறுவதற்காக ஜென்னெட் என்ற அந்த ஒன்பது வயதுச் சிறுமி நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டாள். நீதிமன்ற அறையில் மகளைக் கண்ட எலிசபெத் கண்ணீர்விட்டுக் கதறினாள்.

தனது தாயின்முன் சாட்சியம் கூறத் தயங்கிய ஜென்னெட்டின் மனநிலையைப் புரிந்துகொண்ட நீதிமன்றப் பணியாளர்கள், எலிசபெத்தை நீதி மன்ற அறையிலிருந்து வெளியே இழுத்துச் சென் றனர். இப்போது ஜென்னெட், நீதிமன்றத்தில் இருந்த ஒரு மேசையின் மேல் ஏறி நின்று, தன் தாயை ஒரு சூனியக்காரி என்றும், அவளும் அவ



மேலியஸ் மெலிபிகரம்



ளது கூட்டத்தாரும் கொலைத் திட்டம் தீட்டவே புனித வெள்ளியன்று ஒரு பெருவிருந்தை தன் வீடான 'மாள்கின் டவர்சில்' (Malkin Towers) நடத்தினார்கள், என்று இவ்வழக்கை விசாரித்த இரண்டு நீதியரசர்களான அல்த்தெயேம் (Altham) மற்றும் ப்ரம்லீ யின் (Bromley) முன்பு கூறி முடித்தாள்.

அதே நேரத்தில், நீதி மன்றத்தில் நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பிலும் குற்றம் சுமத்தப்பட்டவர்களில் எவரெவர் குற்றவாளிகள் என்று அவரவரின் கைகளைப் பிடித்திழுத்து நீதியரசருக்குக் 'குற்றவாளிகளைக்' காட்டிக் கொடுத்தாள் ஜென்னெட்.

தனது தாய், சகோதரி, சகோதரன் மற்றும் பாட்டி உட்பட, குற்றம் சுமத்தப்பட்டவர்களெல்லாம் கைது செய்யப்பட்ட நேரங்களில் இருந்து, அவர் கள் மீதான வழக்கு, நீதி விசாரணைக்கு வரும் நாள்வரை, எங்கே, யாருடன் ஜென்னெட் இருந் தாள் என்ற கேள்விக்கு இன்றுவரை விடை யில்லை.

இருந்தாலும், குற்றம் சுமத்தப்பட்ட சூனியக்காரிகளைத் தூக்கிலேற்ற நினைத்த நீதியரசர் ரோஜர் நோவெல், வழக்கிற்கான


லேன்கேஸ்டெர் கோட்டை


சாட்சியமளிக்கும் ஜென்னெட்

சாட்சியமாய் ஜென்னெட் என்ற அச்சிறுமியை மரண அச்சம் ஊட்டித் தயார்படுத்தியிருக்கக் கூடும், என இன்றும் மேற்குலக இலக்கிய ஆய்வறிஞர்களும் வரலாற்றாளர்களும் ஐயுறு கின்றனர்.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்த இரண்டு நாட்களும், அதைக் கவனித்தபடி குறிப் பெடுக்கப் பணிக்கப்பட்டிருந்தார் நீதிமன்ற எழுத்தரான தாமஸ் பாட்ஸ் (Thomas Potts). பாட்ஸ் ஆவணப்படுத்திய அக்குறிப்புகளே பிற் காலத்தில் The Wonderfull Discoverie of Witches in the Countie of Lancaster *எனும்* நூலாக வெளிவந்தது. அரசின் விசுவாசியாய் இருந்த தாமஸ் பாட்ஸிற்குப் பிற்காலத்தில் தனது வேட்டை நாய்களைப் பராமரிக்கும் பணியை ஜேம்ஸ் மன்னர் கொடுத்தார்.

இரண்டு நாட்கள் நடந்த வழக்கு விசாரணை யின் முடிவில், ஜென்னெட்டின் தாய், சகோதரி, சகோதரன் உட்பட 'குற்றம் நிரூபிக்கப்பட்ட' பத்துப் பேரும் தூக்கு மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

அவரவர் முறை வரும்போது, ஒவ்வொரு குற்றவாளியும் தூக்குமேடை ஏறித் தனது கழுத்தில் சுருக்கு மாட்டி நின்றதற்குப் பின், முன்னே கூடியிருந்த பொதுமக்கள் ஓடிச் சென்று தூக்கில் தொங்குபவரின் கால்களைப் பலமாகக் கீழே இழுத்து, கழுத்தைச் சுற்றியிருக்கும் சுருக்குக் கயிற்றின் இறுக்கத்தை மேலும் அதிகப் படுத்துவார்கள். இப்படி ஒவ்வொரு மரண தண்ட னைக் குற்றவாளியும் தூக்கில் தொங்கி உயிர்விட ஏறக்குறைய இருபது நிமிடங்கள் பிடிக்குமாம்.

இவ்வழக்கில் ஜென்னெட் வழங்கிய சாட்சி யம், இங்கிலாந்தின் சட்ட வரலாற்றில் குழந்தை கள் கூறும் சாட்சியத்தைக் கொண்டு குற்றத்தை நிரூபிக்க முடியும் என்றதொரு முன்தீர்ப்பு நெறியை (Precedent) உருவாக்கியது. ஆனால் அதுவே, இருபத்தியிரண்டு ஆண்டுகள் கழித்து அவளுக்கே எதிராக முடிந்தது.

இப்போது ஜென்னெட்டிற்கு வயது 31. சூனிய வித்தை தொடர்பான இன்னொரு வழக்கு நீதி மன்ற விசாரணைக்கு வந்தது. அதில் ஜென் னெட்டும் குற்றம் சுமத்தப்பட்ட இருபது 'சூனியக் காரிகளில்' ஒருத்தியாக இருந்தாள். விசாரணை நடந்த அந்நாளில் எட்மண்ட் ராபின்சன் (Edmund Robinson) என்ற பத்து வயதுச் சிறுவன் அளித்த சாட்சியத்தில், தன் தாயைப் பலிகொண்ட அதே லேன்கேஸ்டெர் சிறையில் 1634–இல் அடைக்கப் பட்டாள் ஜென்னெட்.

எவரெவர் 'சூனியக்காரிகள்' என்று கண்டு பிடிக்க உதவுவது அவர்களின் உடலில் எங்கோ அமைந்திருக்கும் 'Teats' எனப்படும் முலைக் காம்பைப் போன்ற அடையாளங்கள். கடவுளுக்கு எதிரானவர்களான சூனியக்காரிகளிடம் பிசாசுகள் பால் அருந்தும் பகுதிகளாக நம்பப்பட்ட பெண்ணின் அந்த அங்க அடையாளங்கள், ஜென் னெட்டின் உடலிலும், அவளது மறைவுப் பகுதி களில் இருந்தனவென்று லேன்கேஸ்டெர் சிறைக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

அறிவியலுக்கு முரணான இதுபோன்ற நம்பிக்கைகள் மறைந்துவிட்ட ஒரு காலத்தில், ஜென்னெட் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப் பட்டாள். ஆனாலும் சிறைவாசிகள் ஒவ்வொரு வரும் சிறையில், தான் தங்கி இருந்ததற்கும் உணவுண்டதற்குமான கட்டணத்தை அரசுக்குச் செலுத்தும்வரை அவர்களுக்கு விடுதலை கிடை யாது என்ற விதியும் அன்றைய இங்கிலாந்தில் இருந்தது. அப்படிப்பட்ட பெருந்தொகையைச் செலுத்தி, சிறைவாசத்திலிருந்து விடுதலை பெற்ற வளாக ஜென்னெட்டும் நிச்சயம் இருந்திருக்க மாட்டாள். 1636–க்குப் பிறகு ஜென்னெட்டைப் பற்றிய மேலதிகத் தகவல் ஏதும் லேன்கேஸ்டெர் சிறைக் குறிப்புகளில் கிடைப்பதில்லை.

"இப்போது 'சூனியக்காரி' என்ற குற்றச் சாட்டிலிருந்து விடுபட்டிருக்கிற, இந்த 'ஜென் னெட் டிவைஸ்' தானோ, அன்றொரு நாள், தன் அன்னைக்கு எதிராகச் சாட்சியம் கூறி, அவ ளுக்கு மரணதண்டனையைப் பெற்றுக் கொடுத்த அந்த ஒன்பது வயது 'ஜென்னெட் டிவைஸ்'?" என்ற கேள்விக்கும் விடை தராமல் நழுவிச் செல்கிறது 'சூனியக்காரிகளின் வரலாறு.'

●



விவாதம்

தேவை நீட் தேர்வு

'நீட்' தேர்வு மருத்துவப் படிப் பிற்கும், ஐ.ஐ.டி. தொழில்நுட்பப் படிப் புக்கும் முக்கியமானதாக நடத்தப் படுகிறது.

மருத்துவப் படிப்பிற்கு (எம்.பி. பி.எஸ்.) இந்த ஆண்டு இந்தியாவில் 16 லட்சம் மாணவர்கள். தமிழ்நாட்டில் 1 லட்சத்து 18 ஆயிரம் மாணவர்கள் மனுச் செய்தனர்.

தமிழ்நாட்டிலுள்ள 48 அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளிலுள்ள 5,550 இடங்களுக்கு 1 லட்சத்து 18 ஆயிரம் மாணவர்கள் தமிழ்நாட்டில் விண்ணப்பித்துள்ளார்கள். இவர்களில் ஏறக்குறைய 1 லட்சத்து 11 ஆயிரம் பேரைத் தவிர்த்தால்தான், 5,550 மாண வர்களுக்கு இடம் தர முடியும். யாரைத் தவிர்ப்பது? எப்படித் தவிர்ப்பது?

இதற்காகத்தான் தேசியக் கல்வியில் நுழைவுத் தேர்வு (Natioanal Educational Entrance Test) உருவாக்கப்பட்டது. இத் தேர்வு சற்று வித்தியாசமானது. வழக்க மான தேர்வுகளில் வினாத்தாள்களுக்கு விடைகளை விடைத்தாள்களில் எழுது வார்கள். ஆனால், இத்தேர்வில் வினா வும், விடையும் ஒன்றாகவே அச்சடிக்கப் பட்டிருக்கும்.

ஒவ்வொரு வினாவிற்கும் 4 விடை கள். இவற்றில் மிகச் சரியான ஒரு விடையை "டிக்" செய்தால் போதும். தவறான விடையை "டிக்" செய்தால், மதிப்பெண் குறைக்கப்படும். இத்தேர் வின் காலம் 3 மணி.

நீட் தேர்வு என்றவுடன் தமிழ் நாட்டில் மட்டும் ஏனோ ஒரு பரபரப்பு. அந்தப் பரபரப்புக்கு உள்ளாகிய மாணவர்கள், தேர்வு எழுதும்வரை ஒருவிதப் பதற்றத்துடன் காணப்படு கிறார்கள்.

அதிக எண்ணிக்கையில் உள்ள மாணவர்களை வடிகட்டும் சாதனமாக நீட் தேர்வு முறையை அணுகாமல், அது ஏதோ மாணவர்களை வஞ்சிக்கும் திட்டமாக அரசியல்வாதிகள் இதனைக் குறை கூறுகிறார்கள்.

நீட் தேர்வு நடத்தப்பட்டால், அந்தத் தேர்வில் தேர்வு செய்யப்படுகிற மாணவர்கள், சி.பி.எஸ்.இ., கேந்திரிய வித்தியாலயாப் பள்ளிகளிலிருந்துதான் அதிகமாகத் தேர்வாகிறார்கள் என்று முன்பு கூறப்பட்டது. நமது மாநிலப் பாடத்திட்டத்தில் படிக்கும் மாணவர் கள் நீட் தேர்வில் அதிகமாக வெற்றி பெற முடியவில்லை என்றும் கூறப் பட்டது.

இதனைக் கவனத்தில் கொண்டு சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்திற்கும் மேலாகத் தமிழ்நாடு பள்ளிக் கல்வியின் பாடத்திட்டம் சென்ற ஆண்டு தர உயர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை

அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆனாலும், அரசுப் பள்ளி மாணவர்கள் நீட் தேர்வில் அதிகமாக வெற்றி பெற முடியாமல் போவதைக் கருத்தில் கொண்டு நீதியரசர் பி. கலையரசன் தலைமையில் இதனை ஆய்வு செய்து தமிழக அரசு ஓர் அறிக்கையை இந்த ஆண்டு கேட்டது.

அவர் அளித்த அறிக்கை, நீட் தேர்வில் 10 சதவிகித இடங்களை அரசுப் பள்ளி மாணவர்களுக்குத் தர வேண்டும் என்றது. தமிழக அரசு 7.5% இட ஒதுக்கீடு செய்துள்ளது. அதனால் மேலும் 300 மருத்துவ இடங்கள் தமிழ் நாட்டு மாணவர்களுக்குக் கிடைக்க உள்ளன.

இந்த ஆண்டு தமிழ்நாட்டில் நீட் தேர்விற்கு விண்ணப்பித்த 1 லட்சத்து 18 ஆயிரம் மாணவர்களில் 95 சதவீதம் பேர் தேர்வு எழுதியுள்ளார்கள். இடங்களோ 5,550 தான். தேர்வு எழுதிய தமிழ்நாடு பாடத்திட்டத்தில் படித்த மாணவர்கள், இந்த நீட் தேர்வு எளிதாக இருந்தது என்று பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி கொடுத்ததைத் தொலைக்காட்சிகளில் பலரும் பார்த்திருப்பார்கள்.

நீட் தேர்விற்குத் தயாரான மாணவர்களில் இந்த ஆண்டு 3 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். எப்படியாவது இந்த நீட் தேர்வில் எம்.பி.பி.எஸ். படிக்க இடம் வாங்கும் மதிப்பெண்களைப் பெற்றுவிட வேண்டும் என்ற வெறியோடு படித்து வந்தவர்கள் இவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே இத்தேர்வை எழுதித் தேர்வு பெறத் தவறியவர்கள் இவர்கள். தேர்வுக்கான நாள் நெருங்க, நெருங்க அவர்கள் மனதில் பயம் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது.

இந்தப் பின்புலத்தில், இம்மாணவர்களின் பெற்றோர்கள் அவர்களை டாக்டராக்குவதைத் தங்களுக்குக் கிடைக்கும் மிகப்பெரிய வெற்றியாகக் கொண்டாடக் காத்திருந்தவர்கள் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்படியென்றால், நீட் தேர்வு எழுதும் மாணவர்களையும்விட, அம்மாணவர்களின் பெற்றோர்களின் மனதில்தான் அப்பேராசை அதிகமாகியிருக்கிறது. அதன் காரணமாகத் தங்கள் பிள்ளைகளுக்கு அப்பெற்றோர்கள் ஒவ்வொரு நாளும் அந்த நீட் தேர்வை நினைவூட்டி, அப்பிள்ளைகள் அதை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டும் என்று தூண்டிவிட்டு வந்திருக்கிறார்கள் என்றால் அது தவறல்ல.

ஒரு தருணத்தில்கூட பெற்றோர்கள் நீட் தேர்வு எழுதப்போகும் தங்கள் பிள்ளைகளை அழைத்து, நீட் தேர்விற்கு நிகரான பிற தேர்வுகளும் உண்டு. வங்கித் தேர்வு, ரயில்வே தேர்வு, ராணுவத் தேர்வு, யு.பி.எஸ்.இ., தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வு எனப் பல தேர்வுகள் உண்டு. நீட் தேர்வுக்காகப் பயப்பட வேண்டாம் என்று அவர்களோடு பேசி, அவர்களின் பயத்தைப் போக்கியதாகத் தெரியவில்லை.

இத்தேர்வுகளில் தேர்வு எழுதுகிற மாணவர்கள் யாரும் தற்கொலை செய்து கொள்வதில்லை. நீட் தேர்வில் அதுவும் மருத்துவப் பிரிவில் தேர்வு எழுகிற மாணவர்கள் மட்டும் இனம் தெரியாத ஏதோ ஒரு பயத்திற்கு உள்ளாகி, உயிரை மாய்த்துக் கொள்கிற துயரம் தமிழ்நாட்டில் மட்டும் தொடர்ந்து சம்பவிக்கிறது.

முதலில் அனிதா என்ற அரியலூர் மாணவி தற்கொலை செய்து இறந்து போனாள். இப்போது விருதுநகர், மதுரை, தருமபுரி ஆகிய மூன்று ஊர்களில் இரண்டு மாணவர்களும், ஒரு மாணவியும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள்.

இறந்தவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவு என்று இதனைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. தகுதியை

நிர்ணயிக்கும் ஒரு தேர்வைத் தன்னம்பிக்கையோடு எதிர் கொள்ளக்கூடிய துணிச்சல், அந்தத் தேர்வை எழுதிய ஒரு லட்சத்திற்கும் அதிகமான மாணவர்களுக்கு மத்தியில் இருக்கும்போது, இவர்களுக்கு மட்டும் ஏன் இல்லாமல் போனது என்பது பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

ஏன் இவர்களுக்கு இந்தப் பலவீனம்? இறந்த இந்த மூன்று மாணவர்களும் மற்ற மாணவர்களுக்கு முன்னுதாரணமாகிவிடக் கூடாது என்ற கவலையும் நமக்கு உண்டு.

அப்படியென்றால், இந்த மூன்று மாணவர்களும் தாங்கள் எதிர்கொள்ளப் போகும் நீட் தேர்வில், மீண்டும் தோல்வியடைந்துவிடுவோமோ என்ற அச்சம் அவர்களுக்குள் அவ்வப்போது ஏற்பட்டுக்கொண்டே இருந்திருக்கலாம்.

தேர்ச்சி பெற்றுவிடலாம் என்ற ஒரு நம்பிக்கையும் தேர்ச்சியடையாமல் போய்விடுவோமோ என்ற அவநம்பிக்கையும் அவர்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டு அவர்களை உறங்கவிடாமல் செய்திருக்க வேண்டும். இதனால் சரியாகச் சாப்பிடுவதைக்கூட அவர்கள் தவிர்த்திருக்கலாம்.

18 வயது வரை அவர்களை ஊட்டி வளர்த்த அவர்களுடைய பெற்றோர்கள், அவர்களை உற்றுப் பார்த்திருந்தால் அவர்களின் அகத்தை அவர்களின் முகம் காட்டியிருக்கும்.

அந்த மாணவர்களுக்கு ஒரு பக்கம் நீட் தேர்வு என்ற ஒரு கொடூரமான தண்டனை. இன்னொரு பக்கம் அவர்களுடைய பெற்றோர்களின் பேராசை என்ற தண்டனை. பிசாசுக்குப் பயந்து ஓடினால், கடலில் விழுந்து சாக வேண்டும். விழாமல் இருந்தால் பிசாசுக்கு





இரையாக வேண்டும் என்ற நிலைமையில், இம்மாணவர்கள் அலைக்கழிக்கப்பட்டுள்ளார்கள்.

இம்மாணவர்களுக்கு ஆறுதல் சொல்ல, அரவணைத்துக்கொள்ள, அறவழி காட்ட அம்மாணவர்களின் ஆசிரியர்களும் அவர்களுக்குக் கிடைப்பது அரிதாகிவிட்டது. காரணம், இம்மாணவர்கள் வீட்டிலிருந்து தேர்வுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறவர்கள்.

ஒரு மர்மக் கதையைப் போல இவர்கள் உள்ளுக்குள்ளே புழுங்கிக் கொண்டு வெற்றி கிட்டத் தவறுமானால் எப்படிப் பெற்றோர்களைச் சந்திப்பது? நண்பர்களைச் சந்திப்பது? என்ற சுனாமிக்குள் இவர்கள் சிக்கிவிடுகிறார்கள்.

இவ்வாறு பார்க்கையில், மாணவர்களின் தற்கொலையில் அவர்களுடைய உடம்பு மட்டும்தான் மாணவர்களுக்கு உரியதே தவிர, அவர்களின் தற்கொலைக்கு அவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஏன் இந்தச் சமூகமும் காரணமாகும்.

மருத்துவக் கல்வியைப் படித்து முடித்து ஏழை மக்களுக்குச் சேவை செய்யப் போவதாக இவர்கள் ஒன்றும் பிரகடனம் செய்தவர்கள் அல்ல. இவர்களுடைய பெற்றோர்களும்கூட அவ்வாறு சொல்லவில்லை. முழுக்க முழுக்க இந்த மருத்துவக் கல்வியை வணிக நோக்கில்தான் தங்களின் பிள்ளைகளுக்கு அப்பெற்றோர்கள் வழங்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

அதனால், இந்த நீட் தேர்வு என்பது முதலீட்டுக்கான லாபக் கணக்கைப் பார்க்கும் வணிகமாகக் குறுகிப் போய் விட்டது. அவர்களுக்கு மன தைரியத்தை ஊட்டி ‘வாழ நினைத்தால்

வாழலாம், வழியா இல்லை பூமியில்' என்ற கவியரசரின் பாடலைப் பலமுறை கேட்க வைத்து, அவர்களை ஊக்கப் படுத்தி, உற்சாகப்படுத்தி உன்னதப் படுத் துவதற்கு எந்தத் திட்டமும் இல்லை.

அதனால்தான், இந்த விபரீத முடிவுக்குப் பலியாவோர் சொற்ப எண் ணிக்கையில் இருந்தாலும், ஒட்டுமொத்த மாணவர் சமுதாயத்தின் மனப்போக்கு எப்படி என்பதற்கான ஓர் அடையாளம் தான் இது.

இந்தத் தற்கொலைச் சம்பவத்தில் மிகவும் வருத்தப்படக்கூடிய செயல், இது நடந்து முடிந்த பிறகு ஏதோ இதற் காகவே காத்துக் கொண்டிருந்ததைப் போல அரசியல் கட்சிக்காரர்கள் ஆவிப் பறந்து அங்கே ஓடுகிறார்கள். பெற்றோர்களுக்கு ஆறுதல் தருவதாகப் பேசுகிறார்கள். லட்சக்கணக்கில் பணத்தை அவர்கள் கையில் திணித்து அவர்களுக்கு உதவி செய்வதைப் பட மெடுக்கிறார்கள். பத்திரிகைகள் அவற்றை வெளியிடுகின்றன.

இப்படிப்பட்ட பண உதவிகள், அக் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலைக் கான வாக்குறுதிகள், தொண்டு நிறுவனங்களின் நிதியுதவிகள் இவை அனைத்துமே, இந்தத் தற்கொலையைக் கடுமையாகக் கண்டனம் செய்வதற்குப் பதிலாக, ஊக்குவிப்பது போல அமை கிறது. தற்கொலையால் சம்பந்தப்பட்ட குடும்பத்திற்கு எந்தச் சேதமும் ஏற்படா மல் தடுத்துவிட்டதைப் போலவும் அது புரிந்துகொள்ளப் படுகிறது.

இவற்றையெல்லாம் உற்றுப் பார்த்த சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கிருபாகரன் குழு, **"அரசியல் கட்சிகளின் இதுபோன்ற செயல்கள் தற்கொலைகளை ஊக்குவிப்பதாக உள்ளன"** எனத் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

ஏனெனில், இதே சென்னை உயர் நீதிமன்றம்தான் "நீட் தேர்வை மாண வர்கள் எதிர்கொள்ள மாவட்ட அளவில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படு மானால், தோல்வியால் நிகழும் தற் கொலை மரணங்களைத் தடுக்க முடி யும்" என்று ஏற்கனவே கருத்துத் தெரி வித்துள்ளது என்பதும் கவனிக்கத் தக்கது.

நீட் தேர்வு என்பது 5,550 இடங் களுக்குப் போட்டி போடுகிற 1 லட்சத்து 18 ஆயிரம் மாணவர்களை வடிகட்டு வதற்குச் சமமானது.

ஓர் அரசியல் கட்சித் தலைவர் கூறு கிறார், "நீட் தேர்வை ஒழித்துவிட்டு +2 தேர்வில் மாணவர்கள் எடுத்த மதிப்பெண் களை வைத்து, இந்த 5,550 மாணவர் களையும் தேர்ந்தெடுக்கலாம்" என்கிறார்.

+2 தேர்வு என்பது அம்மாணவர் கள் பல வழிகளில் பயணிப்பதற்கான இறுதித் தேர்வு. பொறியியல், கலை, அறிவியல், வணிகவியல், மருத்துவ வியல், தணிக்கையியல் இப்படிப் பல துறைகள் உள்ளன. +2 தேர்வு என்பது இவற்றில் ஏதேனும் ஒன்றை மாண வர்கள் தேர்ந்தெடுப்பதற்கான சந்திப்பு மையம்.

ஆனால் நீட் தேர்வு என்பது ஒரு குறிப்பிட்ட படிப்பிற்கு மட்டுமே உரிய தகுதியுள்ள மாணவர்களை வடிகட்டித் தேர்ந்தெடுப்பது.

அதனால் நீட் தேர்வு அகில இந்திய அளவில் எந்த மாநிலத்திலும் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் அநேகமாக எந்தத் தற்கொலையும் இல்லாமல் நடந்து கொண்டுதான் இருக்கிறது. தமிழ்நாட் டில் இந்தத் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்கான உரிய நடவடிக் கையைத்தான் ஆளும் கட்சியும் பொறுப்பான எதிர்க்கட்சியும் எடுக்க வேண்டும்.

அப்படியில்லாமல், நீட் தேர்வையே ரத்துச் செய்யுமாறு கோரிக்கை வைப் பதும் அதற்குக் காரணமாக இத்தற் கொலைகளைச் சுட்டிக் காட்டுவதும் கல்வித் துறையில் ஓட்டு வங்கி அரசியல் கலப்பதற்கு இது வழிவகுத்துவிடும் ஆபத்து உள்ளது.

வாசகர்களாகிய நீங்கள் இதுபற்றி என்ன எண்ணுகிறீர்களோ, அதை எழுதுங்கள் அக்டோபர் 15–க்குள்.

– பி.சி.



கட்டுரை

டாக்டர் அம்பேத்கரும் செக்யூலரிசமும்

டாக்டர் அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட தலித் மக்களின் உரிமைக்குக் குரல் கொடுத்தவர். தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த அவர், பிரகாசமான ஞானத்தோடு விளங்கியவர். மாபெரும் மேதை, சமரசமற்று வாழ்ந்தவர்.

தீண்டாமையுள்ள இந்து மதத்தைத் தீண்டத்தகாத மதமாக அவர் கருதினார். அப்படியிருந்தும் அவர் கிறிஸ்தவராகவோ, இஸ்லாமியராகவோ மாறவில்லை என்பது சிந்திக்கத்தக்கது.

இந்திய அரசியல் சட்டத் தயாரிப்பில் அவர் பெரும்பங்கு ஆற்றியது உண்மை. ஆனால், அவரையும் மீறிய சுயநலச் சக்திகள் அரசியல் சட்டத்தை உருவாக்கியதில் பிரவேசித்துவிட்டார்கள். இதனை அவருடைய உரைகள் சுட்டிக் காட்டுகின்றன. அதற்கான கட்டுரைதான் இது.

இடதுசாரி ஆங்கிலப் பத்திரிகையான ‘Amity’ டிசம்பர் 2019 இதழில் சபியாசாச்சி பட்டாச்சார்யா எழுதிய இக்கட்டுரை வெளிவந்துள்ளது.

– இ.ஆர்.

‘அரசியல் சாசனச் சட்ட விவாதங்கள்’ (Constituent Assembly Debate) என்ற நூலில், ஏழாவது அத்தியாயத்தில் 1948 நவம்பர் 15–ஆம் தேதி இது சம்பந்தமாக நடந்த விவாதங்கள் பதிவு பெற்றுள்ளன. அந்தக் கூட்டத்தில்தான் பேராசிரியர் கே.டி. ஷா, அரசியல் சாசனத்தில் பிரிவு 1 ஷரத் 1–இல், செக்யூலர், ஃபெடரல், சோஷலிஸ்ட் ஆகிய மூன்று வார்த்தைகளையும் அரசியல் சாசனத்தில் இணைக்க வேண்டும் என்று ஒரு திருத்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்தார்.

கே.டி. ஷா அவர்கள் லண்டன் பொருளாதாரப் பள்ளியில் படித்தவர். மும்பை பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றியவர். அரசியல் சாசனச் சட்டசபையில் தீவிர உறுப்பினராக இருந்தவர்.

இவற்றையெல்லாம்விட, 1952–இல் நடந்த முதல் பொதுத் தேர்தலில் டாக்டர் ராஜேந்திரபிரசாத் அவர்கள் இந்தியாவின் ஜனாதிபதியாகப் போட்டியிட்டபோது அவரை எதிர்த்து நின்றவர். பேரா. கே.டி. ஷா பெற்ற வாக்குகளைவிட ஐந்து மடங்கு அதிகமான வாக்குகள் பெற்று ராஜேந்திர பிரசாத் வெற்றி பெற்றார்.

செக்யூலர் என்பதைப்பற்றி பேரா. கே.டி. ஷா பேசுகையில், “சுதந்திரப் போராட்டக் காலத்தில் மேடை தோறும் நமது இந்திய அரசாங்கம் சமயச் சார்பற்ற அரசாங்கம் என்றுதான் நாம் பேசிவந்தோம். அது உண்மையானால், செக்யூலர் என்ற வார்த்தையை அரசியல் சாசனத்தில் சேர்ப்பதற்கு ஏன் நாம் தயங்க வேண்டும்? அப்படிச் சேர்த்தால்தான் அரசியல் சாசனத்தைப் பற்றிய அச்சமோ, தவறான புரிதல்களோ தடுக்கப்படும்” என்று வாதித்தார்.

"நாம் பிறநாட்டு அரசியல் சாசனங்களைப் போல இந்திய அரசியல் சாசனத்தையும் தயாரித் திருக்கிறோம். அந்த நாட்டு அரசியல் சாசனங்களில் செக்யூலர் என்ற வார்த்தை இல்லை. அத னால் நாமும் அதனை இணைக் கக்கூடாது என்பது அவசிய மில்லை. பிற நாட்டு அரசியல் சாசனங்கள் அந்த நாட்டு மக் களுக்குப் பொருந்தும்படியாகத் தயாரிக் கப்பட்டுள்ளது. நம்முடைய அனுபவங் கள் தனியானவை, கசப்பானவை. சென்ற 1947–இல் நடந்த மதக்கலவரங்களில் நாம் அதை அனுபவித்தோம். அதற்கு முன் பும் அந்த அனுபவங்கள் நமக்கு உண்டு" என்றும் அவர் எடுத்துரைத்தார்.



"மதங்களின் பெயரால், சாதிகளின் பெயரால், இனங்களின் பெயரால் நிகழ்ந்த அசம்பாவிதங்கள் தவிர்க் கப்பட வேண்டுமானால், செக்யூலரிசம் என்பதை, அரசியல் சாசனத்தில் கட் டாயம் சேர்க்க வேண்டும்" என்று வலி யுறுத்திக் கூறினார்.

இதற்குப் பதிலளித்து அரசியல் சாசனக் குழுவின் தலைவர் டாக்டர் அம்பேத்கர் பேசுகையில், "அரசியல் சாசனத்தைச் சமர்ப்பித்தபோது, அதனு டைய திறப்புரையில் இந்தச் சாசனம் ஒரு மெக்கானிசம் மட்டுமே எனக் குறிப் பிட்டேன். அதனுடைய அர்த்தம், அரசு என்பது பல்வேறு இலாகாக்களை ஒழுங்கு படுத்துகிற ஓர் எந்திரம்.

இந்த எந்திரம் ஒரு குறிப்பிட்ட கட்சி யையோ, அல்லது பல கட்சிகளையோ அதிகாரத்தில் அமர்த்துவதற்கானது அல்ல. அரசாங்கத்தின் கொள்கை, சமு தாயத்தை அது எப்படி நிர்வகிக்கிறது என்பதைக் காட்டுவதாக இருக்க வேண்டும்.

சமூக, பொருளாதார விஷயங்களை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அதனால்தான் இவை அரசியல் சாச னத்தில் வரையறுக்கப்படவில்லை.

அப்படி அவை வரையறுக்கப்படு மானால், நமது ஜனநாயகத்தை அவை ஒட்டுமொத்தமாக அழித்துவிடும்" என்றார்.

தொடர்ந்து பேசுகையில், "பேரா. கே.டி. ஷா பிரேரேபித்த திருத்தத் தீர் மானம் அவசியமில்லாதது, கூடு தலானது. பேராசிரியர் அரசியல் சாசனத்தில் கண்டு கொள்ளாமல் விட்ட இரண்டு பிரிவுகள் உண்டு. ஒரு பிரிவு அடிப்படை உரிமைகள் பற்றிய பிரிவு. இரண்டாவது பிரிவு, வழிகாட்டு நெறிமுறைகள் பற்றிய பிரிவு.

இந்த இரண்டு பிரிவுகள் இடம் பெற்றிருக்கும்போது பேராசிரிய ரின் செக்யூலரிசம் தீர்மானம் அவசிய மற்றது" (SuperFluous) என்றார்.

அரசியல் சாசன சபையில் செக்யூ லரிசம் பற்றி மூன்று விதமான அணுகு முறைகள் தோன்றின.


மூன்று அணுகுமுறைகளில் முதலா வது, அரசியல் சாசன உறுப்பினர்களில் ஒரு பிரிவினர் நமது இந்தியக் குடியரசு ஒரு சமயச் சார்பற்ற அரசாக (Secular State) இருக்க வேண்டுமென்று விரும் பினர். அவர்களுக்கு நமது அரசியல் சாசனத்தில் இடம்பெற்ற அடிப்படை உரிமைகள் பகுதி போதுமானதாக இல்லை. அதனால் அவர்கள் மிகத் தெளிவாக நமது அரசியல் சாசனத்தில் அரசு என்பது (செக்யூலர்) சமயச்சார் பற்றதாகத்தான் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இரண்டாவது பிரிவினர் மதத்தின் பாத்திரம் என்பது பொது வாழ்க்கை யில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தனர். அதனால் அவர்கள் நேரடியாக செக்யூலரிசத்தின் தேவையை எதிர்க்காவிட்டாலும், மறை முகமாக மதத்தை, இந்திய அரசுக்கு உரிய பொருத்தமானதுதான் என்ற கருத் தையே கொண்டிருந்தார்கள். அதனால் அவர்கள் இந்தியாவை மத தேசமாகவே (Religious country) இருக்க வேண்டு மென்று விரும்பினர்.

மூன்றாவது பிரிவினர் இந்த இரண் டிற்கும் மத்தியில் நடுநிலை வகித்தார் கள். மத நாடாகவும் இந்தியா இருக்கக் கூடாது. அதேசமயம் மதச்சார்பற்ற நாடாகவும் இந்தியா போய்விடக் கூடாது என்றும் விரும்பினர். அதனால் செக்யூலர் என்பது அவசியமற்றது என்றே கருதினர்.

நமது அரசியல் சாசனத்தில் முன் னுரைப் (Preamble) பகுதியில் அடிப்

படை உரிமைகள் என்பவை இடம் பெற்றுள்ளதைச் சுட்டிக் காட்டி, அதன்படி நமக்கு எண்ணுவதற்கு, எழுதுவதற்கு, நாம் விரும்பிய மதக் கோட்பாட்டைப் பின்பற்றுவதற்கு முழுச் சுதந்திரம் உண்டு. நமது கல்வி நிலையங்கள் சமயம் சார்ந்த தாக இருக்கக்கூடாது என்ற கட்டுப்பாடும் அதில் இடம்பெற் றுள்ளதையும் சுட்டிக்காட்டி னார்கள்.


டாக்டர் ராஜேந்திர பிரசாத்

அதேசமயம் எந்த மதத்தையும் எவரும் பிரச்சாரம் செய்யலாம் என்ற சுதந்திரமும் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டது. இந்த இடத்தில் வர லாற்று நிகழ்வை நினைவுகூர வேண்டி யுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவத் தேவாலயங்களுக்கும் அரசுகளுக்கும் மோதல் நீடித்து வந்தது. அப்போது தான் சர்ச்சுகள் அரசுக் கொள்கைகளில் தலையிடுவது பொருத்தமற்றது என்று ஒரு கோட்பாடு நிறுவப்பட்டது. அந்தக் கோட்பாட்டுக்குப் பெயர்தான் செக்யூ லரிசம் என்பது.

அரசியல் சாசனச் சபை உறுப்பினர் கள் சிலர் செக்யூலரிசம் என்பதற்குப் பதிலாக, Composite Culture என்பதைக் கையாண்டார்கள். அதற்கான காரணம், மதத்தை முழுமையாக நிராகரிக்காமல் ஓரளவுக்கு ஒப்புக் கொள்வதற்குத்தான்.

டாக்டர் அம்பேத்கரும், ஜவஹர் லால் நேருவும் மூன்றாவது பிரிவைத் தான் ஆதரித்தார்கள். அவர்கள் செக்யூ லரிசத்தையும் ஆதரிக்கவில்லை, மத தேசம் என்பதையும் ஆதரிக்கவில்லை. ஆகையால் இந்த இரண்டிற்கும் பொது வான ஒரு கருத்தமைப்பை அரசியல் சாசனச் சட்டசபை பிரதிபலித்தது.

உலக நாடுகளின் அரசியல் சாசனங் கள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தவர் டாக்டர் அம்பேத்கர். அரசியல் சாச னம்தான் ஒரு தேசத்தின் முன்னேற்றத் தில் முக்கியப் பாத்திரம் வகிக்கின்றது என்பது அவருடைய வலுவான கருத்து. அவ்வாறு சிந்தித்தபோது மதத்தைப் பற்றி ஆழமாகச் சிந்தித்துள்ளார்.

அனைத்து விதமான தீமைகளுக்கும் மதம்தான் அடிப்படையாக உள்ளது என்று கூறிய அவர், அதனை விளக்கும் வகையில், "ஓர் இந்து ஆணோ, பெண்ணோ அவர் எது செய்தாலும் அதில் மதம் இழை யோடியிருக்கும். ஓர் இந்து சாப் பிடுவதற்கும், நீர் அருந்துவதற்கும், குளிப்பதற்கும், ஆடை அணி வதற்கும், திருமணம் செய்து கொள்வதற்கும், மரணமடைந்தால் தகனம் செய்யப்படுவதற்கும் மதச் சடங்குகளைப் பின்பற்றுகிறான். பாவம் செய்வதற்குக்கூட மதமே அவனுக்கு உதவி செய்கிறது" என்று கண்டறிகிறார் டாக்டர் அம்பேத்கர்.

பிரிட்டிஷ் ஆட்சியில் உருவாக்கப் பட்ட சட்டங்களால் இந்தக் கொடூர மதச்சடங்குகள் ஓரளவுக்குக் கட்டுப் படுத்தப்பட்டன. அப்படியிருந்தும் தலித்துகள் என்ற தாழ்த்தப்பட்டவர் களும் இருக்கத்தான் செய்தனர். தீண் டாமையும் தொடரத்தான் செய்தது.

டாக்டர் அம்பேத்கர் ஹிந்து சமு தாயத்தில் சாதி அமைப்பை ஹிந்து மதம் ஒழிக்க முன்வரவில்லை என் கிறார். அதனால் சுதந்திர இந்தியாவின் அரசியல் சாசனத்தில் அதனை ஒழிப் பதற்கான வழிமுறைகளைக் கடைப் பிடிக்க முயற்சி செய்தார்.

ஆனால், அவருடைய காலத்தில் செல்வாக்கு மிக்க கட்சியாக இருந்த காங்கிரசில் பிராமணர் ஆதிக்கம் அதிக மாக இருந்ததற்காகக் கவலைப்பட்டார். காரணம், காங்கிரஸ் கட்சி அன்றைக்கு ஆட்சி அமைக்கும் சக்தியுள்ள கட்சி யாக இருந்தது. அதனால் பிராம ணர்கள் ஆதிக்கமும் தொடர்ந்தது.

எந்த அரசாங்கத்துறையைப் பார்த் தாலும் அதில் பிராமணர்கள்தான் அதிக எண்ணிக்கையில் அதிகாரிகளாக இருந்தார்கள். அதனால் தீண்டத்தகாத வர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள்.

இந்தப் பின்புலத்தில்தான் அம்பேத்கர் மனதில் சோசலிசச் சார்பு (Socialism Model) இடம்பெற்றது. அதனை அவர் அரசியல் சாசனத்தில் பிரயோகிக்க விரும்பினார். அந்தக் கருத் தோட்டமில்லாமல் தீண்டத்தகாதவர் களின் வாழ்க்கையை மாற்ற முடியாது என்பது அவருடைய நம்பிக்கை.

ஐரோப்பிய சார்புப் பொருளாதாரத்தில் மக்களுக்குத்

தேவையானவற்றை அரசு செய்ய வேண்டிய அவசியமில்லை. காரணம், பெரும்பான்மை மக்கள் வசதியானவர்கள். சிறுபான்மையினர்தான் ஏழைகள். இதுபோன்ற பொருளாதாரம் இந்தியாவிற்குப் பொருத்தமானதல்ல. குறிப்பாக, தலித்துகளை முன்னேற்றுவதற்கு அது சரிப்பட்டு வராது. இந்த ரகப் பொருளாதாரத்தை முதலாளித்துவப் பொருளாதாரம் எனலாம்.

இதற்கு எதிரானதாக சோசலிசப் பொருளாதாரமே தேவை என்றார் டாக்டர் அம்பேத்கர். இதற்கு ஆதரவான ஒரு தீர்மானத்தை அரசியல் சாசன சபையில் பண்டிட் ஜவஹர்லால் நேரு பிரேரேபித்தார்.

இதன் மூலம், தொழிற்சாலைகளையும் நில உடைமையையும் தேசியமயப் படுத்தலாம். இதைத்தான் சமூக நீதி என்றவாறு அம்பேத்கர் 17.12.1946–இல் சிந்தித்தார்.

15.3.1947–இல் அரசியல் சாசன சபைக்கு அவர் ஒரு மனுவைத் தந்தார். அதில் சோசலிசக் குடியரசை அரசியல் சாசனச் சட்டத்தின் மூலம் அமல்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். இந்த அளவுக்கு டாக்டர் அம்பேத்கர் முற்போக்குச் சிந்தனை உள்ளவராகவும், ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஆதரவானவராகவும் விளங்கினார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

டாக்டர் அம்பேத்கரின் பணிகளைக் காங்கிரஸ் பயன்படுத்தத் தவறினால் ஒரு வேளை ஒரு புரட்சியை அவர் தூண்டிவிட்டாலும் ஆச்சரியமில்லை என்று காங்கிரஸ் சந்தேகப்பட்டது. இதன் காரணமாக, காங்கிரஸ் கட்சியும், காந்திஜியும் அரசியல் சாசன சபையிலிருந்து அம்பேத்கரை ஒதுக்கி வைத்தார்கள். ஆனால், வங்காள மாநிலத்திலிருந்து டாக்டர் அம்பேத்கர் அவருடைய அபிமானிகளால் அரசியல் சாசன சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பாகிஸ்தான் – இந்தியா பிரிவினை காரணமாக, இவர் தேர்ந்தெடுக்கப்பட்ட வங்காளத் தொகுதி இந்தியாவில் இல்லாமல் போய்விட்டது. இதனை உணர்ந்த டாக்டர் ராஜேந்திர பிரசாத், பம்பாய் மாநிலத்தின் ஒரு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கச் சொல்லி அன்றைய பிரதமர் பி.ஜி. கெர் என்பவருக்குக் கடிதம் எழுதினார்.

இதற்குப் பிறகுதான் 15.8.1947–ஆம் தேதி அமைக்கப்பட்ட சுதந்திர இந்தியாவின் முதல் மத்திய மந்திரிசபையில் பிரதமர் நேரு, டாக்டர் அம்பேத்கரை மத்திய சட்ட அமைச்சராகவும், அரசியல் சாசனத் தயாரிப்புக் குழுவின் தலைவராகவும் நியமித்தார். அப்போது அரசியல் சாசன சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 296.

அரசியல் சாசனம் பலவிதமான வாதங்களுக்கும், பிரதிவாதங்களுக்கும் மத்தியில் உருவாக்கப்பட்டது. அதனால் அந்த அரசியல் சாசனத்தைத் தயாரித்தவர் டாக்டர் அம்பேத்கர் மட்டும்தான் என்று சொல்வது அவ்வளவு சரியானதல்ல. அப்படி அவர் தயாரித்திருக்கும் பட்சத்தில் நிச்சயமாக சமதர்மத்திற்கான (சோசலிசம்) சட்டங்களை அரசியல் சாசனத்தில் டாக்டர் அம்பேத்கர் சேர்த்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

இந்திய அரசியல் சாசனத்தை அவர் எழுதவில்லை என்பதை எடுத்துக் காட்ட, டாக்டர் ராஜாராம் என்பவர், சொத்துரிமையை அடிப்படை உரிமையாக அரசியல் சாசனத்தில் சேர்க்கப் பட்டுள்ளதைக் காட்டினார். அது மட்டுமல்ல, வர்ணாசிரம முறையைப் பாதுகாக்கும் வகையில் அது பாதுகாக்கப் பட்டிருக்கிறது. அதற்காகவே சொத்துரிமையை அடிப்படை உரிமையாக சேர்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

தேவைப்படுகிற தனியார் சொத்துடைமைகளை அரசு கையகப்படுத்த வேண்டுமானால், அதற்கு அரசு நஷ்டஈடு தந்துதான் செய்ய வேண்டும் என்று அரசியல் சட்டம் கூறுகிறது.

இவ்வாறு அடிப்படைச் சொத்துரிமைச் சட்டத்தை யாரும் மாற்ற முடியாது. அதில் கை வைக்கவும் முடியாது என்பதாக அரசியல் சாசனம் உருவாகியது.

இதற்கெல்லாம் டாக்டர் அம்பேத்கர் சம்மதித்திருப்பாரா? நிச்சயமாக மாட்டார். காரணம்,

சோசலிசத்தைப் பின்பற்றிய ஒருவர் தனியார் சொத்துரிமைக்கு எப்படி ஆதரவாக இருக்க முடியும்? சொத்துரிமையை அடிப்படை உரிமையாகச் செய்ய அம்பேத்கர் நிச்சயமாக ஆதரவு தந்திருக்க மாட்டார்.

ஆனாலும் சொத்துரிமை சட்டமாகி இருக்கிறது என்றால், அதற்கான காரணம் அன்றைய அரசியல் சாசன சபையில் உறுப்பினர்களாக இருந்தவர்களில் பெரும்பான்மையினர் ஏராளமான சொத்துக்களுக்கு உரியவர்களாக இருந்தார்கள். தங்களுடைய சொத்துக்களை இழக்கத் தாங்களே சட்டம் செய்ய அவர்கள் எப்படிச் சம்மதிப்பார்கள்? அதனால் அவர்கள் சோசலிசத்தை ஏற்கவில்லை.

நஷ்ட ஈடு தந்து தேசிய மயம் செய்வது என்பது இவர்களுக்கு லாபகரமானதாக இருந்தது.

அதேபோல வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்பதும் இவர்களுக்குப் பிடிக்காத ஒன்று. அன்றைக்குப் படித்தவர்கள்தான் வாக்காளர்களாக இருந்தனர். வீடு, நிலம் முதலிய சொத்துள்ளவர்கள் வாக்காளர்களாக இருந்தனர். இவை இல்லாதவர்கள் வாக்களிக்க முடியாது.

அப்படியானால், அன்றைய வாக்காளர்களில் ராஜாக்கள், பிரபுக்கள், நிலச் சுவான்தார்கள் ஆகியோர்தான் இருந்தனர். அவர்கள் எப்படிச் சோசலிசத்தை ஆதரிப்பார்கள்?


அரசியல் சாசன சபையில் தனியார் சொத்துக்கு நஷ்ட ஈடு கொடுப்பது பற்றி விவாதம் வந்தபோது, டாக்டர் அம்பேத்கர்தான் நஷ்ட ஈடு கொடுக்கக்கூடாது என்று பேசியவர். முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாதவர் டாக்டர் அம்பேத்கர்.

25.11.1949 அன்று டாக்டர் அம்பேத்கர் வரலாற்றுச் சிறப்புமிக்க உரை நிகழ்த்தியபோது "அரசியல் சாசனத்தை உருவாக்கிய பெருமை இருவரைச் சாரும். ஒருவர் திரு. பி.என். ராவ். இன்னொருவர் எஸ்.என். முகர்ஜி." இவர்கள் இருவரின் பெயரை அவர் குறிப்பிட்டதால், அரசியல் சாசனத்தை டாக்டர் அம்பேத்கர் உருவாக்கவில்லை என்பது தெளிவாகி விட்டது.

26.1.1950 அன்று அரசியல் சாசன சபையில் அவர் ஆற்றிய உரையில் "இன்று முதல் இந்தியர்களாகிய நாம் முரண்பாடுள்ள வாழ்க்கைக்குள் பிரவேசிக்கின்றோம். தேர்தலில் நம் அனைவர்க்கும் சமமான வாக்குரிமை உண்டு. ஆனால் சமூக, பொருளாதாரத் தளத்தில் நாம் சமமானவர்கள் அல்ல.

ஒரு வாக்காளனுக்கு ஒரு வாக்கு என்பது ஒரே மதிப்புடையதாக எல்லோருக்கும் உள்ளது. ஆனால், நமது சமூகத்தில் இதேபோல ஒருவருக்கு உள்ள மதிப்பு மற்றொருவருக்கு இல்லை என்பதுதான் உண்மை.

எவ்வளவு காலத்திற்கு இந்தச் சமத்துவமின்மையை மக்களிடம் நாம் தொடரப் போகிறோம்? இது நீண்ட காலத்திற்குத் தொடருமானால், நமது


நேருஜியும்
காந்திஜியும்

அரசியல் ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்பட்டுவிடும். எவ்வளவு சீக்கிரமாக இந்த முரண்பாடுகளை நாம் களைகிறோமோ, அவ்வளவு சீக்கிரத்தில் நமக்குப் பலன் கிடைக்கும். அவ்வாறு செய்யாமல் தவறிவிடுவோமானால், இந்தச் சமத்துவமின்மையே நமது அரசியல் ஜனநாயகத்தை அழித்து ஒழித்து விடும் என்பதில் சந்தேகமில்லை" என்றார்.

மத்திய சட்ட அமைச்சராக இருந்த டாக்டர் அம்பேத்கர் தமது பதவியைத் துறந்ததுகூட 1951–இல் காங்கிரஸ் அரசு இந்துப் பெண்களுக்குச் சொத்துரிமை தரத் தயாராக இல்லை என்பதனால் தான் என்பது நினைவுகூரத்தக்கது. 2 ஆண்டுகள் மட்டுமே அவர் பதவி வகித்தார். கொள்கைக்காகவே வாழ்ந்தவர் அவர்.

– ந.நி.

மருத்துவ மாமணி தாரா நடராசன் மறைந்தார்!

டாக்டர் ஔவை நடராசன் அவர்களை 14.8.2020 வரை யாரேனும் தவறாக அணுகினால், அவர் கவலையே பட மாட்டார்! தம் அருமைத் துணைவியாரும், குழந்தைகள் நல மருத்துவருமான டாக்டர் திருமதி. தாரா நடராசன் அவர்களை அன்போடு அழைத்துப் பிணியால் அவதிப்படும் ஆர்வலர்களுக்கு உரிய சிகிச்சையை அளித்து உதவுமாறு உடனே பரிந்துரை செய்வார்.



தமிழறிஞர்களின் பிள்ளைகள் இந்நாளில் மருத்துவத் துறையில் டாக்டர்களாகி உள்ளார்களே தவிர, தமிழறிஞர் ஒருவரின் துணைவியார் டாக்டர் என்ற பெருமையைப் பெற்ற முதல் பெண்மணி, டாக்டர் தாரா நடராசன் அவர்களாவார்.

"மருத்துவ மாமணி" டாக்டர் தாரா நடராசன் அவர்களின் மறைவு, மருத்துவ உலகிற்கும், தமிழிலக்கிய உலகிற்கும் மாபெரும் இழப்பாகும்.

பொள்ளாச்சி வள்ளல் அருட்செல்வரால் உருவாக்கப்பட்ட இராமலிங்கர் பணிமன்றத்தின் செயலாளராக இருந்து பல இளைஞர்களை ஔவையார் வளர்த்தார் எனில், அவர்களைத் தம் வளமனையில் உணவும், உறையுளும் வழங்கி வளர்த்தவர் தாரா அம்மையாராவார்.

இளைஞர்களை இனங்கண்டு வாழ்த்துவதிலும், வளர்ப்பதிலும் ஔவை இணையருக்கு ஈடு இணையே கிடையாது. சில மாதங்களுக்கு முன் என் "திருநீற்றின் பெருமை" என்ற நூலை ஔவையாரிடம் நான் வழங்கிய போது, ஔவையாரை முந்திக்கொண்டு ஒரே நாளில் நூலைப் படித்துவிட்டு, மறுநாளே அலைபேசியில் அழைத்து வாழ்த்திய அந்தப் பெருமாட்டியாரின் பெருந்தன்மையை நான் என்னவென்று சொல்வது?

நேர்மையே வடிவமாகத் திகழ்ந்த அம்மையார், மருத்துவப் பேராசிரியராக மட்டுமின்றி, நன்கு வீணை மீட்டிச் சத்தான இசை தரும் வித்தகர் ஆவார். ஔவையார் என்ற ஆலமரம் பலவகையான புகழ்க் கிளைகளைப் பரப்ப ஆணிவேராக விளங்கியவர் அம்மையாரவர்கள்.


தாரா அம்மையாரின் மூன்று செல்வங்கள் கண்ணன், அருள், பரதன் ஆகியோர் பல ஆண்டுகளாகப் பெற்றோரின் மருத்துவ நலத்தைக் கண்ணும் கருத்துமாகப் பேணி வருவதை அருகிலிருந்து பார்த்து நான் நெகிழ்ந்துள்ளேன் என்று பல முறை ஔவையாரின் தனிச் செயலாளர் பொன்னேரி பிரதாப் கூறுவதைக் கேட்டு மலைத்துள்ளேன்.

மிகப்பெரும் மூப்பியல் மருத்துவர் அண்ணன் கண்ணன் ஆசுத்திரேலியாவிலிருந்தும், மருத்துவர் அண்ணன் பரதன் தென்னாப்பிரிக்காவிலிருந்தும் விடியற்காலை முதல் இரவு நெடுகவும் மருத்துவக் கண்காணிப்பு முறைமை நேர்த்தியாக அமைத்து, தொகுத்துக் கண்காணித்ததையும், அண்ணன் அருள் தலைமைச் செயலகம், அண்ணாநகர், துரைப்பாக்கம் என்று சுழன்ற வண்ணமாக இருந்ததையும் எண்ணி நான் பெருமிதமடைகிறேன்.

மேன்மைமிகு குணங்களால் குன்றின் மேலிட்ட விளக்காய் ஒளிர்ந்து நிற்கும் அம்மையார், மண் விடுத்து விண் புகுந்தது ஏற்றுக்கொள்ள முடியாது தான். வாழ்ந்த காலத்தைத் தனதாக்கிக் கொண்ட அம்மையார் என்றும் நம் நெஞ்சத்தில் வாழ்வார் புகழுடம்புடன்.

– சிவ. சதீஸ்குமார்

சில கேள்விகளோடு...



கவிஞர் சென்னிமலை தண்டபாணி

அடிமையின்
மூச்சுக்காற்றில்
அழுக்குப்படும் ஆகாயம்
எந்த
விடியலில் வெளிச்சம் பெறும்?

கால் பிடித்து
வளைந்து கிடப்பவனின்
முதுகெலும்பை
எந்தக் கை
எப்போது நிமிர்த்தும்?

தலையாட்டி பொம்மையை
எந்தச் சிம்மாசனத்தில்
ஏற்றி வைத்தால் என்ன?
உருட்டி விளையாடுபவனை
உதைத்து
எழவா போகிறது?

புற்றுகளை
நெஞ்சில் வளர்த்தவனுக்குள்
அன்பா ஊறும்?
அரவங்களல்லவா ஊறும்!



பொய்களை
விற்றுக் கொண்டே
ஊர் சுற்றி வருகிறவனை
ஒரு நாள்
ஊரே சேர்ந்து
உதைத்து விரட்டுமா?
ஊர்கூடித் தேரிழுக்குமா?

நரிகளை
நாட்டாமை ஆக்கினால்
ஊளையைத்தானே
உன்னத மொழி
என்று
ஊளையிடும்.



அறிக்கைக்கு மேல்
அறிக்கை
ஆணைக்கு மேல்
ஆணை
எரியும் வயிற்றோடு
மக்கள்.



நீதிதேவன்
கேள்விகளைக்
கேட்பதோடு சரி...
தீர்ப்பை...
சாத்தான்
அவசர அவசரமாக
எழுதிவிடுகிறான்.

தூண்டில் போட்டுப்
பிடித்தும்
அகப்பட்டவை என்னவோ
அடிபட்டுச் செத்த
பாம்புகள்.

சிறுகதை




இராம. இளங்கோவன்

அடையாளங்கள்

கனத்த நெஞ்சுடன் சுமைகளைச் சுமந்து கொண்டு சொந்த ஊருக்குப் போக வேண்டிய சந்தர்ப்பம் வருமென்று கனவில்கூட நான் எண்ணியதில்லை. இதற்கு முன்பு இது போன்ற துயரத்துடன் என் அம்மாவும், அப்பாவும் இறந்தபோது, ஊருக்கு இதே கனத்த மனநிலையில் சென்றிருக்கிறேன்.

இதனால் ஊருக்கு மகிழ்ச்சியாகச் சென்று வந்ததில்லை என்றும் சொல்லிவிட முடியாது. பொங்கல், தீபாவளி, சித்திரை, கார்த்திகை முதலிய பண்டிகை, விழாக்களுக்கு, ஊரைவிட்டு பெங்களூர் வந்த ஆரம்பக் காலங்களில் சென்று மகிழ்ச்சியுடன் இருந்திருக்கிறேன்.



பட்டப்படிப்பை முடித்து, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்து முடித்துவிட்டு வேலை தேடி பெங்களூருக்கு இப்பொழுதுதான் வந்த மாதிரி இருக்கிறது. 45 வருடங்கள் எப்படி ஓடின என்றே தெரியவில்லை. இந்த 45 வருடங்களில் அப்பா, அம்மா இருக்கும்வரை ஒரு 15 வருடங்கள் ஊருக்குப் போய் வந்து கொண்டிருந்தேன். ஏறக்குறைய 30 வருடங்களாய்ச் சொந்த ஊருக்குப் போகாத எனக்கு, இப்பொழுது போக வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. வேறு வழி இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன்.

உடற்பயிற்சி ஆசிரியருக்கான படிப்பை முடித்து, பெங்களூருக்கு வந்த போது எல்லாப் பள்ளி, கல்லூரிகளிலும் தமிழ் மொழி பாடமாக இருந்தது. தமிழ்நாட்டில் படித்து முடித்தவர்களுக்குப் பெங்களூரில் மட்டுமல்ல, கர்நாடகாவிலுள்ள அனைத்து அரசாங்க, மாநகராட்சி, தனியார் பள்ளி, கல்லூரிகளும் ஆசிரியர் வேலைகள் தரும் காமதேனுவாக விளங்கின.

இதனால் எனக்கு ஆசிரியர் பணி எளிதாகக் கிடைத்துவிடுமென நம்பி பெங்களூர் வந்தேன். ஆரம்பத்தில் தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிகப் பணியாகச் செய்து வந்த எனக்கு, மாநகராட்சியின் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நிரந்தரமாக வேலை கிடைத்தது. பெண்களை ஆண்களுக்கு நிகராக உருவாக்கவே கிடைத்த வாய்ப்பு என்று உணர்ந்தேன்.

> "மேடம்... யோசித்து யோசித்துத்தான் சொல்லித் தரேன். ஒவ்வொரு விளையாட்டும் மாணவிகளுக்கு அவசியமான, அர்த்தமுள்ள பயனுள்ளவை. இதனால் மாணவிகளுக்கு மட்டுமில்லை, இந்தப் பள்ளிக்கும், உங்களுக்கும் நல்ல பெயர் கிடைக்கும். நாடே பாராட்டும்."

பெண்களும் ஆண்களுக்கு இளைத்தவர்கள் இல்லை; ஆண்களைவிட வலிமையான திறமைசாலிகள், சாதனையாளர்கள், யானை பலம் கொண்டவர்கள் என்பதை அடையாளம் காட்டவும், ஆண்களின் அத்துமீறும் செயல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் மாணவிகளை உருவாக்க எண்ணினேன்.

முதலில் தானொரு சாதாரணப் பெண் என்ற மாயையை மாணவியரிடமிருந்து உடைத்தேன். தற்காப்புக் கலையைக் கற்றுக் கொடுத்தேன். மாணவிகளில் உயரம், உடற்கட்டு, விருப்பம், தைரியம், ஆர்வம் முதலிய அடிப்படையில் தனித்தனிக் குழுக்களாகப் பிரித்து, அதற்கேற்ற பயிற்சிகளைக் கொடுத்தேன்.

மூளையும், உடலும்

எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கவும், நினை வாற்றல் பெருகவும், மனதினை மகிழ்ச்சியாய் வைக்கவும், குறி தவறாமல் இலக்கை எட்டவும், தமிழர் பாரம்பரிய விளையாட்டுகளான பெண் களுக்கே உரிய பல்லாங்குழி, நொண்டி, தாயம், விண்டிகோல், அஞ்சாங்கல், பூப்பந்து, கண்ணா மூச்சி, குச்சிக் குச்சித் தாம்பூலம், ஆடுபுலி ஆட்டம் முதலிய விளையாட்டுகளோடு கில்லி, கோலி, பம்பரம், அட்டைக்கத்தி சண்டை விளை யாட்டுகளையும் ஆட வைத்தேன்.

மாணவிகளிடம் நல்ல வரவேற்பும் ஆர்வமும் ஏற்பட்டது. ஆனால், பள்ளியில் வேலை செய்யும் மற்ற ஆசிரியர்கள் தலைமை ஆசிரியரிடம் என் மீது புகார் செய்ததால், என்னை அழைத்து விசாரித்தார்.

''என்ன சார்... உங்கமேல நிறைய கம்ப் ளைண்ட் வருதே! நீங்க ட்ரில் மாஸ்டரா? இல்ல ராணுவப் பயிற்சியாளரா? இல்ல... தீவிரவாதத் தலைவரா?''

''நீங்க என்ன கேட்கிறீங்கன்னு எனக்குப் புரியல...''

''அப்படியா? புரியற மாதிரி கேட்கிறேன். நீங்க மாணவிகளுக்கு உயரம் தாண்டுதல், கபடி, வாலிபால், பேஸ்கட்பால், ரன்னிங்னு சொல்லிக் கொடுக்காம வேறே எதெதையோ சொல்லித் தறீங்களாமே... தினம் ஒரு வகுப்புதான் ட்ரில் கிளாஸ்; இதில ஏன் சார் அரசியல் செய்றீங்க?''

''யாரோ உங்ககிட்டத் தப்பாச் சொல்லி இருக்காங்க; பெண்களுக்கு இந்தக் காலத்தில் பாதுகாப்பில்லை. அதனால் தன்னைத்தானே பாது காத்துக்கிற தற்காப்புக் கலையைச் சொல்லிக் கொடுத்திருக்கேன். நீங்களும் பெண்தானே! நீங்களே சொல்லுங்க, இது தப்பா?''

''வேறெ புதுசு புதுசா கிராமத்துப் பொண் ணுங்க வெட்டியா நேரத்த வீணடிக்கிற விளை யாட்டெல்லாம் கத்துக் கொடுக்கிறீங்களாமே?''

''வெட்டியா நேரத்த வீணடிக்கிற ஆட்டமில்ல ஹெட்மிஸ்; எல்லா மொழிக்கும் தமிழ் எப்படி வேராக இருக்கோ... அந்த மாதிரி, நகரத்தின் வேர் கிராமந்தான். அந்தக் கிராமத்து விளை யாட்டு ஒவ்வொண்ணும் அறிவுப்பூர்வமானது, உடல் ஆரோக்கியமானது, மனசு கெடாம வைத் திருக்கக்கூடியது. இந்த ஆட்டமெல்லாம் காலங் காலமாக ராஜா காலத்திலிருந்து நடைமுறையில் இருந்த தமிழரின் அடையாளங்கள். மெல்ல மெல்ல மறைந்து போகிறதைத் தடுக்கவும், நகர மக்கள் தெரிந்து கொள்ளவும்தான்!''

''மிஸ்டர் பாண்டியன்! நீங்க மொழிப் பிரச் சனையை உண்டாக்காதீங்க!''

''நீங்க கன்னடத்தை மொழியாகக் கொண்ட தாலயும், நான் தமிழன் என்பதாலயும் மொழிப் பிரச்சனை மாதிரித் தோணுது. ஆனா, கூர்ந்து கவனிச்சா உண்மை புரியும். கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை எல்லாமே தமிழர்க்குச் சொந்தமானதை உலகமே ஏத்துக்கலையா? கன்னட மொழியில் 'அலே கன்னடா' (பழைய கன்னடம்) முழுக்கத் தமிழ்ச்சொற்களைக் கொண் டிருக்கு. அதுபோல, தமிழர் விளையாட்டான கில்லிதான் கிரிக்கெட்டாகவும், பூப்பந்து விளை யாட்டுத்தான் வாலிபாலாகவும் மாறியிருக்கு. கபடி ஒலிம்பிக் வரை போயிருக்கு. தமிழரின் பழைய விளையாட்டுக்கள் ஒவ்வொன்றும் வேறெ பெயரில் ஆடறாங்க...''

''மிஸ்டர் பாண்டியன்! இப்ப நீங்க என்னதான் சொல்ல வறீங்கன்னு எனக்குப் புரியல...''

''மேடம்... யோசித்து யோசித்துத்தான் சொல் லித் தரேன். ஒவ்வொரு விளையாட்டும் மாணவி களுக்கு அவசியமான, அர்த்தமுள்ள பயனுள் ளவை. இதனால் மாணவிகளுக்கு மட்டுமில்லை, இந்தப் பள்ளிக்கும், உங்களுக்கும் நல்ல பெயர் கிடைக்கும். நாடே பாராட்டும்.''

''எப்படி?''

''நான் சொல்லித் தருவது வெறும் விளை யாட்டில்ல. முன்னோர்கள் அறிவுப் பூர்வமான, மருத்துவ சம்பந்தமாகக் கண்டு பிடிச்ச பண்பாட்டு அடையாளங்களுக்கான விளையாட்டுக்கள். இந்த விளையாட்டுகள் மாணவியரின் அறிவுத் திற மையை வளர்க்கும். பரீட்சையில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்களை மாணவிகள் பெறுவர். விளை யாட்டிலும் சாதிப்பாங்க. மாநிலத்திலேயே நம்ம பள்ளி முதல் இடத்தைப் பிடிக்கும். இதனால் உங்களுக்குத்தானே பேரு, புகழ், பெருமை, பாராட்டு எல்லாம் கிடைக்கும்!''

''அப்படியா?'' என்று முக மலர்ச்சியுடன் வியந்து கேட்டார் தலைமை ஆசிரியை.

''ஆம் மேடம்! நான் சொல்றது நடக்க லேன்னா, என் மேல நடவடிக்கை எடுங்க.''

''அப்போ, உங்களுக்கு முழுச் சுதந்திரம் கொடுக் கிறேன். இனிமே யாரைப் பத்தியும், எதைப் பத்தி யும் கவலைப்படாம மாணவிகளைத் தயார் பண் ணுங்க. மத்ததை நான் பாத்துக்கிறேன்'' என்று சொல்லித் தலைமை ஆசிரியை பச்சைக்கொடி காட்டியதால், சொன்னதை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இன்னும் கடுமையாக உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது.

என் உழைப்பும், என் நம்பிக்கையும் வீணாக வில்லை. தேசிய அளவில் விளையாட்டுகளிலும், தேர்விலும் வெற்றி பெற்றுப் பள்ளியும், தலைமை ஆசிரியையும் நல்ல பெயரைப் பெற மாணவிகள் முதல் இடத்தைப் பெற்றனர்.

மாநிலம் முழுவதும் உள்ள மற்ற தனியார், அரசினர் பள்ளிகளிலும் பகுதிநேர வேலையாக



மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டுப் பயிற்சிகள் கொடுக்க அழைப்பு வந்ததால், தமிழரின் அடையாளங்களான விளையாட்டுகள் அனைத்தும் மறைந்து போகாமல் பரப்ப எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. இதனால் மத்திய, மாநில அரசுகளின் நல்லாசிரியர் விருதும், வேறு பல விருதுகளும் எனக்குக் கிடைத்தன.

இந்தச் சாதனைகளுக்கெல்லாம் எந்த ஒரு சிக்கலும், குறுக்கீடும் இல்லாமல் அடக்கமாகச் செயல்பட்டது அமைதி வடிவமான என் மனைவி சீதாலட்சுமிதான். ஓர் ஆண், ஒரு பெண் என்று இரண்டு பிள்ளைகளைப் பெற்று ஆளாக்கி விட்டாள். இருவரும் நல்ல பிள்ளைகளாகப் படித்துப் பட்டம் பெற்றுவிட்டனர். மகன் சரவணன் பட்டதாரி ஆனானே தவிர, தகுதியான வேலை கிடைக்காமல் தேடிக் கொண்டிருக்கிறான். மகள் பாரதி கல்யாணக் கனவைச் சுமந்து கொண்டிருக்கிறாள். மனைவி இதய நோயால் சாவை எதிர்பார்த்துக் கிடக்கிறாள்.

மனைவிக்கு ஏற்கனவே மார்புப் புற்றுநோய், சிறுநீரகம் மாற்றுச் சிகிச்சை, மூலம் அறுவைச் சிகிச்சை, குடல் புண் சிகிச்சை என்று ஒன்றன் பின் ஒன்றாக நோய்கள் வந்ததால், நான் ஒய்வு பெற்றதால் கிடைத்த பணம் எல்லாம் மருத்துவத் திற்கே செலவாயிற்று.

இப்பொழுது இதயக் கோளாறுக்கு மருத் துவம் செய்யவோ, மகளுக்குத் திருமணம் செய் யவோ, மகனுக்கு வேலை வாங்கிக் கொடுக்கவோ பணமில்லை. குடும்ப வண்டியை என்னுடைய ஒய்வூதியத்தில் ஒட்டவே முடியாமல் தடுமாறும் நான், வேறு வழி இல்லாமல் சொந்த ஊரில் உள்ள வீட்டை விற்பதற்காகக் கனத்த மனத்துடன், விற்கும் மனம் இல்லாமல் பணத்துக்காகச் சொந்த ஊரின் தொடர்பை அறுத்துக்கொள்ளப் புறப்பட்டேன்.

என்னுடைய ஊரையே அடையாளம் காண முடியவில்லை. அந்த அளவுக்கு நாகரிக வளர்ச்சி என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டிருந்தது. ஊருக்குள் நுழையும்போது, "வணக்கம், வருக!" என்று அலங்கார வளைவில் உள்ள எழுத்துக்கள் மட்டும் என்னை வரவேற்றன. மனித நடமாட்டமே இல்லாமல் பகல் 12 மணிக்கே ஊர் மயான அமைதியில் உறங்கிக் கொண்டிருந்தது.

எனக்குச் சொந்தமான மூதாதையர் வாழ்ந்த வீட்டை அடைந்தேன். பர்மாத் தேக்கில் கலைநயத் தோடு செட்டிநாட்டு வீடு போல் காட்சியளித்தது. சுவர்களில் மட்டும் ஆங்காங்கே விரிசல்கள் இருந்தன.

வீட்டைத் திறந்து உள்ளே நுழைந்தேன். பாழடைந்த வீடு எப்படி இருக்குமோ, அப்படித்தான் இருந்தது.

நான், பெற்றோர், மூதாதையர் வாழ்ந்த நினைவுச் சின்னத்தை விற்பதா? என்ற கேள்வி யும், வீடு முக்கியமா? மனைவியின் உயிரும், பிள்ளைகளின் வாழ்க்கையும் முக்கியமா? என்ற கேள்விகளும் என்னைத் துளைத்தன. வீட்டை விடக் குடும்பம் முக்கியம் என்று உணர்ந்து, பஞ் சாயத்துத் தலைவர் சுப்பிரமணியைச் சந்தித்தேன்.

நான் சொன்ன எல்லாவற்றையும் கேட்டு விட்டு, "நீங்க வீட்டை விற்க வேண்டாம்; உங்க மகளை என் மருமகளா ஏத்துக்கிறேன். உங்க மகனுக்கு அரசாங்க வேலை வாங்கிக் கொடுக் கிறேன். ஆனா, இதுக்குப் பதிலா எனக்கொரு உதவி செய்யணும்..."

"நானே மத்தவங்க உதவியை எதிர்பார்த்து நிற்கிறேன்; நான் எப்படி உதவ முடியும்?"

"உங்களால் மட்டும்தான் முடியும்!"

"அது என்னாங்க...?"

"நீங்க வீட்டைப் பழுது பார்த்துச் சொந்த வீட்ல இதே ஊர்ல குடும்பத்தோட வாழணும்; பெங்களூரில் செய்த வேலையை எட்டுப்பட்டி கிராமப் பள்ளிகளில் செய்யணும். அப்பத்தான் மறந்த தமிழரின் பண்பாட்டு அடையாளங்களான விளையாட்டுக்களை இந்தக் காலத்துப் பிள் ளைங்க தெரிந்து கொள்ளவும், பழம்பெரும் விளை யாட்டுகளைக் காப்பாற்றவும் முடியும்; பஞ்சாயத்து போர்டிலிருந்து சம்பளம் கிடைக்கும்படி சிபாரிசு செய்றேன்; என்ன சொல்றீங்க?"

"அமிர்தம் சாப்பிடக் கசக்குமா? நான் போய்க் குடும்பத்தை அழைச்சிட்டு வரேன்" என்று சொல்லிவிட்டு பெங்களூருக்குப் போய் வீட்டைக் காலி செய்து குடும்பத்தை அழைத்து வந்தேன். மனைவி சீதாலட்சுமியை சி.எம்.சி. மருத்துவ மனையில் சேர்த்து, மகள் பாரதி கூட இருந்து பார்த்துக்கொள்ள வைத்தேன்.

மகன் சரவணனுக்கு கிராம அதிகாரி வேலையை வாங்கிக் கொடுத்தார் தலைவர் சுப்பிர மணியன். அத்துடன் பஞ்சாயத்து போர்டிலிருந்து எல்லாப் பள்ளிகளுக்கும் நான் வரும் செய்தியை (சர்க்குலர்) அனுப்பியதால், மீண்டும் தொண்டாகக் கருதிப் பண்பாட்டுக் கலைகளைச் சொல்லிக் கொடுக்க முற்பட்டேன்.

எதிர்பாராத விதமாகச் சிகிச்சை பலன ளிக்கா மல் போனதால், என் மனைவி சீதாலட்சுமி இறந்துவிட்டாள். இதற்குக் காரணம் நான்தான் என்று என் பிள்ளைகளே என் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தனர்.


"வீட்டை விற்றிருந்தா பெங்களூரிலே வைத்துக் காப்பாற்றி இருக்கலாம். இங்க பட்டிக் காட்டுக்குக் கொண்டு வந்து சாகடிச்சி எங் களைத் தாயில்லாப் பிள்ளைகளா ஆக்கிட்டீங்க; தமிழர் கலை, விளையாட்டு, பண்பாடு, அடை யாளம் மண்ணாங்கட்டின்னு யாருக்குமில்லாத அக்கறை உங்களுக்கு எதுக்கு? உங்களத் திருத்த முடியாது. நீங்க எப்படியோ போங்க; நாங்க பெங்களூர்க்கே போறோம்!" என்று சரவணன் பாரதியை அழைத்துக்கொண்டு புறப்பட்டான். என்னால் தடுக்க முடியாமல் மலைத்து நின்றேன். என் கண்கள் துளிர்த்தன.

"போங்க! எல்லாரும் ஒரு நாள் செத்துத்தான் போகணும்; யாரும் நிரந்தரமா வாழறதில்லை. ஆனா, எல்லா இடத்திலேயும் அழிந்த கலைகளை, பண்பாட்டு அடையாளங்களை என் சொந்த ஊரி லாவது காப்பாற்றணும்னு நெனச்சது தப்பா? இனத்தின் அடையாளங்கள் அழிந்தால் இனமே அழியும்! இதுக்கு நான் உடந்தையா இருக்க முடியாது" என்று மனத்திற்குள் நினைத்தேன்.

'என் தியாகம், எண்ணம் எல்லாம் அறிந்த மனைவி சீதாலட்சுமி எனக்குத் துணை இருப் பாள். நான் சாகும் வரை என் கலைப்பணி தொட ரும்' என்று உறுதி கொண்டேன்.

●

கட்டுரை





கர்மயோகி
(டி. நடராஜன்)

ஓசையற்ற ஒரு வழிகாட்டி

டாக்டர் க. பழனித்துரை



பள்ளி ஆசிரியராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கி, அரவிந்த அன்னையிடம் வந்து ஆசிரியப் பணியைத் துறந்து தன்னை உயர்த்தி 'மதர் சர்வீஸ் சொசைட்டி' என்ற நிறுவனத்தைப் புதுச்சேரியில் 1969–இல் உருவாக்கி, மிகச்சிறந்த பல்கலைக் கழகம் போல் செயல்பட்டு அற்புதமான மாற்றங்களைக் கொண்டுவரத்தக்க மனிதர்களை உருவாக்கிய மாமனிதர்தான் கர்மயோகி (டி.நடராஜன்). சமீபத்தில் தன் 92–வது வயதில் மண்ணுலகைத் துறந்தார்.

அவரின் மறைவுச் செய்தி என்பது ஒரு சோக நிகழ்வு அல்ல. அது சர்கரடீஸ் கூறியதுபோல் 'கருத்துக்களை உருவாக்கியவர்கள் வாழ்வது உயர் சிந்தனையில்தானே தவிர, உடம்பில் அல்ல. அந்த மனிதர்கள் வாழ்வது தாங்கள் உருவாக்கிய கருத்துக்களில்.'

கர்மயோகி, பகவான் அரவிந்தரையும் அன்னையையும் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தி, லட்சக்கணக்கான தமிழ் மக்களின் சிந்தனையிலும் நடத்தையிலும் செயல்பாடுகளிலும் அரவிந்தர் மற்றும் அன்னையின் முன்னேற்றக் கருத்துக்களைக் கொண்டுவந்த மாமனிதர்.

யோக வாழ்வு முக்திக்கானது என்பதை வாழ்வுக்கானது என்று பிரகடனப்படுத்தி, வாழ்வனைத்தும் யோகம் என்ற அரவிந்தர் மற்றும் அன்னையின் தத்துவத்தைச் சாதாரண மனிதன் தன் வாழ்வில் கடைப்பிடித்துத் தன் வாழ்க்கையை நெறிப்படுத்தி உயர் வாழ்க்கை வாழ்வதற்கான வழிமுறைகளை உருவாக்கித் தந்தவர் கர்மயோகி.

இவர் உருவாக்கிய நிறுவனம் ஆசிரமமாக இல்லாமல், தொண்டு நிறுவனமாகவும் ஆராய்ச்சி மையமாகவும் செயல்பட வடிவம் தந்தவர். இன்றைய சமூகத்திற்குத் தேவையான பொறுப்புமிக்க ஆராய்ச்சிகளை உலகத் தரத்தில் குறைந்த செலவில் எப்படிச் செய்வது என்பதை இவர்களிடம் நமது பல்கலைக் கழகங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

உலகப் பிரசித்தி பெற்ற அறிஞர்கள் கிளவ்லேண்ட், ராய் பாஸ்னர், ஹர்மன் பிரடரிக், ராபர்ட் மெக்பர்லேன் முதலிய பலர் இந்த நிறுவனத்துடன் இணைந்து பல ஆய்வு அறிக்கைகளைத் தயார் செய்து புத்தகங்களாக வெளி யிட்டுள்ளனர். குறிப்பாக வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்காகவும், தொழில் முனைவோர்களை உருவாக்கு வதற்காகவும், பொருளாதார வளர்ச்சி யைக் கொண்டு வருவதற்காகவும், விவ சாயத்தை மேம்படுத்துவதற்காகவும், சமூக மேம்பாட்டைக் கொண்டு வருவ தற்காகவும் நமது மத்திய அரசிடம் பல ஆய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள் ளது. இவை அத்தனைக்கும் பின்புல மாக இருந்தவை கர்மயோகியின் கருதுகோள்களும் கருத்துக்களுமாகும்.

கர்மயோகி மட்டுமே 70–க்கும் மேற் பட்ட புத்தகங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள்ளார். அதேபோல் நூற்றுக்கணக்கான ஆன்மீகக் கட்டு ரைகளை அமுதசுரபியிலும், முன்னணி ஆங்கில நாளேடான இந்தியன் எக்ஸ் பிரஸிலும் எழுதி அந்தக் கட்டுரைகள் தமிழிலும் ஆங்கித்திலும் புத்தகங்களாக வெளிவந்துள்ளன. அனைத்தும் ஆன்மீகமும் வாழ்க்கை மேம்பாடும் என்ற மையக்கருத்தை வைத்தே எழுதப் பட்ட கட்டுரைகளாகும்.

‘மதர் சர்வீஸ் சொசைட்டி’ செய்த அத்தனை ஆய்வுகளும் அறிக்கைகளும் புத்தகங்களாக வெளியிடப்பட்டு மிக எளிதாகப் பதிவிறக்கம் செய்யும் நிலை யில் அந்த நிறுவனத்தின் வலைத் தளத்தில் வைக்கப்பட்டுள்ளன. ஒரு பைசாக் கூடச் செலவில்லாமல், அத்த னைப் புத்தகங்களையும் பதிவிறக்கம் செய்து படித்து, நாம் நம்மை மேம் படுத்திக் கொள்ளலாம்.

அப்படித்தான் ஆயிரக்கணக்கான தொழில் முனைவோர்கள் கர்மயோகி யின் புத்தகங்களையும் கட்டுரைகளை யும் படித்துத் தெளிந்து, உணர்ந்து தங் கள் தொழில்களில் நடைமுறைப்படுத்தி வெற்றி பெற்றுள்ளனர்.

இன்று இந்த நிறுவனத்தைப் பல்லா யிரக்கணக்கான மேம்பட்ட மனிதர்கள் தங்களுக்கு வழிகாட்டும் நிறுவனமாக ஏற்றுச் செயல்பட்டுக் கொண்டுள்ளனர்.

இந்த நிறுவனம் பாண்டிச்சேரி, தமிழ்நாடு, இந்தியா என்று தன்னைச் சுருக்கிக் கொள்ளாமல், உலகளவில் செயல்பாட்டை விரிவாக்க அமெரிக்கா வில் செயல்படும் பன்னாட்டுக் கலை அறிவியல் மையத்தின் ஒரு பகுதி யாகவே மாறிப் பன்னாட்டுக் கருத் தரங்கம், ஆய்வுகள் முதலியவற்றைச் செய்து, புதுக் கருத்தாக்கங்களைக் கல்விக் கோட்பாட்டில், வளர்ச்சிக் கோட்பாட்டில் மற்றும் மேம்பாட்டிய லில் கொண்டுவந்து, உலகில் தலை சிறந்த அறிஞர்களின் கவனத்தை ஈர்த் துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் பல இடங்களில் கர்ம யோகியால் ஈர்க்கப்பட்டவர்கள் தியான மையங்களை மிகச் சிறப்புடன் நடத்தி வருகின்றனர். பலர் அந்த மையங்கள் அனைத்தும் ஏதோ மதம் சார்ந்த வழி பாட்டு நிலையங்கள் என்று எண்ணு வதும் உண்டு. உண்மை என்னவெனில், அந்த மையங்கள் எல்லாம் காந்தி நடத்திய ஆசிரமம் போன்றவை. அவை தியான மையங்கள்தான்.

ஆனால் அந்த மையங்களில் தியானத்தில் ஆரம்பித்து அங்கு வரும் மக்களிடம் மாற்றங்களைச் சிந்தனைப் போக்கில், நடத்தையில், செயல் பாட்டில் கொண்டுவரப் பயிற்சி அளிக் கும் நிறுவனங்களாக இயங்கி வரு கின்றன என்பது அங்குச் செல் வோருக்கு மட்டும்தான் தெரியும்.


இந்தச் செயல்பாடுகளுக்கான உந்து சக்தியைத் தரும் அடிப்படை ஆராய்ச் சியை நடத்தும் ஆராய்ச்சிக் கூடமாகச் செயல்படும் தலைமையகம்தான் பாண் டிச்சேரியில் அமைந்துள்ள ‘மதர்ஸ் சர்வீஸ் சொசைட்டி.’

கல்வியில் சீர்திருத்தங்களைக் கொண்டுவரவும் கர்மயோகியின் கல்விக் கருத்தாக்கங்களை நடைமுறைப்படுத் தவும் இந்த நிறுவனமே ஒரு மாதிரிப் பள்ளியை நடத்தி வருகின்றது. இந்தப் பள்ளியின் அனுபவத்தின் மூலம் கல்வி

யில் செய்ய வேண்டிய மாற்றங்களுக் காகத் தொடர்ந்து கருத்தரங்கங்களைத் தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் நடத்தி வருகின்றது.

இந்த நிறுவனத்தின் உதவித் தலைவராகச் செயல்படும் கேரி ஜேக்கப் ஓர் அமெரிக்கர். அவர் ஒரு சுயச் சிந்தனையாளர், நிபுணத்துவம் வாய்ந்த சிறந்த மனிதர். கர்மயோகி தரும் அத் தனை கருத்தாக்கங்களையும் ஆய்வு செய்து நடைமுறைப்படுத்தும் செயல் திட்டங்களைக் கொண்டு வந்தவர்.

எப்படி பகவான் அரவிந்தருக்கு அன்னையோ, அதுபோலக் கர்ம யோகிக்கு கேரி ஜேக்கப். இந்த நிறு வனத்தில் மேலாண்மை வல்லுனர் குழு ஒன்று அமெரிக்காவில் செயல்பட்டு மிகப்பெரிய ஆய்வுகளை நடத்திப் புத்தகங்களாக வெளியிட்டுள்ளது. உலகளவிலான தோல்வியுற்ற நிறுவனங் களுக்கு ஆலோசனைகள் வழங்கி மேம்படுத்துகின்றது; இந்த மேலாண்மை வல்லுநர் குழு.



இந்த அமைப்புக்களை வழி நடத்துபவர் கேரி ஜேக்கப். அவர் அடிக்கடிச் சொல்கின்ற வார்த்தை “நான் செய்பவை அனைத்தும் கர்மயோகி (அப்பா) அவர் கள் தந்த கருத்துக்களின் அடிப்படையில்” என்பதுதான். அந்த அளவுக்குத் தன் சிந்தனையால் மிகப்பெரிய செயல்பாடுகளை மிகச் சிறிய நிறுவனத்தில் கட்டமைத்துச் செயல்படுத்தியவர் கர்மயோகி அவர்கள்.

கர்மயோகி அவர்கள், நிறுவனத் தைப் பெரிதாகக் கட்டாமல், மனிதர் களைத் தயார்செய்து, அவர்களையே நிறுவனமாக்கி, மிகப்பெரிய செயல்பாடு களை நாட்டின் மேம்பாட்டிற்கும் சமூக மேம்பாட்டிற்கும் செய்து காட்டியவர்.

இன்று இந்த நிறுவனத்தை நடத் துவதற்கும், தியான மையங்களை நடத் துவதற்கும் ஏராளமான தக்கார்கள் இருக்கின்றார்கள். அவர்களெல்லாம் கர்மயோகியால் உருவாக்கப்பட்ட சமூக மாற்றத்திற்கானத் தொழில் முனை வோர்கள்.

இந்தியாவின் வளர்ச்சி, மேம்பாடு, முன்னேற்றம், மாற்றம் இவற்றிற்கு இந்திய அறிவுத்தளம் அடித்தளமாக அமையும் என்ற பகவான் அரவிந்தரின் கோட் பாட்டை மையமாக வைத்து, மிகப் பெரிய வளர்ச்சி இயக்கத்தை ஓசை யின்றிக் கட்டியவர் கர்மயோகி. அவ ரின் படைப்புக்கள் பாமரனைக்கூடத் தட்டி எழுப்பி, “நீ முன்னேறி விடலாம், உன்னை நீ கவனித்து மாற்றிக் கொண் டால்” என்ற நம்பிக்கையைத் தரக் கூடியவை.

அதேபோல் நிறுவனங்களின் தலை வர்களாக இருப்பவர்களுக்கு இவரு டைய படைப்புக்கள் நிறுவனங்களைப் பல மடங்காக விரிவுபடுத்துவதற்கும் உயர்த்துவதற்கும் சூத்திரங்களைக் கொடுத்துச் சாதனைகள் படைத் துள்ளன.

மானுடம் தன் விழிப்புணர் வில் (Awakening), சிந்தனைப் போக்கில் (Consciousness), மாற்றங்களைக் கொண்டு வந்து அளவில்லா முன்னேற் றத்தை உருவாக்க முடியும் எனச் சாகசம் (Adventure) செய்ய நினைக் கும் உயர்நிலை மனிதர் களுக்கும் வழி காட்டியவை இவரின் படைப்புகள்.

ஆழ் மனத்தின் சக்தியறிய எழுத்தாளர் எம்.எஸ். உதய மூர்த்திக்குக் குருவாக அமைந்தவர் ஜேம்ஸ் ஆலன். அதேபோல் இந்தியா வில் அறம் போற்றி மேம்பாடு அடைந்த பல்லாயிரக்கணக்கான மனிதர்களின் மேம்பாட்டுக் குரு கர்மயோகி.

கர்மயோகியின் படைப்புக்கள், செயல்பாடுகள் அனைத்தும் தெரிந்து கொள்ள ‘மதர் சர்வீஸ் சொசைட்டி’ வலைத்தளத்திற்குள் சென்றால், அனைத்தும் கிடைக்கும். அவற்றைப் பயன்படுத்தித் தனிமனிதர்களும், நிறு வனங்களும் தார்மீகமாக அளவற்ற உயர்நிலைகளை அடைய முடியும்.

தமிழ்ச் சமுதாயம் மேம்பாடு அடைய அறிந்துகொள்ள வேண்டிய ஒரு நிறுவனம்தான் இந்த மதர் சர்வீஸ் சொசைட்டி.

●



இம்மாத ராசி பலன்

“என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!”

1.10.2020 அன்று கோள்கள் நிலை

சந்திரன்	செவ்வாய் (வ)	ராகு	
	04.10.2020 செவ்.–மீனம்(வ) 17.10.2020 சூரி. – துலாம் 23.10.2020 சுக். – கன்னி 28.10.2020 செவ். – வக்ர நிவர்த்தி		
சனி			சுக்கிரன்
குரு	கேது	புதன்	சூரியன்

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்



மேஷ ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் அனுகூலம் உண்டு. எதையும் சமாளித்துவிடலாம். தொழில், உத்தியோகத் துறைகளில் எதிர் பார்ப்புகள் ஈடேறும். பொரு ளாதார விஷயங்களில் ஓரளவு திருப்தி நிலவும். ஒரு சிலர் தங்களது குழந்தைகளால் சிரமங்களை அடைய நேரலாம். மாதத்தின் பிற்பாதியில் சூரியன் 7–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் எதிர்ப்புகள், சலசலப்புகள் தோன்றி மறையும். ஸ்தான சலனம் ஏற்படக்கூடும். செவ்வாய் வக்கிர கதியில் சஞ் சரிப்பதால் ஒன்றிரண்டு மாதங்கள் எவ்வித விஷயத்திலும் தீர்க்கமான முடிவெடுத்துச் செயல் படுத்த இயலாது.

9–ஆம் வீட்டில் குரு சஞ்சரிப்பதால் பல பிரச் சனைகளுக்கு மத்தியில் சில நன்மைகளையும் அடைவீர்கள். சுக்கிரன் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்ப தால் அதிர்ஷ்ட வாய்ப்புகள் சிலரைத் தேடி வர லாம். சிலர் பங்கு வர்த்தகம் முதலிய ஹேஷ்ய பேர நடவடிக்கைகளில் நன்மை அடைவர். திருமண வாய்ப்பு இன்னும் ஒரு மாதக் காலத்திற்கு உள் ளது. முயற்சிக்கலாம். சனி 10–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் தொழில் துறையில் அந்தஸ்து தாழ்ந்து போகும். இன்னும் 1 1/2 வருடக் காலம் இந்த நிலை நீடிக்கும். ராகு 2–இல் சஞ்சரிப்பதால், பணம் வரும். செலவும் அதற்குத் தகுந்தாற்போல் ஏற்படும். உடல் நலனில் அக்கறை வேண்டும்.



ரிஷப ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் குழப்பம் இருந்துவரும். தடை களும் ஏற்படும். மாதத்தின் பிற் பாதி அனுகூலம் உண்டு. எதிர் பாராத தன வரவு ஏற்படலாம். வாழ்க்கைத் துணைவருக்கு ஏற்றம் உண்டு. சத்ரு ஜெயம் உங்களுக்கு ஏற்படும். தொழில், உத்தியோகத் துறைகளில் நன்மை ஏற்படும். செவ்வாய் 11–ஆம் வீட்டில் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் நிலு வைத் தொகைகள் கைக்கு வந்தடையும். பழைய நண்பர் சந்திப்பு ஏற்படலாம். வாழ்க்கைத் துணைவரால் நன்மை ஏற்படும்.

சுக்கிரன் 23–ஆம் தேதி வரை 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் வாகன சுகம் உண்டு. குடும்பத்தில் சில அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு மறையும். சனி 9–இல் சஞ்சரிப்பதால் பெற்றோர்கள், ஆசிரி யர்கள், முன்னோடிகள் பிரச்சனைகளை அடை வர். தொலைதூரப் பயணங்கள் வேண்டாம். குரு 8–இல் சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் துணைவருக்கு ஏற்றம் உண்டாகும். உங்களுக்கு எதிர்பாராத தன

வரவு ஏற்பட வாய்ப்புண்டு. பொருள் முடக்கம் விரைவில் அகன்றுவிடும். திருமணக் காரியங்களில் தற்சமயம் இறங்க வேண்டாம். ராகு உங்கள் ராசி மீது சஞ்சரிக்க இருப்பதால், உடல் நலம் காப்பது நல்லது.



மிதுன ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் அவ்வளவு யோக பலன்களைக் கூற முடியாது. சூரியன் உங்களுக்கு அலைச்சல், தேக நலிவு, புத்திர வழிக் கவலை, செலவு, முடிவு எடுக்க இயலாமை, காரியத் தடைகள், வீண் செலவு, சகோதர வழிப் பிரச்சனைகளைத் தோற்றுவிக்கக்கூடும். செவ்வாய் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் கடன் கொடுப்பது, வாங்குவது, நண்பர்கள் தொடர்புகளில் கவனம் வேண்டும். சுக்கிரன் 23–ஆம் தேதி வரை நன்மை செய்யும் வாய்ப்புண்டு. பின்னர் நீசம் பெறுவதால், வாகனப்பீடை ஏற்படும். புத்திர வர்க்கத்தார், குடும்பத்தார் வகையில் செலவினங்கள் கூடும்.

புதன் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் நல்லதோ, கெட்டதோ எந்த ஒரு விஷயத்திலும் தீர்க்கமான முடிவெடுத்துச் செயல்படுத்த முடியாது. குரு 7–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் திருமணம் முதலிய சுப காரியங்கள் ஈடேற இன்னும் ஒரு மாதம் அவகாசம் உள்ளது. அதற்குள் ஈடேறலாம். சனி 8–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சிலர் ஏற்கனவே வேலையை இழந்திருக்கலாம். சிலர் இழக்கும் தருவாயில் இருக்கலாம். இன்னும் 1 1/2 ஆண்டுக்காலம் தொழில் விஷயத்தில் கவனம் தேவை. ராகு உங்கள் ராசியை விட்டு அகன்றுவிட்டதால், யோகங்களை ஏற்படுத்துவார்.



கடக ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதம் முற்பாதியில் சில நன்மைகளைச் செய்யும் வாய்ப்புள்ளது. பொருளாதாரம், தொழில், உத்தியோக விஷயங்களில் ஓரளவு சாதகமாகக் காணப்படுகிறது. மாதத்தின் பிற்பாதியில் செலவு, விரயம், அலைச்சல் தவிர்க்க இயலாது. செவ்வாய் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், வெளிதேசத் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்வது நல்லது. நீண்ட பயணங்கள் வேண்டாம். அரசாங்க அதிகாரிகளிடம் கவனமுடன் நடந்து கொள்ள வேண்டும்.

சுக்கிரன் 23–ஆம் தேதி வரை சாதகமாகச் சஞ்சரிப்பதால் தன லாபம் ஏற்படலாம். உங்களது இனிய பேச்சாற்றல் மூலம் சில காரியங்களை வெற்றிகரமாக முடித்துக்கொள்ள வாய்ப்புண்டு. ராகு – கேது மாற்றம் உங்களுக்கு யோகமானது. வரும் 1 1/2 ஆண்டுக்காலம் மூன்றாவது மனிதர்கள், வேற்று மதக்காரர்களால் இலாபமும், நன்மையும் அடைவீர்கள். சனி 7–இல் சஞ்சரிப்பதால் அவ்வப்போது உடல் சோர்வும், மனச்சோர்வும் ஏற்படும். குரு 6–இல் சஞ்சரிப்பதால் கடன்காரன் அல்லது நோயாளன் என்ற பெயர் வரும் நவம்பர் 10–ஆம் தேதி வரை உங்களுக்குப் பொருந்தும்.



சிம்ம ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதம் முற்பாதியில் சில சிரமங்களையும், பணத் தேவையையும் ஏற்படுத்தினாலும், மாதத்தின் பிற்பாதியில் காரிய வெற்றி ஏற்படும். புதிய முயற்சிகள் பலிதமாகும். பணவரவு ஏற்படும். தொழில், உத்தியோகத் துறைகளில் முன்னேற்றம் காண்பீர்கள். செவ்வாய் 8–இல் வக்கிரம் பெற்று இம்மாதம் சஞ்சரிப்பதால், போக்குவரத்துக்களில் கவனம் தேவை. கப்பல், படகு, தெப்பம் ஆகியவற்றில் பயணம் செய்வது, அருவிகளில் குளிப்பது முதலிய விஷயங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

சுக்கிரன் ராசி மீது சஞ்சரிப்பதால் ஆடை, அணிமணிகள் சேர்க்கை ஏற்படும். இளமை உணர்வுடன் காணப்படுவீர்கள். 10–இல் ராகு சஞ்சரிப்பதால் தொழில் மாற்றம், இடப்பெயர்ச்சி முதலியவற்றிற்கு முயற்சி செய்வீர்கள். ஆனால், எளிதில் எண்ணம் ஈடேறாது. 4–இல் கேது சஞ்சரிப்பதால் குடும்பத்தில் குழப்பம் வரும். குரு இம்மாதம் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் அதிர்ஷ்ட வாய்ப்புண்டு. உங்களது அந்தஸ்து தற்போதைய நிலையில் நீடிக்கும். சுப காரியம் ஈடேறும். சனி 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் வசதி வாய்ப்புக் கூடும்.

கன்னி ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் சூரியன் விரயம், அலைச்சல், மனக்கஷ்டம் முதலிய பலன்களையே மாதத்தின் முற்பாதியில் ஏற்படுத்த வாய்ப்புண்டு. மாதத்தின் பிற்பாதியில் தன வரவு உண்டு. ஆனால், தங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாது. குடும்பத்தில்

கன்னி



அதிருப்தியான போக்கே நிலவும். சுக்கிரன் 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் ஆடம்பரப் பொருள்களைச் சிலர் விற்கவோ, அடமானம் வைக்கவோ நேரிடும். வாகனச் செலவு வரும். செவ்வாய் நேர் எதிர் ராசியில் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் எதிர்ப்புத் தோன்றும். வாழ்க்கைத் துணைவருடன் தர்க்கம் வேண்டாம்.

புதன் 2–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் ஓரளவு உங்கள் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். குரு 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சுய வியாபாரம் செய்பவர்கள் சொற்ப நன்மை அடையலாம். ஆசிரியர், கைவினைப் பொருள்கள் செய்வோர், கலை, இலக்கியம், போதனைத் துறைகளில் இருப்போர் சிரமங்களை அடைய நேரிடும், கவனம் தேவை. சனி புத்திர ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் குழந்தைகளைப் பற்றிய கவலையே மேலோங்கி நிற்கும். திருமணக் காரியங்கள் உங்களின் ஜனன ஜாதகத்தை ஆய்வு செய்து அதன்படி நடந்து கொள்வது நல்லது.


துலாம்



துலாம் ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் சற்றுச் சோதனையானது. மாதத்தின் முற்பாதி அத்தியாவசியச் செலவுகள் தவிர்க்க இயலாதது. பிற்பாதியில் மனக்குழப்பம், சலனம் உங்களிடம் அதிகமாக ஏற்படும். திடமான செயல்பாடு, சிந்தனை நன்மைகளை ஏற்படுத்தும். வீண் அச்சம், குழப்பம் தவிர்க்கப்பட வேண்டும். திடீர்ப் பயணங்கள் குறிப்பிட்ட சிலருக்கு ஏற்படலாம். செவ்வாய் வக்கிர கதியில் சஞ்சரிப்பதால் பொருளாதார விஷயங்களில் ஏற்றத் தாழ்வுகள் நிலவி வரும். உங்களுக்குக் கடனாலும், வியாதியாலும், வம்பாலும், வழக்காடுவதாலும் தன விரயம் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும் வாழ்க்கைத் துணைவருடன் அபிப்பிராய பேதம் ஏற்படவோ, தற்காலிகமாகப் பிரிந்து வாழவோ கூடும். எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

3–ஆம் வீட்டில் குரு சஞ்சரிப்பதால் திடீர் கோபதாபங்கள் உங்களைக் குற்றவாளியாக்கி விடும். பங்கு வர்த்தகம் முதலிய ஹேஷ்யபேர நடவடிக்கைகளில் இன்னும் சிறிது காலம் இறங்க வேண்டாம். சனி 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் கூட்டுக் குடும்பத்தில் இருப்பவர்கள் விட்டுக் கொடுத்து நடந்து கொள்வது நல்லது. பிரிவினைக்கு வழி வகுக்கும். திருமணக் காரியங்கள் ஈடேற வாய்ப்பில்லை. புதிய முயற்சிகள் தற்சமயம் வேண்டாம்.

விருச்சிகம்



விருச்சிக ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் தொழில், உத்தியோகத் துறைகளிலும், பொருளாதார விஷயங்களிலும் நன்மையுண்டு. பொருள் வரவு ஏற்படும். நண்பர் உதவி கிட்டும். மாதத்தின் பிற்பாதியில் விரயம், அலைச்சல் ஏற்படும். சுக்கிரன் 23–ஆம் தேதி வரை பெண்களால் பிரச்சனைகளை ஏற்படுத்தக்கூடும். தொழில் ஸ்தலங்களில் கவனம் தேவை. செவ்வாய் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் சகோதர வர்க்கத்தார், அரசாங்க அதிகாரிகள், உத்தியோகஸ்தர்களிடம் அனுசரித்துத் தேவை, சூழ்நிலைகளுக்கு ஏற்ப நடந்து கொள்வது நல்லது.

சனி 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், ஏதோ ஒரு குருட்டுத் தைரியத்தில் காலத்தை நகர்த்தி விடுவீர்கள். குரு 2–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் நல்ல உறவுகள் நீடிக்கும். அவ்வப்போது பண வரவும் ஏற்படும். உங்களின் வாக்கு சாதுர்யம் சமயத்தில் கைகொடுக்கும். சுப காரியங்கள் ஒரு மாதத்திற்குள் ஈடேறலாம். பின்னர் சரிவராது. ஓராண்டு காத்திருக்க வேண்டும். ராகு 7–ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதால், வேற்று மதக்காரர்கள், விதவைப் பெண்கள் உங்கள் வாழ்க்கையில் குறுக்கிட வாய்ப்புள்ளது. ராசி மீது கேது சஞ்சரிப்பதால் மறைபொருளான விஷயங்கள், ரகசியங்கள் புலப்படும். புது முயற்சி வேண்டாம்.

தனுசு



தனுசு ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் உங்களுக்குச் சிறப்பானது. மாதத்தின் முற்பாதியில் தொழில், உத்தியோகத் துறைகளில் லாபமும், நன்மையும் உண்டு. உங்களது அதிகாரம், செல்வாக்கு உயரும். தொழில் சம்பந்தமாகப் பயணங்கள் அனுகூலப்படும். மாதத்தின் பிற்பாதியில் லாபமுண்டு. பொருள் வரவுண்டு. நண்பர்கள் உதவியுண்டு. புதிய காரியங்களைத் தொடங்க நன்மையுண்டு. செவ்வாய் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் அடிக்கடி உங்கள்

முடிவுகளை மாற்றிக் கொள்வீர்கள். குழப்பம் அடைவீகள். புத்திர வர்க்கத்தார் மூலம் சிறு சிரமங்கள் ஏற்படும்.

சனி 2–இல் சஞ்சரிப்பதால், பண வரவு நேரிட்டாலும், சமமான செலவுகளும் ஏற்படும். ராசி மீது குரு சஞ்சரிப்பதால் இன்னும் ஒரு மாதம் சிறைப்பட்டவர் நிலையில்தான் இயங்குவீர்கள். உங்களது விருப்பங்கள் முழுவதும் நிறைவேறாது அல்லது உங்கள் விருப்பப்படி எதையும் செய்ய இயலாது. திருமணக் காரியங்கள் கைகூடும் வாய்ப்புத் தற்சமயம் இல்லை. ராகு 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் உங்களது வசதி வாய்ப்புகள் அதிகரிக்கலாம். அதேசமயம் வயிற்று உபாதை ஏற்படலாம். கிருமித் தொற்றால் உபத்திரவம் ஏற்படலாம். அடுத்த 1 1/2 ஆண்டுக்காலம் சுகாதாரம் பேணுதல் வேண்டும்.



மகர ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் காரியத்தடைகளைச் சந்திக்க நேரிடும். நேர்மையான நடவடிக்கைகள், சன்மார்க்க நெறிமுறைகளால் உங்கள் காரியங்களில் வெற்றி பெறலாம். மாதத்தின் பிற்பாதியில் சற்றுச் சிரமங்களின்பேரில் உங்கள் செயல்களில் வெற்றி அடைவீர்கள். தொழில், உத்தியோகத் துறைகளில் அனுகூலம் உண்டு. சூரியன் நீசம் பெற்றுச் சஞ்சரிப்பதால், ஒரு சிலர் செய்யும் தொழிலை விட்டுவிட எண்ணம் கொள்ளலாம். செவ்வாய் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், தேவையற்ற அச்சங்கள் ஏற்படும். நண்பர்கள், தெரிந்தவர்களிடம் பெரிய தொரு நன்மைகளை அடைய முடியாது.

ராகு – கேது பெயர்ச்சி உங்களுக்குச் சாதகமாக உள்ளதால், அடுத்த 1 1/2 ஆண்டுகள் சனி, குரு முதலிய விதி நிர்ணயக் கிரகங்களால் ஏற்படக்கூடிய தீய பலன்களிலிருந்து விடுபட உதவும். ஜன்மச்சனி நடைமுறையில் உள்ளதால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் வேண்டும். குரு 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், தர்மக் காரியங்களில் ஈடுபடுவது நல்லது. சுக்கிரன் 23–ஆம் தேதி வரை 8–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் வாகனங்களைக் கையாள்வதில் கவனம் வேண்டும். ஒரு சிலர் தங்கள் வேலையை இழந்து, வேறு புதிய வேலையில் சேர வாய்ப்புண்டு.



கும்ப ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதத்தின் முற்பாதியில் சோதிப்பார். மாதத்தின் பிற்பாதியில் அற்ப நன்மைகளைக் கொடுப்பார். உங்கள் வழிமுறைகளில் நேர்மை, நாணயம் வேண்டும். அவ்வாறான நடவடிக்கைகளே உங்களுக்கு நல்லது. இம்மாதம் எதிர்பாராத செலவுகள் நிச்சயம் உண்டு. அதுபோல் எதிர்பாராத நன்மைகளும் ஏற்படும் வாய்ப்புண்டு. வசதியான பிரமுகரால் அவ்வாறான நன்மை ஏற்படலாம். சனி 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சுபச் செலவு, விரயம், புதிய தொழில் முதலீடுகள் சிலர் செய்யக் கூடும். சுக்கிரன் 7–இல் சஞ்சரிப்பதால் பெண்கள் முகாந்திரமாக எதிர்ப்புகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

4–இல் ராகு சஞ்சரிக்க இருப்பதால் அடுத்த 1 1/2 ஆண்டுப் பயணங்கள் சில எதிர்பாராத சங்கடங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. கேது 10–இல் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகத் துறைகளில் இருள் சூழ்ந்தது போன்று காணப்படும். செவ்வாய் வக்கிரம் பெற்று வாக்கில் சஞ்சரிப்பதால் தண்டச் செலவு இம்மாதம் வரலாம். வாய் வார்த்தையில் கவனம் வேண்டும். எவரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம். திருமணக் காரியங்கள் அடுத்த ஒரு மாதம் வரையில் உள்ளது. ஒரு சிலருக்கு நன்மையாக சுப காரியங்கள் நிறைவடையும்.




மீன ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் சிறப்பானதல்ல. குடும்பத்தில் எதிர்ப்பும், விவகாரங்களும், எதிர்பாராத செலவும், சம்பவமும் ஏற்பட வாய்ப்புண்டு. மாதத்தின் முற்பாதியில் கருத்து வேற்றுமைகளுக்கு இடம் கொடுக்கலாகாது. மாதத்தின் பிற்பாதியில் உடல் நலனில் அக்கறை செலுத்த வேண்டும். தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. செவ்வாய் ராசி மீது வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் முன்கோபம் பிரச்சனைகளை ஏற்படுத்தும். குரு 10–இல் சஞ்சரிப்பதால், இட மாற்றம் சிலருக்கு அத்தியாவசியமாகலாம். பிறரது உதவிகளை எதிர்பார்க்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படலாம்.

சனி லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் முதியவர்களின் உதவி கிடைக்க வாய்ப்புள்ளது. சுக்கிரன் 6–இல் உள்ளதால், உடலில் சர்க்கரை அதிகப்படலாம். தகுந்தபடி உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டும். ராகு 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் துணிந்து எக்காரியத்திலும் இறங்கி வெற்றி பெறலாம். வீண் பயம், அச்சத்துடன் ஈடுபடும் காரியம் வெற்றியளிக்காது. வரும் குருப்பெயர்ச்சிக்குப் பின் திருமணக் காரியங்களில் தீவிரம் காட்டலாம். ஓராண்டுக் காலம் லாபஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால் ஈடேறும்.

உடல் பருமனைத் தடுக்கும் உணவுப் பிரமிடு 7



கட்டுரை



மனித உடலுக்குப் பெரும்பாலான நோய்கள் உணவு மூலமே வருகின்றன. அதிலும் குறிப்பாக உடல் பருமன் வருவதற்கு மிகப் பெரும் காரணமாக இருப்பது உணவுதான். அதிக உணவு, பசிக்காத நேரத்திலும் உணவு, நேரம் தவறி உணவு, உழைப்பில்லாத உணவு, சுகாதாரமற்ற உணவு முதலியவையே பிரச்சனைகளைத் தோற்றுவிக்கின்றன. ஆகவே, உடல் நலத்திற்குத் தேவையான அளவு மட்டுமே உணவு எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த உணவுகளை எப்படி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பார்க்கலாம். இதுதான் சரிவிகித உணவு எனப்படும் உணவு பிரமிட். இந்த உணவுப் பிரமிட்தான் மனிதர்களின் சஞ்சீவினி மந்திரம்.



உணவுப் பிரமிட் : பசியால் இறப்பவர்களைவிட, அதிக உணவு சாப்பிட்டு இறப்பவர்களே அதிகம் என்பார்கள். இதற்குக் காரணம் உணவு பற்றிய விழிப்புணர்வு இல்லாததுதான்.

உணவுப் பிரமிட் என்பது முக்கோணம். இந்த முக்கோணத்தின் அடிப்பக்கம் முழுமையாகத் தண்ணீரால் நிரம்பியிருக்க வேண்டும். ஆம். பிரமிட் முக்கோணம் தரும் முதல் முக்கியத்துவம் நீருக்குத்தான். இதனை அடுத்து, பருப்பு மற்றும் தானிய வகைகள்.

இதனையடுத்துக் கீரை, காய்கறிகளும் பழங்களும் இடம்பிடிக்கின்றன. இதனை அடுத்த அடுக்கில் பால் மற்றும் பால் சார்ந்த உணவுகளும், மீன், முட்டை முதலிய அதிக ஆபத்தில்லாத அசைவ உணவுகளும் இடம்பிடிக்கின்றன.

முக்கோணத்தில் கூம்பில் எண்ணெய் மற்றும் இனிப்பு வகைகள் இடம்பிடிக்கின்றன. இந்த முக்கோணத்தின் அடிப்படையில், எது அதிகமாக எடுத்துக்கொள்ள வேண்டும், எதைக் குறைவாக

டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத்

எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

தண்ணீர் : மனிதனின் முதல் தேவை தண்ணீர் மட்டும்தான். அதனால் தினமும் எட்டு டம்ளர் தண்ணீர் அவசியம் குடிக்க வேண்டும். எடுத்துக்கொண்ட உணவை ஜீரணம் செய்வதற்கும், உடல் உறுப்புக்களைச் சுத்தம் செய்வதற்கும் தண்ணீர் அத்தியாவசியத் தேவையாக இருக்கிறது.

செயற்கைக் குளிர்பானங்கள், காபி, டீ முதலியவை குடிப்பதற்கும் தண்ணீர் குடிப்பதற்கும் தொடர்பு இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். குடும்பத்தில் அத்தனை பேரும் காய்ச்சி ஆற வைத்த தண்ணீரையே குடிக்க வேண்டும். தினமும் போதுமான அளவு நீர் குடித்து வந்தால், உடல் மிகவும் புத்துணர்ச்சியுடன் திகழும்.

பருப்பு மற்றும் தானியங்கள் : கோதுமை, அரிசி, ராகி, சோளம், கம்பு முதலிய பல்வேறு தானியங்களையும் சேர்த்துக் கொள்வது மிகவும் அவசியம். ஏதேனும் ஒரு தானியத்தை மட்டுமே தொடர்ந்து எடுத்துக் கொள்ளக் கூடாது. தானியம் மற்றும் பருப்பு வகைகளில்தான் உடலுக்குத் தேவையான மாவுச்சத்து நிரம்பிக் கிடக்கிறது.

துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, கொள்ளுப்பயறு, பட்டாணி, முளை கட்டிய பயறுகளில் ஏகப்பட்ட புரதம் நிரம்பியுள்ளது. தானியம் மற்றும் பருப்பு வகைகளில் இருக்கும் சத்துக்கள் ரத்த உற்பத்திக்கும் எலும்புகள் வலுவடையவும் உபயோகமாக இருக்கின்றன.

கீரை, காய், பழங்கள் : குடல் சுத்தமே உடல் சுத்தம் என்பார்கள் நம் முன்னோர்கள். குடலைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் கீரை, காய் மற்றும் பழங்களுக்கு முக்கிய இடம் உண்டு. காய்களில் அதிக நார்ச்சத்தும், வைட்டமின்கள் மற்றும் கனிமங்களும் நிரம்பியுள்ளன.

தினமும் ஒரு கீரையை உணவில் சேர்த்துக்கொள்ளும்போது மலச் சிக்கல், வயிறு உபாதை, ரத்தசோகை முதலிய பிரச்சனைகளைத் தவிர்க்க முடியும். மேலும் நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்தவும் கீரை, காய்கள் பயன்படுகின்றன.

அகத்திக்கீரை, முருங்கைக்கீரை, தண்டுக்கீரை முதலியவற்றில் வைட்டமின் சி நிரம்பியுள்ளன. இது தவிர, ஒவ்வொரு வேளைச் சாப்பாட்டின்போதும் ஏதேனும் ஒரு காய் கண்டிப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக வெண்டை, கத்தரி, பாகல், சுரைக்காய், புடலங்காய் முதலியவற்றில் ஏராளமான கனிமச் சத்துக்கள் கொட்டிக் கிடக்கின்றன.

தினமும் ஒரு வேளை மட்டும் முழுமையாகப் பழம் மட்டும் சாப்பிட்டுவந்தால் உடலில் ஜீரண சக்தி அதிகரிக்கும். பொதுவாக மஞ்சள், சிவப்பு நிறப் பழங்களில் வைட்டமின் சி மற்றும் வைட்டமின் ஏ சத்துக்கள் அதிகமாக இருக்கின்றன.

தினமும் காய் எடுத்துக் கொள்வது போலவே, ஏதாவது ஒரு பழமும் கண்டிப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும். பழங்களைச் சாறு பிழிந்து சாப்பிடுவதைவிட, நேரடியாக உட்கொள்ளும்போதுதான் அதிகப் பலன் கிடைக்கிறது.

இதுவரை நாம் பார்த்தவை எல்லாம் வேண்டிய அளவுக்கு எடுத்துக் கொள்ளலாம். இவற்றால் உடம்புக்கு எந்தக் கெடுதலும் ஏற்படுவதில்லை.

ஆனால், இனி நாம் பார்க்க இருப்பவை குறைந்த அளவு மட்டுமே

எடுத்துக் கொள்ள வேண்டியவை.



பால் பொருட்கள் : உடலுக்குத் தேவையான கால்சியம், புரோட்டீன், கொழுப்புச் சத்து முதலியவை பால் பொருட்களில் நிரம்பியுள்ளன. ஆனாலும், பால், தயிர், மோர், நெய், வெண்ணெய் முதலியவற்றைக் கட்டுப் பாடான அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும். உடலில் கொழுப்புச் சத்து அதிகம் இருப்பவர்கள் பாலை மிகவும் குறைவாகவே பயன்படுத்த வேண்டும்.

இந்தப் பொருள்களை அதிகம் எடுத்துக் கொள்வதன் காரணமாக, ஜீரண மண்டலம் சிக்கல் அடை வதுடன், உடலில் கொழுப்பு அளவுக்கு அதிகமாகத் தேங்கிவிடும். அதனால் இவற்றைக் கட்டுப்பாடான அளவுக்கு மட்டுமே எடுக்க வேண்டும்.

மாமிச உணவுகள் : பால் பொருட்களைப் போன்றே அசைவ உணவுகளும் உடலுக்கு மிகவும் குறைந்த அளவு எடுத்துக் கொள்வதே போதுமானது. கோழி, ஆடு, மாடு, பன்றி, மீன், முட்டை முதலிய அனைத்து வகை உணவுகளிலும் புரோட்டீன், பி காம்ப்ளக்ஸ் மற்றும் வைட்டமின் ஏ சத்துக்கள் நிரம்பி யுள்ளன.

இந்த வகை உணவுகளில் மீன் மட்டுமே மிகுந்த நன்மை செய்யக் கூடியதாக இருக்கிறது. புரோட்டீன் சத்துக்கள் இவற்றில் நிரம்பியிருந் தாலும், அதிகக் கொழுப்பு இருப்ப தால், குறைந்த அளவுக்கு எடுக்கும் போது மட்டுமே உடலுக்குப் பயன் தருவதாக இருக்கிறது. அதிகம் எடுக்கும் போது ஆபத்து ஏற்படுகிறது.

எண்ணெய் மற்றும் இனிப்புகள் : இனிப்புகள் மற்றும் எண்ணெய் உணவுகளில் ஏகப்பட்ட கொழுப்பு இருக்கிறது. அதனால் எண் ணெய், இனிப்பு முதலியவற்றை மிக மிகக் குறைந்த அளவு மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும்.

சாக்லேட், ஐஸ்கிரீம் இவற்றில் அடங்கியிருக்கும் கொழுப்பு மற்றும் மாவுச்சத்து உடம்புக்குக் கேடு விளை விக்கின்றனவே தவிர, எந்த நன்மையும் செய்வதில்லை. அதனால் உடல் எடை அதிகரிக்கக்கூடாது என்று நினைப்பவர்கள் இனிப்பு மற்றும் எண்ணெயில் இருந்து விலகியே நிற்க வேண்டும்.

எண்ணெய், இனிப்பு போன்று உப் பும் உடலுக்கு மிகமிகக் குறைவாகவே தேவை. அதனால் இதனையும் மிகவும் குறைந்த அளவுக்கு மட்டுமே பயன் படுத்த வேண்டும்.

இந்த உணவுப் பிரமிடு ஞாபகத் தில் இருந்தாலே, ஒருவரால் உடல் பருமன் ஏற்பட்டுவிடாமல் தடுத்துக் கொள்ள முடியும்.


உணவு பிரமிட் ஒவ்வொரு வீட்டுச் சமையல் அறையிலும் சாப்பாட்டு அறையிலும் இடம்பெற வேண்டும். அப்போதுதான் சரியான உணவை அதிகமாகவும், ஆபத்தான உணவைக் குறைவாகவும் எடுத்துக்கொண்டு, நிறைவான வாழ்க்கை வாழ முடியும்.

●


Sakthi
as pure as mother's love
தூய்மையின் வலிமையுடன்
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
ABT
Sakthi
as pure as mother's love
MILK
Pasteurised, Homogenised, Standardised Milk
SPECIAL
250
MILK
Pasteurised, Homogenised Standardised Milk
SUPREME
MILK
SELECT
Pasteurised
Toned Milk
500ml
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

வன்முறையற்ற அமைதி உலகுக்கான இஸ்லாம்

ஈரோடு ஜீவா



“காலத்தை வென்று நிற்கும் கெய்ரோ நகரின் இரு உன்னத ஞானபீடங்களில் உரையாற்றும் வாய்ப்பைப் பெரிதும் மதிப்புமிக்கதாகப் போற்றுகிறேன். அல் அஜார் பல்கலைக்கழகம் இஸ்லாமிய ஞானப்பெட்டகம். கெய்ரோ பல்கலைக் கழகம் எகிப்தின் நவீன முன்னேற்றத்திற்கான களம். அமெரிக்க சமாதான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அஸ்ஸலாம் அலைக்கும்.

2001 செப்டம்பர் 11 நிகழ்வுக்குப் பின், இஸ்லாம் வெறுப்புடனும், பகையுடனும், மனித



உரிமைக்கு எதிரானது என்றும், அச்சத்துடனும், நம்பிக்கையின்றியும் பார்க்கப்படுகிறது. இந்த அவநம்பிக்கையும், வெறுப்பும் நீக்கப்பட வேண்டும். அமெரிக்காவுடனும் இஸ்லாமியர் உடனுமான உறவைப் புதுப்பிக்கும் நோக்குடன் நான் முன்வருகிறேன். நாம் ஒருவரை ஒருவர் மதிக்கவும், ஒருவர் கருத்தை மற்றவர்கள் கேட்கவும் மதிக்கவும் முன்வர வேண்டும்.

‘கடவுளை நம்புங்கள், சத்தியத்தைப் பேச வேண்டும்’ என்கிறது குர்ஆன். நான் அதையே பின்பற்றவும் முயல்கிறேன். நான் கிறிஸ்தவன். என் தந்தை கென்ய இஸ்லாமியப் பாரம்பரியத்தைச் சார்ந்தவர். நான் இளம் வயதில் இந்தோனேசியாவில் காலையும், மாலையும் அசான் அழைப்புக் கேட்டு வளர்ந்தவன். சிக்காகோவில் பணியாற்றும் போது இஸ்லாமிய மதிப்பீட்டையும், சமாதானத் தையும் உணர்ந்தேன்.

அல் அஜார் பல்கலைக்கழகம் அறிவுச்சுடர் ஏற்றி ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டது. அல்ஜீப்ராவை, திசைகாட்டியை, கடற்பயணத்தை, இலக்கியங்களை, அச்சுக்கலையை, மருத்துவத்தை உலகுக்கு வழங்கிய பெருமை இஸ்லாத்திற்கு உண்டு. அதன் உன்னதக் கட்டடக்கலை,

கவிதைகள், இசை, ஓவிய எழுத்து, தியானக் கூடங்கள் என இஸ்லாமியர் கொடைகள் ஏராளம். சமத்துவமும், சகிப்புத் தன்மையும் இஸ்லாமின் அடிப்படைப் பண்பாடு.

அமெரிக்க வரலாறு இஸ்லாமின் ஒரு பகுதி. அமெரிக்காவைச் செழுமைப் படுத்துவதில் இஸ்லாமியர் பங்களிப்பு உன்னதமானது.

எமது நாட்டின் 70 லட்சம் அமெரிக்க முஸ் லிம்கள் சராசரி வருமானம், கல்வி, வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை மேலாகப் பெற்று வாழ்ந்து வரு கின்றனர். எந்த மதத்தின் உரிமையும், மற்றொரு மதத்தின் உரிமைக்குக் குறைந்ததாக அமெரிக்கா வில் இல்லை. நாடு முழுவதும் 1200 மசூதிகள் உள்ளன. பெண்ணுரிமை, தலை முக்காடு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இஸ்லாம் அமெரிக்காவின் பிரிக்க முடியாத ஓர் அங்கம். அனைத்து மொழி, இன, மத மக்களுக்குமான கல்வி, பாதுகாப்பு, கௌரவ வாழ்வு, இறை நம்பிக்கை ஆகியவை அமெரிக் காவில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாம் நம்மைச் சூழ்ந்து வரும் ஆபத்துகளை அலட்சியம் செய்து ஒதுக்காமல், கவனத்துடன் எதிர்கொள்ள வேண்டும். நாம் அனைவரும் இணைந்து போராட வேண்டிய காலம் இது.

பரவி வரும் வன்முறைகளை எதிர்கொள்வது எப்படி? : அமெரிக்கா இஸ்லாமுடன் பகைமையை வளர்க்கவோ, போரிடவோ தயாராக இல்லை. ஆனால் வன்முறை எங்கிருந்து வருமானாலும் அதை முறியடிப்போம். அப்பாவி ஆண்களை, பெண்களை, குழந்தைகளை வன்முறையாளர்கள் கொல்வது ஏற்க முடியாதது. கடந்த ஏழு ஆண்டு களாக தாலிபான், அல்கொய்தா தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடி வருகிறோம். அதில் சமா தானம் ஏற்பட வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாகும்.

சிலர் 9/11 தாக்குதலை நியாயப்படுத்த முயல லாம். அன்று 3000 அப்பாவி மக்கள் அதில் கொல்லப்பட்டனர். எவ்விதப் பாவமும் செய்யாத அம்மக்களைக் கொல்வது என்ன நியாயம்?

வன்முறையைத் தடுத்திடவும், சமாதானம் நிலவவுமே 43 நாடுகளில் அமெரிக்கப் படை நிற் கிறது. வன்முறையாளர்களுக்கு மத எல்லை எதுவு மில்லை. முஸ்லீம்களையே அவர்கள் உலகம் முழுவதும் அதிகம் கொன்றுள்ளார்கள். அவர்கள் செயல் உலக நீதிகள், இஸ்லாமிய அறக்கோட்பாடு களுக்கு எதிரானது.

'அப்பாவிகளைக் கொல்பவர்கள் மனித குலத்தையே கொல்பவர்கள்' என்கிறது குரான். பல கோடி மக்களின் நன்னம்பிக்கைகளைச் சிலர் சிதைக்கிறார்கள். இஸ்லாம் வன்முறைக்கான தல்ல. சமாதானமே அதன் சாரம். வன்முறையை வன்முறையால் தீர்க்க முடியாது. எத்தனை லட்சம் கோடிகள் செலவிட்டாலும், அது பயனற்றதே.

இன்று அமெரிக்காவுக்கு இரட்டைப் பொறுப்பு உள்ளது. ஈராக்கிற்கு உதவி, ஈராக்கை முன்னேற்றுவது, ஈராக்கை ஈராக்கியரிடம் ஒப் படைத்து நாடு திரும்புவது. அவர்கள் மண் மீது எங்களுக்கு ஆசையில்லை.

இஸ்ரேல் – பாலஸ்தீனம் – அரபு நிலை : அமெரிக்கா இஸ்ரேலுடன் நெருங்கிய உறவு கொண்டது. வரலாற்று, பண்பாட்டு அடிப்படை யிலான அவ்வுறவு வலிமையானது. யூதர்களின் தாய்நாடு என்பது நீண்ட சோக வரலாறாகும். யூதர்கள் பல நூற்றாண்டுகளாக வஞ்சிக்கப்பட்டு உலகம் முழுவதும் விரட்டியடிக்கப்பட்டவர்கள்.

அவர்களுக்கு எதிரான ஐரோப்பியக் கொடு மைகளின் சின்னமான புசென்வால்ட் சித்திர வதைக் கூடத்தையும் விஷவாயுக் கொலைக் களங்களையும் கண்டேன். 60 லட்சம் யூதர்கள் அவற்றில் கொல்லப்பட்டனர். அது இன்றைய இஸ்ரேலின் மக்கள் தொகைக்கும் அதிகமானது. இஸ்ரேலை அழிக்க நினைப்பது, அவர்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பது தவறானது; வேதனையளிப்பதேயாகும். எனினும் இப்பகுதியில் சமாதானம் தவிர்க்க முடியாத தேவையாகும்.

பாலஸ்தீனியர், கிறிஸ்துவர்கள், முஸ்லீம் களின் தாய் மண்ணுக்கான போராட்டத்தையும், வேதனைகளையும் மறுக்க முடியாது. அறுபது ஆண்டுக்கால நீண்ட துயரமது. மேற்கு எல்லை யிலும், காஜாவிலும் உள்ள அகதி முகாம்கள் காணச் சகிக்க முடியாதவை.

பாலஸ்தீன மக்கள் அனுபவித்து வரும் துய ரங்கள் ஏற்க முடியாதவை. அவர்களின் உரிமை, கௌரவம், வாய்ப்புக்களை அமெரிக்கா மதிக்கத் தவறக்கூடாது. பாலஸ்தீனியர் வன்முறையைக் கைவிட வேண்டும். கொலை ஒரு தீர்வாகாது. பல நூறாண்டுகள் அமெரிக்கக் கருப்பின மக்கள் அடிமைத்தனத்தையும், உரிமை மறுப்பையும், வன் கொடுமைகளையும் சந்தித்தனர். ஆனால் வன் முறையால் தீர்வு வரவில்லை. இதுவே தென் னாப்பிரிக்காவிலும் உண்மையானது.

வன்முறை தீர்வுமல்ல, வீரமுமல்ல. உறங்கும் குழந்தைகளை, அப்பாவிகளை ஏவுகணைகளை வீசிக் கொல்வது என்ன வீரம்? தேவாலயங்களில் குண்டு வீசுவதும், பேருந்துகளை எரிப்பதும் என்ன வீரம்? மூன்று மத மக்களின் புனித மண் ரத்தத்தில் தோய்ந்து கிடப்பது எப்படிச் சரியாகும்?

அணு ஆயுத ஆபத்து : அணு ஆயுதப் போட்டி மத்தியக் கிழக்கில் எழுவது மாபெரும் ஆபத் தாகும். சில நாடுகள் அணு ஆயுதங்களை வைத் துள்ளன. பலரிடம் இல்லை. யார் அணு ஆயுதம் வைத்திருப்பது என்பதை யார் முடிவு செய்வது? எந்த நாடும் அணு ஆயுதம் வைத்திருப்பது கூடாது. அணு ஆற்றல் ஆக்கப்பணிகளுக்கு மட்டுமே. அதற்கான ஒப்பந்தத்தை உலக நாடுகள் ஏற்க வேண்டும்.

ஜனநாயகத்தைக் காப்பது எப்படி? : எந்த நாடும் இத்தகைய ஆட்சி முறையைத்தான் ஏற்க வேண்டுமென வற்புறுத்த முடியாது. மக்கள் முடிவே இறுதியானது. ஒவ்வொரு நாடும் தன் மரபு சார்ந்து முடிவெடுக்கும் உரிமை பெற்றதே. அமெரிக்கா தனக்கே எல்லாம் தெரியும் என்று கூறிவிட முடியாது. மக்களை ஏமாற்றாத, வெளிப் படைத் தன்மை கொண்ட அரசு தேவை. இது அமெரிக்காவின் கருத்து. இதை நாங்கள் ஆதரிக்கிறோம்.

மக்கள் உரிமைகளைக் காக்கும் அரசு நிலைத்ததாகவும், வெற்றிகரமாகவும் தொடரும். அடக்குமுறை அரசு நீடிக்க முடியாது. பதவியை மக்கள் ஒத்துழைப்புடனே தொடர முடியும். சிறு பான்மையினர் உரிமைக் காப்பு, சகிப்புத்தன்மை, சமரசப் போக்கு அவசியம். கட்சி எல்லை கடந்து மக்கள் நலனைப் பாதுகாப்பதே உண்மை ஜன நாயகமாகும்.

மதச் சுதந்திரம் : இஸ்லாம் சகிப்புத்தன்மை யைப் போதிக்கும் மரபு கொண்ட மதம். நான் இந் தோனேசியாவில் வாழ்ந்த இளமைக் காலத்தில், முஸ்லீம்கள் பெரும்பான்மை கொண்ட நாட்டில் கிறிஸ்தவர்கள் முழுமையான மதச் சுதந்திரம் பெற்றவர்களாக வாழ்வதைக் கண்டேன். இந்தத் தாராள மனம் இன்று பெரிதும் தேவை.

ஒருவர் நம்பிக்கையை மற்றவர் மதித்திட வேண்டும். ஒரே மதமான இஸ்லாமுள்ளும் சன்னி, ஷியா வேறுபாட்டால் வன்முறை வெடிக்கிறது. மத ஒற்றுமை முக்கியமானது. பாதுகாக்கப்பட வேண் டியது. ஜகாத் எனும் கொடை தருவதற்கு அமெரிக்கச் சட்டம் கடினமாக உள்ளது. அதை மாற்ற நான் முயல்கிறேன். இஸ்லாமிய மத முறையைப் பின்பற்றுவதற்கான இடையூறுகளை ஐரோப்பிய நாடுகள் தளர்த்த வேண்டும். குறிப்பாக உடைமுறைக்கான அனுமதி அவசியம். சௌதி யும், துருக்கியும் மதங்களிடையேயான ஒற்றுமைப் பாலம் வளர்க்க முயல்வதை வரவேற்கிறோம்.

பெண்ணுரிமை : தலைக்குத் துணி போடு வது சமத்துவ மறுப்பு என்ற கருத்து ஐரோப்பிய நாடுகளில் உள்ளது. கல்வி மறுப்பே உண்மை யான சமத்துவ மறுப்பு. கல்வி விடுதலையும், சுதந் திரமும் தருவது. பெண்ணுரிமை என்பது முஸ்லீம் கள் பிரச்சனை மட்டுமா? பல இஸ்லாமிய நாடு களில் பெண்கள் அரசியலில் முதன்மை பெற்றுள் ளனர். ஆனால் அமெரிக்கப் பெண்கள் இன்னும் சம உரிமைக்குப் போராடிக் கொண்டுள்ளனர்.

என் மகன் போலவே மகளும் சம உரிமை பெற்றவளே. ஆணுக்கு உள்ள உரிமை பெண்ணுக் கும் உண்டு. முஸ்லீம் நாடுகளின் கல்வி வளர்ச் சிக்கு அமெரிக்கா துணை நிற்கிறது. சிறு கடன் மூலம் பெண்களின் தற்சார்பை வளர்க்க உதவுகிறது.

பொருளாதார வளர்ச்சி – வேலைவாய்ப்பு : உலக மயம் முரண்பட்ட புதிய வாழ்வை முன்வைக் கிறது. மாற்றங்கள் அச்சமூட்டுகின்றன. நவீனத் துவம் மூலம் நமது வாழ்வின் கட்டுப்பாடு, அரசி யல் சுதந்திரத்தை, அடையாளத்தை இழந்து விடு வோமோ என்ற பயம் எழுகிறது. நமது மரபு, குடும் பம், நம்பிக்கைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஜப்பான், கொரியா முதலிய நாடுகள் பொரு ளாதார வளர்ச்சியுடன் தமது பண்பாட்டையும் போற்றுகின்றன. மலேசியா, துபாய் முதலிய நாடுகள் புதுமையையும், அறிவையும் கொண்டு புதிய கண்டுபிடிப்புகளில் முன்னிற்கின்றன.

அரபு நாடுகள் தமது எண்ணெய் வளத்தால் பெரும் செல்வம் ஈட்டி வளர்ந்தன. ஆனால் கல்வியும், கண்டுபிடிப்புமே 21–ஆம் நூற்றாண்டின் செல்வம். பெரும்பாலான இஸ்லாமிய நாடுகள் இதில் பின்தங்கியுள்ளன. நான் இதை எனது நாட் டில் வலியுறுத்தி வருகிறேன். முன்னர் நாங்கள் எண்ணெய், எரிவாயு வளங்களைப் பெரிதாகக் கருதியதிலிருந்து மாறி, மாற்றுச் சிந்தனையை வளர்த்துள்ளோம்.

பொருளாதார வளர்ச்சி : ஆசிய, ஆப்பிரிக்க, இஸ்லாமிய நாடுகளுடன் அறிவியல் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான தூதுவர்களை உருவாக்கி, பல புதிய அறிவியல் வளர்ச்சி சார்ந்த பசுமை வேலை வாய்ப்புகளை, தூய நீர், அதிக விளைச்சல் வேளாண்மை ஆகியவற்றை உருவாக்குகிறோம்.

அரசுகள், குடிமக்கள், மதத் தலைவர்கள், அறிஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், வணிகர் கள் கூடி இஸ்லாமிய உலகின் வாழ்வுத் தரத்தை உயர்த்துவோம்.

போரையும், பகைமையையும் தொடங்குவது எளிது. நிறுத்துவது கடினம். பிறரைக் குறை கூறு வது எளிது. நம்மை அகத்தாய்வு செய்து கொள் வது கடினமானது. நேர்மையின் பாதை கடின மானதே. அனைத்து மதங்களின் சாரமான உண்மை ஒன்றே. பிறர் நமக்கு என்ன செய்ய வேண்டுமென விரும்புகிறோமோ, அதையே நாம் பிறருக்கும் செய்வோம்.


இது நாடு, இனம் கடந்த சத்திய வாக்கு. இது புதியதல்ல, கருப்பல்ல, வெள்ளையல்ல. இது கிறிஸ்தவமோ, இஸ்லாமோ, யூதமோ சார்ந்ததல்ல. இது நாகரீகத்தின் தொட்டிலில் உதித்தது. கோடானு கோடி மக்களின் இதயத்தில் ஒலிப்பது. இந்தச் சத்தியமே என்னை உங்கள் முன் நிறுத்தியுள்ளது.

உலக மக்கள் யாவரும் ஒற்றுமையுடனும், சமாதானத்துடனும் வாழ வேண்டும். அதற்காக இங்கு உழைப்பதே நமது கடமை. இறைவனின் சமாதானம் நம்மோடிருப்பதாக. நன்றி!"

– அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா
2009–இல் கெய்ரோவில் ஆற்றிய உரை.

சிறுகதை

ஜெகநாதன் வெங்கட்



ரௌத்திரம்

மலையாண்டிப்பட்டணம் முத்துசாமிக் கவுண்டர் தோட்டத்தில் நெல்நடவு முடிந்து அவசரம் அவசரமாக வீட்டுக்குப் புறப்பட்டாள் கிட்டம்மா. அவள் கையில் சாப்பாடு கொண்டுபோன தூக்குப்போசியும், இடுப்பில் கூடையும் இருந்தன.

வூட்ல பள்ளிக்கூடத்திலிருந்து வந்த பையனும் புள்ளையும் பசியோடு காத்துட்டு இருப்பாங்க... போய் ஏதாவது செஞ்சு கொடுக்கணும் என்று தன் நடையில் வேகத்தைக் கூட்டினாள்.

நினைக்க நினைக்க, கிட்டம்மாவுக்கு நெஞ்சு வலித்தது. தனக்கு மட்டும் ஏன் இப்படியொரு சபிக்கப்பட்ட வாழ்க்கை அமஞ்சிருக்கு? தான் கும்படற காமாச்சியம்மன் மேல அவளுக்குக் கோவம் கோவமா வந்தது. நா என்ன பாவம் பண்ணுன? எனக்கு மட்டும் ஏன் கையாலாகாத கணவனைக் கொடுத்திருக்க? நான் படற கஷ்டத்தைக் கொஞ்சம் ஏறெடுத்துத்தான் பாரேன்... என முறையிட்டாள். இத்தனைக்கும் காரணம் அவளுக்குன்னு வந்து வாச்ச புருசன் அய்யாசாமிதான் என்பது ஊருக்கே தெரியும்.

கல்யாணமான புதுசுல ஊரிலிருந்து ஏழெட்டு மைல் தொலைவிலிருந்த ஒரு மில்லுக்குப் போயிட்டு இருந்தான். அப்பவே கொஞ்சம் சோம்பேறிதான். அது வலிக்குது, இது வலிக்குது என்று மாசத்துல நாலஞ்சு நாள் மில்லுக்குப் போகாம மட்டம் போட்டுருவான். இப்படி அடிக்கடி மட்டம் போட்டு மட்டம் போட்டு ஒரு நாள் அவனை வேலையிலிருந்து நீக்கி அறிவிப்புக் கொடுத்தது நிர்வாகம்.

பத்துப் பதினஞ்சு நாள் ஊட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடந்தான் வேலை எதுக்கும் போகாம. பொண்டாட்டிக் கூலி வேலைக்குப் போய் சம்பாதிச்சுக் கொண்டு வந்து சாப்பாடு ஆக்கிப் போட்டா, மூணு வேளையும் வயிற்றை நிரப்பிக் கொண்டு, சும்மா இருந்து சுவை காண ஆரம்பித்துவிட்டான். வேலைக்குப் போவதை முற்றிலுமாக மறந்துவிட்டான்.

கிட்டம்மா மானஸ்தி. தன் வீட்டு விவகாரம் வெளியே தெரியக் கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருந்தாள். தப்பித் தவறி புருஷன் போடும் சத்தம் வெளியே கேட்டுப் பக்கத்து வீட்டுக்காரிகள் யாராவது விசாரித்தால், ஒண்ணுமில்லையே என்று மழுப்பிவிடுவாள்.

அவளால் தாள முடியாததெல்லாம் புருசனின் அடாவடித்தனமும் அட்டூழியமும்தான். போதாததற்கு அவனைப் போலவே சில திண்ணைப் பேச்சுக்காரர்கள் அவனுக்கு சிநேகிதர்கள் ஆகிவிட்டார்கள்.

ஆமாண்டி... நான் ரோசக்காரனாக்கும். நீ செஞ்ச வேலைக்கு உன்னைக் கொல பண்ணினாலும் பாவமில்ல. எத்தன நாளா அவனுக்கும் உனக்கும் தொடர்பு? இன்னும் என்னென்ன அவன் வாங்கித் தந்தான்? சொல்லுடி எம் பத்தினி" என்று வாய்க்கு வந்தபடி வார்த்தைகளை அள்ளி வீசினான். அதுமட்டுமல்ல...



கிட்டம்மா வேலைக்குப் போனதும் குளிச்சிட்டு வந்து காலை உணவு முடித்துக் கொண்டு நேரா சின்னப்ப ஆசாரி வீட்டுக்குப் போவான். வேலை வெட்டி இல்லாத அவனுடைய சிநேகிதர்கள் அவனுக்காகக் காத்திருப்பார்கள். அவர்களோடு சேர்ந்து, தான் வைத்திருக்கும் அஞ்சாறு ரூபாவைச் சீட்டு விளையாடித் தொலைப்பான்.

இப்படிப் பலவிதமான எண்ணங்கள் மனசுக்குள் குமிழியிட, மாகாளியம்மன் கோயில் தாண்டி ஊரின் தெற்குப்புறத்தில் இருந்த வீட்டுக்கு அவள் வந்து சேர்ந்தபொழுது இரவு மணி ஏழு.

எதிர்பார்த்தது போலவே பொண்ணும் பைய

னும் அம்மாவுக்காகக் காத்துக் கொண்டிருந்தார் கள். "அம்மா பசிக்குதம்மா..." என்று பையனும் பொண்ணும் புலம்ப, உடனே வறுத்த பொரியும், வரக் காப்பியும் குழந்தைகளுக்குச் செய்து கொடுத்தாள்.

பிறகு தன் பிள்ளைகளிடம், "உங்கப்பா எங்க போய்த் தொலஞ்சார்?" என்று எரிச்சலோடு கேட் டாள் கிட்டம்மா. "நாங்க பள்ளிக்கூடத்திலிருந்து வரும்பொழுதே வீடு பூட்டியிருந்தது. பக்கத்து வீட்டில் சாவியிருந்தது. அத வாங்கி வீட்டைத் திறந்தோம். அப்பா எங்க போனாருன்னு தெரி யலே..." என்று பொண்ணு சொன்னாள்.

எல்லாம் என் தலை எழுத்து. "ஆசாரியார் வீட்டில் சீட்டு ஆடிட்டு இருப்பார்" என்று புலம்பி னாள் கிட்டம்மா. "அம்மா... ராத்திரிக்கு என்ன சமைக்கப் போற...?" என்று ஆவலோடு கேட்டான் பையன். "உப்புமா செஞ்சு தரேன்" என்று வெங் காயம் உரிக்க ஆரம்பித்தாள்.

உப்புமா கிண்டியதும் குழந்தைகளை உட்கார வைத்துப் பரிமாறினாள். மணி ஒன்பதும் ஆயிற்று. புருஷன் இன்னும் வரக் காணோம். குழந்தைகள் படுத்துத் தூங்கிவிட்டார்கள். கிட்டம்மாள் தானும் உப்புமா சாப்பிட்டுவிட்டு அப்படியே சுவரில் சாய்ந்து உட்கார்ந்தவண்ணம் சற்றே கண்ணயர்ந் தாள். யாரோ பிடித்து உலுக்குவது போல உணர்ந்ததும் திடுக்கிட்டு எழுந்தாள்.

புருசன்காரன் கோபத்தோடு நின்றிருந்தான். "என்னடி இந்நேரத்துக்குத் தூக்கம்? எம்புட்டு நேரமா எழுப்பறது...?" எரிச்சலோடு கத்தினான்.

"நீ ஊர் சுத்தியிட்டு ராத்திரி பத்து மணிக்கு வருவ. அதுவரைக்கும் நா முழிச்சிட்டு இருக் கோணுமாக்கும்?" என்று பதிலுக்குக் கத்தினாள்.

"சரி... சாப்புட என்ன செஞ்சிருக்க...?" என்று கோபம் தணியாமல் கேட்டான். வடச்சட்டி யிலே உப்புமா இருக்குது. எடுத்துப் போட்டுச் சாப்புடு" என்றாள் கிட்டம்மா. "தினத்துக்கும் உப் புமா தானா?" என்று எரிந்து விழுந்தான் அவன்.

"நீ வெட்டிமுறிக்கிற வேலைக்கு இது போதும்... போட்டுச் சாப்பிடு" என்று காட்டமாகக் கூறிவிட்டுப் போய்ப் படுத்துக்கொண்டாள். புருசன்காரன் வேண்டா வெறுப்பாக உப்புமா சாப்பிட்டுவிட்டு, வீட்டின் வெளித் திண்ணையில் படுத்துக் கொண்டான்.

காலையில், எப்பவும் போல இன்றைக்கும் சகல ஆர்பாட்டங்களும் செய்த பின்னால் சாப் பிட்ட கையோடு, "எனக்குப் பத்து ரூவா கொடுத் துட்டுப் போ" என்று அதிகாரமாகக் கேட்டான் அய்யாசாமி.

"நீ சீட்டாடித் தொலைக்கிறதுக்கு நா காட்ல போயி நாள் முழுக்க வெயிலு, மழை பாக்காம ஒழைக்கோணுமாக்கும்? நீ நல்லாத் தின்னுட்டு சுகவாசியா ராஜா மாதிரி ஊர் சுத்துவ..." என்று கத்திவிட்டு வேக வேகமாக நடையைக் கட்டினாள்.

"போ போ... சாயங்காலம் வருவியல்ல... அப்ப வச்சிக்கிறேண்டி" என்று கறுவியபடி வீட் டைத் தாழிட்டுவிட்டு, ஆசாரியார் வீட்டுக்கு நடை யைக் கட்டினான் அய்யாசாமி.

ஆசாரியார் வீட்டை அடைந்தபொழுது அங்கே சீட்டாட்டம் மும்முரமாக நடந்து கொண்டி ருந்தது. அவனைப் பார்த்தும் பார்க்காத மாதிரி எல்லோரும் விளையாட்டில் ஈடுபட்டிருந்தார்கள். ஏற்கனவே எல்லோரிடமும் கடன் பட்டிருந்தான். யாரும் அவனைச் சீண்டாததால், ஓர் ஓரத்தில் உட் கார்ந்து ஆட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

"அய்யாசாமி, வீட்டுக்காரம்மாக்கிட்ட பணம் ஏதும் கறக்க முடியலியோ...?" என சிரித்தபடி வினவினார் ஆசாரியார்.

"சாப்பாடு வேளாவேளைக்குக் கிடைக்குதே, அதை நெனச்சு சந்தோசப்படு" என்று அய்யாசாமி யைக் கிண்டலடித்தார்... திருமலைசாமி நாயக்கர்.

இதைக் கேட்டுச் சிரித்த சண்முகம் செட்டியார், "அய்யாசாமி, நான் ஒரு வழி சொல் றன், கேளு. வூட்டுப் பொம்பளைகளுக்கு இப்பெல் லாம் கொழுப்பு ஏறிப்போச்சு. ரூவாக் கேட்டா கொடுக்க மாட்டாளுக. உங்க ஊட்ல தானியங்க ஏதாவது இருந்தா, சீத்தம்மா கடையில கொண்டு போய்ப் போட்டுட்டு பத்து இருபது பொரட்ட லாமில்லையா? நான் இன்னிக்கி அப்படித்தான் முப்பது ரூபாய் சுருட்டியிட்டு வந்து வெளை யாடிட்டு இருக்கறேன்..." என்று பெருமையோடு பீற்றிக் கொண்டார்.

அய்யாசாமிக்கு இது நல்ல யோசனையாகப் பட்டது. விடு,விடுவென்று எழுந்து வீட்டுக்குப் போனான். வீடு முச்சூடும் தேடி கடைசியில் ஒரு பெரிய தகர டப்பாவில் தினை இருப்பதைக் கண்டுபிடித்தான். ஒரு பையில் தினையை எடுத்துக் கொண்டுபோய் சீத்தம்மா கடையில் விற்றான். இருபது ரூபாய் கிடைத்தது. சந்தோச மாக ஆசாரியார் வீட்டுக்கு நடையைக் கட்டினான்.

சீட்டாட வீராவேசமாகக் களத்தில் குதித்த அய்யாசாமி, நான்கே ஆட்டங்களில் தலை வேறு முண்டம் வேறாகத் தூக்கி எறியப்பட்டான். இரு பது ரூபாயும் கொஞ்ச நேரத்தில் காலி! சற்று நேரம் மற்றவர்கள் ஆடுவதைப் பார்த்துவிட்டு கொஞ்சம் முன்னாடியே வீட்டுக்குப் புறப்பட்டான் அய்யாசாமி.

கொஞ்ச நேரத்தில் கிட்டம்மா வந்து சேர்ந்தாள். வரும் பொழுதே அவள் முகத்தில் கோபம் கொதித்துக் கொண்டிருந்தது. உள்ளே போய் தினை இருந்த பானையைத் திறந்து பார்த் தாள். நேராகப் புருசனுக்கு முன்னாடி போய் நின்றாள்.

''என்ன பண்ணின பாவி மனுசா?'' என்று வெடித்தாள் கிட்டம்மா. ''எனக்கு ஒண்ணும் தெரியாது'' என்று விட்டேத்தியாக பதில் கூறினான் அய்யாசாமி.

''எதுக்கு இப்படி புளுகறே? வார வழியில உன் வண்டவாளத்தை சீத்தம்மா புட்டுப்புட்டு வச்சா... பத்து நாளைய சாப்பாட்டுத் தெனய வித்து சீட்டாட்டத்துல கொண்டுபோய்த் தொலைச்சிட்டு வந்து நிக்கறியே... நீ எல்லா ஒர் ஆம்பளையா... தூ...'' என்று காறித் துப்பினாள் கிட்டம்மா.

கோபத்தில் எழுந்துவந்த அய்யாசாமி, ''என்னடி ரொம்பத்தான் நாக்கு நீளுது. திருடன் மாதிரி என்னய நடத்தற. உனக்கு கொஞ்சம் கொழுப்பு ஏறிப் போச்சு...'' என்றபடி கையை ஓங்கினான்.

''சொன்னாலும் சொல்லாட்டியும் நீ திருடன் தான். அதிலும் வெக்கமில்லாம சொந்த வீட்டுல திருடற...'' என்று வெறுப்பாகப் பேசிய கிட்டம்மாளின் கன்னத்தில் ஓர் அறை விழுந்தது. அடுத்த அறை விழுமுன்னரே அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''வேண்டாம்... அடிக்கறதை இனிமே நிறுத்திக்கோ. திருப்பி அடிக்க எனக்கு நேரமாகாது...''

''அந்த அளவுக்கு வந்திட்டயா? இரு இரு உன்னை பாத்துக்கறேண்டி'' என்று கறுவியபடி திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

மறுநாள் காலையில் உம்மென்று முகத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த அய்யாசாமியிடம் மிகுந்த கண்டிப்புடன், ''இதோ பாரு... ஒழுங்கு மரியாதையா சாப்பிட்டுட்டு ஊட்ல படுத்துக்கிட. அத உட்டுட்டு மீண்டும் சீட்டாடுவதற்குத் தெனய எடுத்துட்டுப் போய் கடையில வித்த... நான் பொல்லாதவ ஆயிடுவேன், தெரிஞ்சிக்கோ'' என்று எச்சரித்து விட்டுக் காட்டுக்குப் புறப்பட்டாள் கிட்டம்மா. கொஞ்ச நேரம் அப்படியே திண்ணையில் சாய்ந்தபடி அய்யாசாமி தூங்கிப் போனான்.

நடவு வேலை முடிந்து கிட்டம்மாள் அன்றைக்கு மத்தியானமே வீட்டுக்கு வந்துவிட்டாள். வழக்கத்திற்கு மாறாகக் கிட்டம்மாவின் காலிக் கூடையில் காகிதப் பொட்டலங்கள் இருந்தன. அதில் என்ன இருக்கிறது என்று தெரிந்துகொள்ள அய்யாசாமிக்கு ஆசை இருந்தாலும் அவளே சொல்லட்டும் என்று அவனுக்கு வீம்பு... கடைசியில் அவளே இறங்கி வந்து ''இந்தா... தீபாவளிக்கு உனக்கு வேட்டி, துண்டும், சர்ட் துணியும்... சீக்கிரமாக் கொண்டுபோய் டெய்லர் கிட்டக் கொடு. நோம்பி சமயத்துல கொண்டு போனா, தச்சுத் தரமாட்டான்...'' என்று நீட்டினாள்.

அதைச் சந்தோசமாக வாங்கிக் கொண்டான் அய்யாசாமி. இன்னும் சில பொட்டலங்கள் கூடையில் இருப்பதைப் பார்த்தவன் ''அது என்ன?'' என்று கேட்க, ''அது பையனுக்கும் பொண்ணுக்கும் ரெடிமேடு துணி'' என்று பிரித்துக் காட்டினாள். கடைசியில் ஒரு பிளாஸ்டிக் டப்பாவைத் திறந்து ஒரு ஜோடி வெள்ளிக் கால் கொலுசுகளை எடுத்து ''இது பொண்ணுக்கு...'' என்று காட்டினாள்.

சீட்டாடறதுக்குப் பத்து ரூவாக் கேட்டா கொடுக்க மாட்டேங்கறா. இவ்வளவும் வாங்கறதுக்கு இவளுக்கு ஏது பணம்? என்று ஆச்சரியப்பட்டான், அய்யாசாமி. ''இதெல்லாம் எப்படி வாங்குன?'' என்று ஒருவிதச் சந்தேகத்தோடு கேட்டான். ''எங்கூட கூலிக்கு வர்ற மங்கம்மாவோட புருஷன் சின்னதா ஒரு சீட்டு நடத்தறார். நாங்க கொஞ்சப் பேர் வாராவாரம் இருபது ரூவா சீட்டுப் போட்டுட்டு வர்றோம். போன வாரத்துல சீட்டு முடிஞ்சு பணம் கிடைச்சது. அந்தப் பணத்துக்குத்தான் இத்தனை துணியும் கால் கொலுசும் வாங்கியிட்டு வந்தேன்'' என்று விளக்கமாகச் சொன்னாள் கிட்டம்மா.

''எங்க போய் வாங்குன...?'' என்று அய்யாசாமி கேட்டான். ''நான் வாங்கல. எல்லாம் அந்த மங்கம்மா வீட்டுக்கார அண்ணன்தான் வாங்கியிட்டு வந்து தந்தார். பின்ன, எனக்கு நீயா வாங்கித் தரப் போற? உண்மையிலேயே அந்த அண்ணன் ரொம்ப நல்லவர்'' என்று புகழ்மாரி பொழிந்தாள்.

அப்பாவித்தனமா அவள் பேசியது, எதையும் குதர்க்கமாகவே எடுத்துக்கொள்ளும் அய்யாசாமிக்குத் தீனி போட்டது போலானது. ''உம் புருஷன் நான் மல மாதிரி உசுரோட இருக் கறன்... எங்கிட்ட பணத்தைக் குடுத்திருந்தா பொள்ளாச்சிக்குப் போய் துணிமணி, கொலுசு வாங்கியிட்டு வரமாட்டனாக்கும்?'' என்று எகத்தாளமாகச் சீறினான் அய்யாசாமி. ''ஆமா, பணத்தை உன்னை நம்பிக் குடுத்திருந்தா, ஆசாரி ஊட்ல சீட்டாடி தொலச்சிருப்ப'' என்று கிண்டலடித்தாள் கிட்டம்மா. அய்யாசாமிக்கு சுர்ரென்று கோபம் ஏறியது.

''சொந்தப் புருஷனை நம்ப மாட்ட. ஆனா மூணாவது ஒருத்தனை நம்பி, புருசங்காரன் எனக்குக் கூடத் தெரியாம சீட்டுப் போடுவ.... துணி மணி வாங்கியிட்டு வரச் சொல்லுவ... நான் என்னடி அப்படி இளப்பமாப் போயிட்டேன்?'' என்று கத்தினான்.

பேச்சு திசை மாறிப்போயிட்டிருப்பதை உணர்ந்த கிட்டம்மா ''உங்கிட்ட மனுசன் பேசுவானா... த்தூ'' என்று கூறிவிட்டு வீட்டுக்குள் போனாள். ஆனா அய்யாசாமி விடவில்லை. ''அதுக்குள்ளே எங்கடி போற? மொதல்ல இங்க வாடி. நா கேக்கற கேள்விக்குப் பதில் சொல்லிட்டுப் போ'' என்று கொக்கரித்தான். ''ஐயோ, எதுக்கு இப்போ இப்படிக் கத்தற? பக்கத்து

வீட்டுக்கு எல்லாம் கேக்கும். எம் மானமே போயி ரும். உனக்கெல்லாம் எதுக்குப் பொண்டாட்டி புள்ளைக?'' என்றாள் கிட்டம்மா.

அய்யாசாமிக்கு மசக் கோபம். அங்கு கிடந்த பித்தளைக் குண்டா ஒன்றை எடுத்து அவள் மீது வீசி எறிந்தான். மண்டையில் பட்டு ''ஐயோ, அம்மா...'' என்று கீழே உட்கார்ந்து கொண்டாள் கிட்டம்மா. தலையிலிருந்து ரத்தம் சொட்டியது. ஒரு பழைய துணி எடுத்து காயத்தின் மேல் அழுத்திப் பிடிக்க, ரத்தம் வருவது நின்றது. இதைப் பற்றியெல்லாம் அய்யாசாமி கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. ''உனக்கு அறிவு கெட் டுப் போச்சா,என்ன? கொல கூடப் பண்ணியிருவ போல?'' என்று சீறினாள் கிட்டம்மா.

''ஆமாண்டி... நான் ரோசக்காரனாக்கும். நீ செஞ்ச வேலைக்கு உன்னைக் கொல பண்ணினா லும் பாவமில்ல. எத்தன நாளா அவனுக்கும் உனக்கும் தொடர்பு? இன்னும் என்னென்ன அவன் வாங்கித் தந்தான்? சொல்லுடி எம் பத்தினி'' என்று வாய்க்கு வந்தபடி வார்த்தைகளை அள்ளி வீசினான். அதுமட்டுமல்ல... அவளுடைய தலைமுடியைப் பிடித்துப் பலமாக இழுத்தான்.

கிட்டம்மாளுக்கு ரௌத்திரம் பொங்கிப் பிரவ கித்தது. இதுநாள் வரை புருசன்காரனின் அடா வடித்தனங்களைப் பொறுத்துக்கொண்டு வாழ்ந்து வந்த கிட்டம்மாவால் தன்னை வேறு ஒருவனோடு தொடர்புபடுத்தி அவன் பேசியதை அவளால் மன்னிக்க முடியவில்லை. அதுவும் தன்னுடைய நடத்தையைச் சந்தேகித்து அவன் பேசியதை அவளால் தாங்க முடியவில்லை. வேக வேகமாக சமையலறைக்குள் புகுந்து அவசர அவசரமாக ஒரு சின்ன டப்பாவை எடுத்து வந்தாள்.

''ஏண்டா... என்னையா சந்தேகப்படற?'' என்று கத்தியபடி புருஷன் மீது பாய்ந்து, அவனைக் கீழே மல்லாக்கத் தள்ளி, டப்பாவை திறந்து, அதில் இருந்த மிளகாய்த் தூளை அவனுடைய இரண்டு கண்களிலும் அள்ளித் தூவினாள். எரிச்சல் பொறுக்கமாட்டாத அய்யாசாமி ''அய்யோ! என் னைக் கொல்றாளே'' என்று பலத்த சத்தம் போட் டான். ''அய்யோ! கண்ணு எரியுதே'' என்று அங் கும் இங்கும் குதித்தான். அதற்குள் பக்கத்து வீடுகளில் இருந்து ஆண்களும் பெண்களுமாக ஓடி வந்தனர்.

ஒரு பெண்மணி ஒரு பக்கெட்டில் தண்ணீர் கொண்டு வந்து அப்படியே அவன் கண்களின் மீது ஊற்றினாள், இன்னும் ஒருவர் செம்பு நிறையத் தண்ணீர் கொண்டுவர, அய்யாசாமி அதை வாங்கிக் கண்களைத் திரும்பத் திரும்பக் கழுவினான். ஒரு மணி நேரம் கழித்துத்தான் அய்யாசாமியால் கண்களைத் திறக்க முடிந்தது.

இத்தனைக்கும் கிட்டம்மா எதையும் கண்டு கொள்ளாமல் திண்ணையில் போய் பிரமை பிடித் தவள் போல் உட்கார்ந்து கொண்டாள். அங்கு வந்திருந்த பெண்கள் பலவாறாகப் பேசிக் கொண் டார்கள். ''ஒரு பொம்பள, இப்படி புருஷனைக் கேவலப்படுத்தினது மகாதப்பு'' என்றாள் கிழக் கால வீட்டு தனம்மா.

''இந்த மாதிரி ஒரு நாள் கண்டிப்பா நடக்கு மென எதிர்பார்த்தேன். எத்தனை நாளைக்கு ஒரு பொண்ணு அடி ஒத வாங்கியிட்டு பூமாதேவி மாதிரி மௌனம் காக்க முடியும்?'' என்று கிட்டம் மாவுக்குச் சார்பாகப் பேசினாள் கோடி வீட்டு குருவம்மாள். ''என்ன இருந்தாலும் ஒரு பொம் பளை இப்படி நடந்துகிட்டதை உலகம் ஒத்துக் காது'' என்று கோயில் வீட்டு பத்மா சொல்ல, ''பொல்லாத உலகம்... முன்னாடி போனா கடிக் கும்; பின்னாடி போனா உதைக்கும். என்னற ஒட்டு கிட்டம்மாவுக்குத்தான்'' என்று வெட்டிப் பேசினாள் பெட்டிக்கடை கருப்புச்சாமியின் சம்சாரம் தவமணி.

வெறகுக் கடை சீனிவாசன் சொன்னான், ''ஒரு பொம்பளைக்கு இவ்வளவு கொழுப்பு ஆகாது'' என்று. ''இனிமே ஆம்பளைக வாயப் பொத்திக்கிட்டு போகவேண்டியதுதான்'' என்று கிண்டலடித்தான் பூசாரி என்று அழைக்கப்படும் கந்தசாமி செட்டியார். ''ஆம்பிளைகளுக்கு இது ஒரு நல்ல பாடம்தான்'' என்று கிட்டம்மாவுக்கு ஆதரவு தெரிவித்தான் சுயமரியாதைப் பிரியன் ஆனந்தன். ''சீட்டாடித் தொலைக்கிற ஜன்மங்கள் திருந்தினால் சரி'' என்று வெறுப்புடன் பேசினான் தரகு மாணிக்கம்.

கொஞ்ச நேரத்தில் எல்லோரும் போய் விட் டார்கள். கிட்டம்மாள் எழுந்து சமையல் அறைக் குள் சென்றாள். அய்யாசாமியின் கண்களில் இப்போது எரிச்சல் வெகுவாக மட்டுப்பட்டிருந்தது. நேரத்திலேயே இரவு உணவைச் செய்து முடித் தாள் கிட்டம்மா. பள்ளிக்கூடத்திலிருந்து பிள்ளை கள் இருவரும் வந்தார்கள். வீட்டில் நடந்தது எதுவும் அவர்களுக்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டாள் கிட்டம்மா. ஒரு தட்டில் உணவு போட்டு ''அப்பாவுக்குக் கொடு'' என்று மகளிடம் கொடுத்தனுப்பினாள். நல்ல பசி போல. அய்யா சாமி சுவைத்துச் சாப்பிட்டான். எல்லோரும் சாப் பிட்டு முடித்ததும் பிள்ளைகள் தூங்கச் சென்றார் கள். அய்யாசாமியும் தூங்கிப் போனான். பாத்திரங் களை எல்லாம் கழுவி முடித்த பின்னால் படுக்கை யில் படுத்த கிட்டம்மாள் நீண்ட நேரம் அழுது கொண்டிருந்தாள். பிறகு அப்படியே தூங்கிப் போனாள்.

அய்யாசாமி அநியாயத்துக்குத் திருந்தி விட்டான். இப்பொழுதெல்லாம் அவன் சீட்டாட்டம் பக்கம் தலைவைத்துப் படுப்பதில்லை. பொண் டாட்டி புருஷன் நேராகிப் போனது ஊரார்க்கு ஆச்சர்யமாகவும் சந்தோசமாகவும் இருந்தது. அது மட்டுமல்ல, அய்யாசாமி கோமங்கலத்தில் இருந்த



ஒரு தென்னை நார் ஆலையில் காவலாளியாகப் பணிபுரிகிறான் என்பது கூடுதல் செய்தி. முதல் மாதச் சம்பளம் வாங்கியவுடன் மகனுக்கும் பொண் ணுக்கும் தலா இரண்டு ரூபாய் கொடுத்துவிட்டு மீதியைக் கிட்டம்மாளிடம் கொடுத்தபொழுது அவள் அடைந்த சந்தோசத்தை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது.

இன்றைக்கும் கூட அந்தக் கிராமத்தில் சில மனைவிமார்கள், அடக்கியாள நினைக்கும் கண வன்மார்களை "உங்களுக்கெல்லாம் கிட்டம்மக்கா மாதிரி பொண்டாட்டி வாய்ச்சிருக்கணும்" என மிரட்டுவதாகத் தகவல்!

●

தவறில்லை...





கனவு
காண்பதில் தவறில்லை!
செயலில்
இறங்காமல் இருப்பதே தவறு!

தோல்வியைத்
தழுவுவதில் தவறில்லை!
தோற்றுவிட்டோம் என
முடங்குவதே தவறு!

தவறிச்
செய்வதில் தவறில்லை!
திருந்தாமல்
இருப்பதே தவறு!

மாற்றுச் சிந்தனை
முளைப்பதில் தவறில்லை!
உண்மையை
உணர மறுப்பதே தவறு!

புதுமையை
ஏற்பதில் தவறில்லை!
பழமையைப்
போற்ற மறுப்பதே தவறு!

வாய்ப்பை
நழுவவிடுவதில் தவறில்லை!
வார்த்தையை
நழுவவிடுவதே தவறு!

விளைச்சலை
எதிர்பார்ப்பதில் தவறில்லை!
விதையிட
விரும்பாமலிருப்பதே தவறு!

உயர்வை
விரும்புவதில் தவறில்லை!
உழைக்கத்
தயங்குவதே தவறு!

'சிந்தனைக் கவிஞர்'
டாக்டர் கவிதாசன்



சக்தி பைனான்ஸ் நிறுவனம்

கொரோனா நோயாளிகளுக்குப் போர்வை வழங்கிய விழா!

கொரோனாத் தொற்றுநோயால் (கோவிட்–19) பாதிக்கப்பட்டு கோவை அரசு மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்று வருபவர்களுக்கு சக்தி பைனான்ஸ் லிமிடெட் ஊழியர்கள் தங்கள் ஒரு நாள் ஊதியத்தை வழங்கினார்கள். அத்தொகையில் வாங்கப்பட்ட 3500 போர்வைகளும், துண்டுகளும் அந்நோயாளிகளுக்கு வழங்கப்பட்டன.

கொரோனாத் தொற்றுநோயாளிகளுக்கு இந்த நிவாரணப் பொருள்கள் வழங்கும் நிகழ்ச்சி 31.08.2020 அன்று கோவை சக்தி சுகர்ஸ் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்திய ஜவுளித் தொழில்துறைக் கூட்டமைப்பின் தலைவர் திரு. தரணிபதி ராஜ்குமார், சக்தி பைனான்ஸ் நிர்வாக இயக்குநர் திரு. ம. பாலசுப்பிரமணியம் அவர்களின் புதல்வர் திரு. விஷ்ணு ஆகியோர் நிவாரணப் பொருள்களை வழங்க, மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ராமதுரை மாணிக்கம், கோவை வடக்குத் தாசில்தார் திரு. மகேஷ் ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள். ●



கவிதாசனின் ‘வெற்றியே வா...!’ நூல் வெளியீடு!

“சொல்லின் செல்வர்” சிந்தனைக் கவிஞர் டாக்டர் கவிதாசன் பிறந்த நாளை முன்னிட்டு தனது 75–வது படைப்பாகிய “வெற்றியே வா...!” என்ற புதிய நூலினை 29.08.2020 அன்று கோவை இந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் திருமதி சரஸ்வதி கண்ணையன் அவர்கள் வெளியிட, முதல் பிரதியை கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். சித்ரா அவர்கள் பெற்றுக் கொண்டார். அருகில் இந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் செயலர் திருமதி பிரியா சதீஷ் பிரபு, முதன்மைச் செயல் அதிகாரி திரு. கே. கருணாகரன், இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஏ. பொன்னுசாமி மற்றும் நிர்வாக அதிகாரி திரு. சங்கர் ஆகியோர் உள்ளனர். ●

எனக்கு இறக்கை முளைத்தால்...

சின்னஞ்சிறு வண்ணச் சிட்டுக்குருவி யாவேன்
வானில் பறந்து திரிந்து உள்ளம் பரவசமாவேன்!

சிறிய உருவம், சாம்பல் நிறம்
மிளகுக் கண்கள், தாழப் பறக்கும் திறம்
நான் மிகச்சிறியவன்; ஆயினும் பகர்வதோ
நானிலம் போற்றும் சத்திய வார்த்தை!

நான் விதைப்பதுமில்லை, அறுப்பது மில்லை
பிறர்க் குரியதைக் கூட்டில் ஒளிப்பதுமில்லை!

உண்பதினும் இனிது ஊட்டுதல்
கற்றலினும் இனிது கற்பித்தல்
வாழ்வதினும் இனிது வாழ்வித்தல்!

தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும்
வாழ்வே பொருள் நிறைந்தது;
புகழுக்குரியது!

நேற்று என்பது உடைந்த பானை
நாளை என்பது மதில்மேல் பூனை
இன்று என்பது கரத்தினில் வீணை!

இன்றைய கடமையை இனிதே ஆற்றுங்கள்
பலனைப் படைத்தவன்
பொற்பாதத்தில் அளியுங்கள்
சிட்டுக் குருவியைப்போல நீங்களும் வாழ்வில்
கவலைவிட்டுப் பூரண விடுதலை பெறலாம்!

'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என
அப்பர் பெருமான் அருளியதற்கு ஒப்ப
இனிதே வாழலாம் இப்புவியின் மீது!




தமிழ்மணி

கட்டுரை

யானைகளைக் கொல்லும் ‘அவுட்டுக்காய்’

இரா.வேணுகோபாலகிருஷ்ணன்



சென்ற செப்டம்பர் 9 – ஆம் தேதியன்று கோவை, ஆனைகட்டிப் பகுதியில் 30 வயது மதிக்கத்தக்க மக்னா யானை ஒன்று உயிரிழந்தது. அந்த யானை சில நாட்களாக ‘அவுட்காய்’ தின்று வாய் வெடித்த நிலையில் காயத்துடன் சுற்றித் திரிந்தது. அதற்கு வனத்துறையினர் மருந்துடன் கூடிய உணவு கொடுத்தும், அந்த உணவை உட்கொள்ள முடியாத நிலையில் பட்டினியால் உயிரிழந்துள்ளது.



இதேபோல, சில மாதங்களுக்கு முன்னர் கேரளத்தில் ஒரு யானை ‘பன்னிப் படக்கம்’ என்ற வெடிமருந்தை உட்கொண்டதால் வாய் வெடித்து உயிரிழந்தது. இந்தப் பன்னிப்படக்கம் என்பதும் ‘அவுட் காய்’ போன்றதாகும்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் சென்ற ஆகஸ்டு மாதம் மாடு ஒன்று அவுட்காயைக் கடித்ததில் வாய் வெடித்து உயிரிழந்தது. அதற்கு முன் சென்ற ஏப்ரல் மாதம் சத்தியமங்கலம் பகுதியில் ஒரு மாடு அவுட்காயைக் கடித்து வாய் வெடித்து உயிரிழந்தது. இதற்குக் காரணமானவர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.



சில மாதங்களுக்கு முன்னர் கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் பகுதியில் சில ஆடுகள் உயிரிழந்தன. இதற்கும் அவுட் காய் தான் காரணம் எனச் சொல்லப்பட்டது.

இந்த ‘அவுட் காய்’ என்பது என்ன காய்? இது ஏதேனும் வெடிக்கின்ற காயா? நச்சுக் காயா? என்று இதைப்பற்றித் தெரியாதவர்கள் புரியாமல் யோசிக்கலாம். இது காய் அல்ல, இது ஒரு நாட்டு வெடிகுண்டு!


அவுட்டுக்காயால் வாய் வெடித்து இறந்த யானை

இந்த நாட்டு வெடிகுண்டு யானைகளைக் கொல்லவோ, ஆடு – மாடுகளைக் கொல்லவோ தயார் செய்யப்படுவதல்ல. மாறாக, காட்டுப் பன்றிகளையும், மான் முதலிய விலங்குகளையும் கொல்வதற்காகச் சட்ட விரோதமாகச் செய்யப்படும் வெடி குண்டு ஆகும். ஆனால், எதிர்பாராத வகையில் மாடுகளும், ஆடுகளும், யானைகளும் இவற்றை அறியாமல் தின்று உயிரிழக்கின்றன.

இதனைத் தின்னும் விலங்கு

இறந்து போய்விடுவதால் 'அவுட்' (Out) என்னும் ஆங்கிலச் சொல்லைக் கொண்டும், இது காய் போல இருப்பதாலும், காய், பழம் முதலியவற்றில் திணித்து வைக்கப்படுவதாலும் இரு சொற்களை இணைத்து 'அவுட் காய்' என்ற பெயர் வைக்கப்பட்டிருக்கலாம்.

இந்த அவுட் காய் எனப்படும் நாட்டு வெடிகுண்டு கோவை, ஈரோடு மாவட்ட மலையோர விளைநிலப் பகுதிகளில் நெடுங்காலமாக வழக்கில் உள்ளது என்றாலும், காட்டுப் பன்றிகள் உள்ளிட்ட விலங்குகளைக் கொல்வதற்கு அரசு தடை விதித்த பின்னர் பல காலம் அதிக அளவில் பயன்படுத்தப்படாமல் இருந்தது. ஆனால், தற்போது மீண்டும் சட்டவிரோதமாகப் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

அவுட் காய் எப்படிச் செய்யப்படுகிறது? மிக எளிதில் தீப்பற்றிக் கொள்ளும் வெடி மருந்துடன் வெண்மையாக உள்ள வெங்கக் கற்கள் சிலவற்றை வெட்டுப் பாக்கு அளவிற்குச் சேர்த்து அல்லது அக்கற்களுக்குப் பதிலாக ஈயத் துண்டுகளோ, இரும்புத் துண்டுகளோ, கண்ணாடிச் சில்லுகளோ சேர்த்துக் காகிதத்தில் வைத்து மடித்து, அப்பொட்டலத்தின்மீது மாஞ்சா நூலைச் சுற்றிப் பந்து போல் செய்து, பசை போட்டு ஒட்டிவிடுவார்கள்.

இப்போது வெடிகுண்டு தயார். ஆனால், இதனை எல்லோரும் செய்ய முடியாதாம். இதில் நன்கு பயிற்சி பெற்றவர்கள் செய்யாவிடில், செய்யும்போது அவர்களுக்கே ஆபத்தாய் முடிந்துவிடுமாம்.

முன்னர் நரிக்குறவர் வகுப்பார் குள்ளநரிகளைப் பிடிப்பதற்காக இம்மாதிரி நாட்டு வெடிகுண்டுகளை வைத்துப் பிடிப்பார்கள். குள்ளநரிகளும் நாட்டு வெடிகுண்டுகளைக் கடித்து வாய் வெடித்து இறந்துவிடும். பின் அவற்றைக் கைப்பற்றி அவர்கள் இறைச்சியை எடுத்துக் கொள்வார்கள்.

இந்த நாட்டு வெடிகுண்டினைப் பன்றியோ, பிற விலங்கோ எப்படித் தின்னும்? அதற்காகத்தான் அந்த வெடிகுண்டினை ஆடு, மாடு ஆகியவற்றின் குடலுக்குள் வைத்துப் பன்றிகள் வரும் பகுதியில் வைக்கிறார்கள். அல்லது அன்னாசிப்பழத்திற்குள்ளும் வைக்கிறார்கள். இந்த அன்னாசிப்பழத்து வாசனையால்தான் யானைகள் இந்த வெடிகுண்டை அறியாமல் தின்று உயிரிழக்கின்றன. மேலும் பன்றிகளைக் கவரும் வறுத்த நிலக்கடலையை நயமாகப் பிசைந்தும், துர்வாசம் கொண்ட கருவாடு, அழுகிய குடல் முதலியவற்றைச் சேர்த்தும் வைக்கிறார்கள்.

இந்த வாடையால் கவரப்படும் பன்றிகள் அவற்றைக் கடித்ததும் வெடி மருந்தால் அவற்றின் வாய் வெடித்துச் சிதறிவிடும். அதனால் உயிரிழந்துவிட்டால் சிக்கல் இல்லை. உயிரோடு இருந்தால் தாளமுடியாத வலியால் எங்கேனும் சென்று படுத்துக்கொண்டு துன்பப்படும்.



அவுட்டுக்காய் தின்று வாய்வெடித்த மாடு

இதனை அப்போதோ அல்லது இரவு விடிந்த பின்னரோ அதன் ரத்தம் சிந்தியிருக்கும் சுவடினைப் பின்பற்றிச் சென்று படுத்துக் கிடக்கும் நிலையில் பிடித்துக் கொன்றுவிடுவார்கள். சில நேரங்களில் பாதிக்கப்பட்ட பன்றிகள் அப்பகுதிக்கு வரும் மனிதர்களையோ, ஆடு, மாடுகளையோ தாக்கும் அபாயமும் உண்டு.

பன்றிகளை இப்படி ஏன் கொல்கிறார்கள்? இரண்டு காரணங்களுக்காகக் கொல்கிறார்கள். ஒன்று, வேளாண் நிலங்களில் கரும்பு, நிலக்கடலை, வாழை, காய்கறிகளைத் தின்றும், அழித்தும் வேளாண்மையைக் கெடுக்கின்றன என்பதற்காக. இரண்டாவதாக, இறைச்சிக்காகக் கொல்கிறார் கள். இரண்டுமே சட்டத்திற்கு எதிரான செயல்கள்தான்.

முன்னர் ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலேயே, மலையடிவாரப் பகுதி களில் விளை நிலங்களை வைத்திருப் போருக்கு வேளாண்மையை அழிக்கும் காட்டுப்பன்றிகளை வேட்டையாடு வதற்கு விவசாயிகளுக்குத் துப்பாக்கி உரிமம் வழங்கப்பட்டது. இது விடு தலையடைந்த பிறகும் தொடர்ந்தது.

பின்னர் 1972–ஆம் ஆண்டின் இந்திய வனவிலங்குப் பாதுகாப்புச் சட் டம், காட்டுப்பன்றிகளை வேட்டை யாடுதலைத் தடை செய்தது. பன் னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத் தின் பட்டியலில் இது காப்புநிலை குறைந்த இனமாக 2008–இல் குறிப் பிடப்பட்டது. இதனால் காட்டுப்பன்றி களை வேட்டையாடத் தடை உரு வானது.

மேலும், துப்பாக்கி வைத்திருப்பவர்



களும் துப்பாக்கித் தோட்டாக்களை முன்பு போலத் தற்போது எளிதாகப் பெற முடியாது. எனவே துப்பாக்கி கொண்டு வேட்டையாட முடியாது. இதனால்தான் இம்மாதிரி அவுட்காய் என்னும் நாட்டு வெடிகுண்டு கொண்டு பன்றிகளைக் கொல்கிறார்கள்.

பன்றிகளுக்காக என இந்த வெடி குண்டு வைக்கப்பட்டாலும், அது எதிர் பாராத நிலையில் ஆடு, மாடு, யானை, நாய் எனப் பிற விலங்குகளின் உயிர் களைப் பறிக்கிறது. இது மனிதர்களுக் கும் ஆபத்தானதுதான். வைக்கப்பட்டி ருப்பது தெரியாமல் மனிதர்கள் மிதித் தாலும் வெடித்துச் சிதறலாம்.

காட்டுப் பன்றிகள் ஒரே சமயத்தில் 4 முதல் 8 குட்டிகள் போடுபவை. எல் லாக் காலங்களிலும் இனப்பெருக்கம் செய்யும். கரு உருவாகி 115 நாட்களில் குட்டிகளை ஈன்றுவிடும். ஆக, ஆண் டிற்கு இரு முறை குட்டிகள் போட் டாலே, ஏறத்தாழ 16 குட்டிகளை ஒரு பன்றி ஈன்றுவிடும். ஓராண்டில் அந்தக் குட்டிகள் மேலும் குட்டிகளை ஈன்றால் அவற்றின் எண்ணிக்கை ஏராளமாகப் பெருகும்.

இப்படிப் பன்றிகளின் பெருக்கம் ஏற்படுவதற்கேற்பக் காடுகளின் பரப்புப் பெரிதாக இல்லை. பெருமளவில் காடு கள் அழிக்கப்பட்டிருப்பதாலும், உணவுப் பற்றாக்குறையாலும் பன்றிகள் உணவுக்காக விளைநிலங்களுக்குள் வந்து பயிர்களில் சேதங்களை விளை விக்கின்றன.

பொதுவாகக் காட்டு விலங்குகளை இறைச்சிக்காக மட்டுமின்றி, அவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவும் வேட் டையாடும் வழக்கம் நம் நாட்டில் இருந் ததைப் பண்டைய புராணங்களும், இலக்கியங்களும், வாய்மொழிக் கதை களும் எடுத்துக் காட்டுகின்றன.

அரசர்கள், படைவீரர்களுடன் சேர்ந்து வேட்டைக்குச் சென்று விலங்கு களைக் கொன்று அவற்றின் பெருக்கத் தைக் கட்டுப்படுத்தியதைப் பல கதை களில் நாம் கேட்டும், படித்துமிருக் கிறோம். ஆங்கிலேய ஆட்சிக் காலத் திலும் அரசின் உயர் பதவியில் இருந் தவர்களும், ஜமீன்தார்களும், சிற்றரசர் களும் புலி, மான் முதலிய விலங்குகளை வேட்டையாடுவது வழக்கமாக இருந் துள்ளது.

இப்போது அத்தகைய நிலை இல்லை. காட்டுப்பன்றிகளின் பெருக் கத்தைக் கட்டுப்படுத்த முன்னர் இருந்த தி.மு.க. அரசு அவற்றை வேளாண் நிலங்களில் வேட்டையாட அனுமதிக்க வேண்டி மத்திய அரசிடம் கோரிக்கை வைத்தது. ஆனால் அது நிறைவேற வில்லை.

காட்டு விலங்குகளில் யானைகள் காடுகளின் வளர்ச்சிக்குப் பெரும் துணை செய்பவை. உலகிலேயே மிகப்பெரிய விலங்கான யானை நம் நாட்டில் பெரிய அளவில் இருப்பது நமக்குக் கிடைத்த வரம். ஏனெனில், யானைகள் இல்லாத நாடுகள் பல

உள்ளன. யானைகள் மூலம் காடுகள் வளர்ச்சி பெற்று இயற்கை வளமும், தூய காற்றும், மழை வளமும் நமக்குக் கிடைக்கின்றன.

ஆனால் யானைகள் இம்மாதிரி நாட்டு வெடிகுண்டுகளால் கொல்லப் படுவது கொடூரமானது. காட்டு விலங் குகள் மட்டுமன்றி, நாம் வளர்க்கும் வீட்டு விலங்குகளான ஆடுகளும், மாடு களும், நாய்களும் இந்த வெடிகுண்டு களை என்னவென்றே அறியாமல் கடித்து உயிரிழப்பது பரிதாபமானது.

யானைகள் இவ்வாறு வெடிகுண்டு களால் இறப்பது மட்டுமின்றி, மின்வேலி களால் உயிரிழக்கும் நிகழ்வுகளும் அவ் வப்போது ஏற்படுகின்றன. மின்வேலி கள் என்பவை சூரிய ஆற்றலாலும், பேட்டரிகளாலும் இயக்கப்படுகின்றன. இவற்றில் உரசும் யானைகள், பன்றிகள் முதலியவை மின் அதிர்வுக்கு உள்ளாகிப் பின்வாங்கிச் செல்லும்.



அவுட்டுக்காய் வைத்ததற்காகக் கைது செய்யப்பட்ட மூவர்

ஆனால், சிலர் வேண்டுமென்றே இந்த மின்வேலிக் கம்பிகளில் உயர் அழுத்த மின்சாரத்தைப் பாய்ச்சுவதால் தான் அறியாமல் வந்து சிக்கிக் கொள் ளும் யானைகளும், பன்றிகளும் மின் சாரம் தாக்கி உயிரிழக்கின்றன. பன்றி களின் இறைச்சிக்காகக்கூட இச் செயலைச் செய்யலாம். இது விலங்கு களுக்கு மட்டுமின்றி, மனிதர்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும் என்பதை உணர வேண்டும்.

இத்தகைய செயல்களை எதிர்கொள் ளும் அரசுக்குப் பல்வேறு பிரச்சனை கள் உள்ளன. முதலாவதாகக் காடுகள் போதாமை. காடுகளின் பரப்பளவு மனிதர்களின் ஆக்கிரமிப்பால் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. இருக்கின்ற காடுகளில் பெருகி வரும் இந்தக் காட்டு விலங்குகளுக்கான உணவுப் பற்றாக்குறையும் உள்ளது.

அரசு இப்பிரச்சனைகளுக்குச் சில தீர்வுகளைக் காண வேண்டியுள்ளது. முதலில் மலைகள் மற்றும் அரசின் ஒதுக்கப்பட்ட காடுகளின் அருகில் சட்டத்திற்குப் புறம்பாகக் கட்டப்படும் பெரும் கட்டடங்கள், நிறுவனங்களை விருப்பு, வெறுப்பின்றி அகற்ற வேண் டும். காடுகளின் பரப்பளவை அதி கரிக்கப் பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

காடுகளிலிருந்து வெளியே வரும் யானைகளைத் தடுக்க அமைக்கப்படும் அகழிகள் மழைக்காலத்தில் தூர்ந்து போய்விடுகின்றன. அவற்றை அவ்வப் போது சீரமைக்க வேண்டும். மலைக் காடுகளை ஒட்டி அமைக்கப்படும் சூரிய ஆற்றல் மின்வேலிகளில் செடிகொடிகள் படர்ந்து அவை செயல்படாமல் போவ தைத் தடுக்க, அவற்றை முறையாகப் பரா மரிக்க வேண்டும்.

சொட்டு நீர்ப் பாசனத்திற்கு மானி யங்கள் அளிக்கப்படுவது போன்று, மலைப்பகுதி மற்றும் காடுகளை ஒட்டி வேளாண்மை செய்யும் விவசாயி களுக்குச் சூரிய ஆற்றல் மின்வேலிகள் அமைப்பதற்கும் 100 விழுக்காடு மானி யம் அளிக்க வேண்டும்.

அரசின் வனத்துறையில் உள்ள ஆட்கள் பற்றாக்குறையைத் தீர்ப்ப தோடு, கூடுதல் பணியாளர்களைப் பணியமர்த்திக் காடுகளையும், காட்டு விலங்குகளையும் காத்திட வேண்டும்.

இம்மாதிரி நாட்டு வெடிகுண்டுகள் செய்து, காட்டு விலங்குகளைக் கொல் வோரைக் கண்டுபிடித்துக் கைது செய்து, சட்டப்படியான தண்டனைகள் பெற்றுத்தர வேண்டும். இக்குற்றங்களுக் கான தண்டனைகளும் கடுமையாக்கப் பட வேண்டும்.

உலகம் என்பது மனிதர்களுக்கு மட் டுமல்ல, அனைத்து உயிரினங்களுக்கும் தான் என்று இயற்கை ஆர்வலர்களும், சிந்தனையாளர்களும் கூறிவருவதை மதித்துப் பின்பற்றினால், உலகம் மிக அழகாகவும், நல்ல சுற்றுச்சூழலோடும் இருந்து, அடுத்து வரும் தலைமுறை களையும் வாழ வைக்கும். ●



LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கண்டிஷ்னர்,
வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக
பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.
Easy Finance Options BAJAJ Finance
Exchange offer
Gift Coupons Available
*Free gift with every purchase
*Free delivery with in city Limits
Open on Sundays
வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!
NM
LG
SAMSUNG
SONY
PHILIPS
ONIDA
Godrej
Whirlpool
SIEMENS
IFB
VIDEOCON
Prestige
ELGI ULTRA
Preethi
V-GUARD
BOSCH
micromax nothing like anything
VOLTAS LIMITED
Butterfly®
TATA Sky
CG Crompton Greaves
USHA
HAVELLS
BPL EMERGENCY LIGHT
Preethi INDUCTION COOK TOP
EUREKA FORBES Your friend for life
CASCADE
VENUS WATER HEATER
*For purchase above RS.8000/- condition apply
D by sr printers 9843110277
NM
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2018-20

Date of Publication
28.9.2020

Regd.No.CB/016/2018-20
OM SAKTHI - OCTOBER - 2020